

அமுதசுரபி

நவம்பர் '92 விலை ரூ.5

"தாங்க்யூ காளி, தாங்க்யூ அம்மா!"

காளி

காப்பர்-பாட்டம்

ஸ்டெயின்லெஸ் ஸ்டீல் சமையல் பாத்திரம்.

- குறைந்த நேரம், எரிபொருள் சிக்கனம். அத்துடன் சுவை நிறைந்த சத்தான உணவு.
- உயர்தர கனமான சேலம் ஸ்டெயின்லெஸ் ஸ்டீலினால் ஆனது.
- எலெக்ட்ரோ டெபாஸிஷன் முறையை கையாண்டு உலகத்தரம் வாய்ந்த விஞ்ஞான தொழில்நுட்பத்துடன் தயாரிக்கப்பட்டது.
- சிறந்த தரமான பொருட்களுக்கான இந்திய அரசின் தேசிய விருதினைப் பெற்றது.

• ஸாஸ்பான் • கடாய் • தோசைக்கல் • டோப்ஸ்
• ஸ்கில்லெட்ஸ் • ஸ்டீம் குக்கர் (பெடீட் 200)

ஐ.எஸ்.ஐ.
முத்திரையுள்ள
காளியின்
உயர்தரத்தினால்
சட்டுன்னு சமையல்
ரெடியாச்சே.
மலைபோல வந்த
டென்ஷன்
மறைந்தே போச்சே.

அம்மா
கொடுத்த
அட்வைஸ்
படுஜோர்!

IS 4536
ஐ.எஸ்.ஐ.
முத்திரையுடன் கூடிய
ஒரே பிராண்ட்

காளி — ஒரிஜினல் காப்பர்-பாட்டம்

kali BRAND



விற்பனை ஏஜெண்ட் : ஸ்ரீவித்யா ஏஜென்ஸீஸ், கும்பேஸ்வரர் சன்னதி, கும்பகோணம் 612 001. போன்: 20136.
சில்லறை விற்பனை நிலையம்: ஸ்ரீ எம்.வி.எம். ஸ்டோர்ஸ் (காளி பிராண்ட்), கும்பேஸ்வரர் சன்னதி,
கும்பகோணம் 612 001. போன்: 20136.

அமுதசுரபி

எங்கள் தமிழ் மொழி
எங்கள் தமிழ் மொழி
என்றென்றும் வாழியவே
—பாரதியார்

★ நவம்பர் 1992 ★ மலர் : 45 ★ இதழ் : 7 ★ ஆங்கிரஸ கார்த்திகை
★ விலை : ரு. 5 ★ ஆண்டுச் சந்தா : ரு 60 ★ பதிப்பாளர் : ஏ.வி.எஸ். ராஜா.
★ கௌரவ இலக்கிய ஆலோசகர் : என்.வி. சுப்பிரமணியன் ஐ.ஆர்.டி.எஸ்.
★ ஆசிரியர் கலைமாமணி விக்கிரமன் ★ இதழ் ஆஃப்செட் அமைப்பு : சிவகுமார். ● மேலட்டை வண்ணப்படம் : யூ. ராஜகோபால்

இந்த இதழ் அன்பர்களிடம் கிடைக்கும்போது, அமுதசுரபி தீபாவளி மலரும் கிடைத்திருக்கும்.

தீபாவளிமலரை அமுதசுரபி வாசகர்கள் ஒவ்வொருவருமே வாங்குவது என்பது இயலாத காரியம். நூறு ரூபாய்க்குமேல் அடக்க விலை கொண்ட மலரை, 35 ரூபாய்க்கு விற்பது என்பது மிகவும் இடர்ப்பாடானது என்பதையும் அன்பர்கள் அறிவார்கள். மலர்ரை விலை கொடுத்து வாங்கும் பேறு பெற்றவர்கள் விலை கொடுத்து வாங்காதவர்களுக்குப் படிக்கக் கொடுக்கவேண்டும்.

மற்றொரு செய்தி. மூவாயிரம் ரூபாய் ஸ்ரீராம் டிரஸ்டில் முதலீடு செய்தால் ஆறு ஆண்டுகளுக்கு 'அமுதசுரபி' இதழும், தீபாவளி மலரும் அன்பளிப்பாகக் கிடைக்கும். மூவாயிரம் ரூபாயும் ஆறாயிரம் ரூபாயாகத் திரும்பப் பெறலாம்.

ஏழு ஆண்டுகளுக்கு முன்பு இப்படி ஒரு திட்டம். அதில் ஆயிரம் ரூபாய் முதலீடு செய்தவர்கள் ஏழு ஆண்டுக்காலம் 'அமுதசுரபி'யை இலவசமாகத் (தீபாவளிமலர் உட்பட) பெற்றவர்கள், அவர்கள் முதலீடு செய்தபோது மலர் விலை ரூ. 15. பிறகு முப்பது, முப்பத்தைந்து என்று விலை உயர்ந்தும் அவர்கள் கூடுதல் தொகை' கொடுக்காமல் பெற்றுக் கொண்டார்கள். அதனால் அப்போதைக்கு இப்போதே சொல்லி வைக்கிறோம்.

இந்த ஆண்டுத் தீபாவளி மலர் பரிசளிக்கச் சிறந்தது என்பதை மட்டுமே சொல்ல முடியும்.

யூனிட் வழங்கும் பெண்களுக்கான புதிய திட்டம்

யூனிட் டிரஸ்ட் ஆஃப் இந்தியா 'ராஜலட்சுமி யூனிட் ஸ்கீம்' என்னும் புதிய திட்டத்தைப் பெண் குழந்தைகளுக்காக அறிமுகப்படுத்தியுள்ளது. 1 முதல் 5 வயதுக்குட்பட்ட பெண் குழந்தைகளுக்காகக் குறைந்த பட்சம் ரூபாய் 1000 செலுத்தி இத் திட்டத்தில் சேர்ந்தால் 20 ஆண்டுகளில் 21 மடங்காகத் திரும்ப அளிக்கிறது. டிசம்பர் 92க்குள் இத் திட்டத்தில் சேர்பவர்களுக்கு விசேஷ ஊக்கத் தொகையும் வழங்கப்படுகிறது.

கங்காபுரிக் காவலன்

27. ராஜராஜ விஜயம்

பேரரசர் இராசராசன் நோய்வாய்ப் பட்டுப் படுத்த படுக்கையாகக் கிடக்கும் செய்தி தஞ்சைமாநகர் எங்கும் பரவியது. சுற்றுப்புறம் பட்டி தொட்டிகளெல்லாம் பரவியது.

இன்னும் அந்தச் செய்தி உறையூரை எட்டியது.

நாகைப்பட்டினத்தைச் சென்றடைந்தது.

காஞ்சியினுள் பலரைக் கலக்கச் செய்தது.

வடக்கே திருக்காளத்தியிலும் திரு வேங்கட மலையில் உள்ளவர்களும் செய்தி கேட்டுத் திகைத்தனர். கருவூரில் உள்ள வர்கள் கலங்கினர். திருவஞ்சைக் களத் திற்கும் அந்தச் செய்தி கிடைத்தபோது அவர்கள் நம்பவில்லை.

மதுரையில் அந்தச் செய்தி சோழர்ப் பிரதிநிதிகளைத் துயர் அடையச் செய்தது. பாண்டிய ஆதரவாளர்களுக்கு மகிழ்ச்சியை அளித்தாலும் மனிதாபிமான அடிப்படை யில் அவர்கள் வருந்தினர்.

இராசேந்திர சோழரின் முடிசூட்டு விழாக் கோலாகலத்தில் திளைத்தவர் களுக்கு உடனே கிடைத்த இந்தச் செய்தி அதிர்ச்சியை அளித்தது. முடி சூட்டு விழா வைபவத்தைக் காண வராதவர்கள்கூட, இராசராச சோழ தேவரைக் காண தஞ்சைக்கு விரைந்துவர விரும்பினார்கள். வண்டிகள் ஏற்பாடு செய்யப்பட்டன. வசதி படைத்தவர்கள் குதிரை பூட்டிய தேர்களைத் தேடினர்.

பெரியவர்களும், இளைஞர்களும் தஞ்சைக்கு அருகிலுள்ள ஊர்களிலிருந்து நடைப் பயணமாக தஞ்சைக்கு வரத் தொடங்கினர். வீட்டுப் பெண்டிரும் உடன் வருவதாகப் பிடிவாதம் பிடித்தனர். அவர்களுள் சிலரை மட்டும் அழைத்துச் செல்லப் பெரியவர்கள் ஒப்புதல் அளித் தனர்.

ஐந்து வயதுக்குட்பட்ட குழந்தைகள் ஒன்றும் புரியாமல் விழித்தார்கள். என்ன நடக்கிறது; ஏன் பரபரப்புடன் பெரியவர்கள் உட்கார்ந்து இருக்கிறார்கள் என்று வியப் புடன் பார்த்தார்கள். சின்னஞ்சிறுசுகள் தங்களையும் தூக்கிச் செல்ல வேண்டும் என்று பிடிவாதம் பிடித்தார்கள். தோளில் அவர்களைச் சுமந்து கொண்டும், பெண்டிர் இடுப்பில் சுமந்து கொண்டும், இளைஞர்கள் வழிப்பயணத்திற்கான உணவு மூட்டையைத் தலையில் சுமந்து கொண்டும் விரைந்து நடக்கலாயினர்.

"நாம் தஞ்சைக்குச் செல்வதற்குள் அரசருக்கு ஏதும் நடக்காதிருக்க வேண்டும்" என்று தங்கள் குலதெய்வத்தை வேண்டிக் கொண்டனர். அரிசிலாற்றங்கரையிலும், மண்ணியாற்றங்கரையிலும், குடமுருட்டிக் கரையிலும், காவிரிக் கரையிலும் குடும்பத் தோடு இரவில் மக்கள் தங்கி, பொழுது புலர்ந்ததும் புறப்பட்டனர். வழிக் களைப்பு தெரியாதிருக்க அவர்கள் தேவாரப் பதிகங் களைப் பாடிக் கொண்டு சென்றனர்.

குரல் இனிமை உடைய குமரர்கள் பாடியதைத் தொடர்ந்து கூட்டத்தினர் பாட, கைத்தாளம் தட்டப்பெரியவர்களும், பெண் களும், இளைஞர்களும் ஓட்டமும் நடையு மாகப் பயணத்தைத் தொடர்ந்தனர்.

பூசுவதும் வெண்ணீறு; பூண்பதுவும் பொங்கரவம்;
பேசுவதும் திருவாயால் மறைபோலும் காணேடீ
பூசுவதும் பேசுவதும் பூண்பதுவுங் கொண்டென்னை
ஈசன் அவன் எவ்வுயிர்க்கும் இயல்பு ஆனான் சாழலோ –

இந்தப் பாடலின் முதல் இரண்டு அடி களை இளைஞர்கள் பாட, பின் இரண்டு அடிகளை மகளிர் பாட ஒரே கும்மாளம் தான்.

இளவட்டங்களின் சிரிப்பும், கும்மாள மும் பெரியவர்களுக்கு எரிச்சலை அளித் தன.

விக்கிரமன்

“நாம் எதற்காகச் செல்கிறோம் என்ப துணராமல் இப்படிக் கும்மாளமிட்டு வரு கிறீர்களே?” என்று அவர்கள் கடிந்து கொண்டனர்!

பாடி ஆடிக் கொண்டிருந்தவர்களுள் இளம்பெண் ஒருத்தி துணிவுடன், “என்ன தாத்தா? நாங்கள் பாடியது என்ன தெரியுமா? மாணிக்க வாசகரின் திருச்சாழல்” என்றாள்.

“எதுவாக வேணும் இருக்கட்டுமே? பாடி ஆட இதுவா நேரம் காலம்? நாங்கள் எல்லாம் கவலை கலந்த மனத்துடன் செல்கிறோம்; எங்கள் மன்னருக்கு என்ன நேருமோ என்ற கவலை எங்கள் இதயத்தை அழுத்துகிறது. உங்களுக்கெல்லாம் கவலை, வருத்தம் ஏதுமில்லையா?” என்று பெரியவர் ஒருவர் கேட்டார்.

“ஏனில்லை? கவலையை மறக்கத்தான் நாங்கள் பாடுகிறோம். வேடிக்கைப் பாட்டில்லை தாத்தா. எங்கே சொல்லுங்கள் இந்தப் பாட்டிற்கு என்ன அர்த்தம்?” என்றாள் குறும்புத்தனம் மிளிரும் விழிகளுடன் ஒரு பெண்.

கேள்வி கேட்டவர்கள் ஒருவரையொருவர் பார்த்து விழித்தனர்.

“யார் பாடிய பாட்டு என்றாவது தெரியுமா?” இளைஞன் ஒருவன் கேட்டான்.

கேள்வி கேட்பதை விரும்பாதவர் ஒருவர், “என்னடா கேள்வி கேட்கிறாய்?” என்று கையை ஓங்கினார்.

மற்றொருவர் தடுத்து, “சின்னவர்கள் தானே, உங்களை வேடிக்கை செய்கிறார்கள்” என்றார்.

“வேடிக்கை இல்லை; தாத்தா? மெய்யாகவே கேட்கிறோம். இந்தப் பாடலை எங்களுக்கு விளையாடக் கற்றுக் கொடுத்தார்கள். யாருடைய பாடல் என்று சொல்லித் தரவில்லை” என்றாள் ஓர் இளம் பெண்.

பெரியவர் ஒருவர் அவளைத் திரும்பிப் பார்த்தார். “இந்தக் காலத்திலே எதையும் ஆழமாகத் தெரிந்து கொள்வதில் உங்களுக்கு ஆர்வமில்லை. அதைப் பாடியவர் திருநாவுக்கரசர்” என்றார்.

அங்கு சிரிப்பு வெடித்தது.

“ஓ, அதை எழுதியவர் திருநாவுக்கரசர் இல்லை தாத்தா! மாணிக்கவாசகர்” என்று ஓர் இளம் குரல் எழுந்தது.

கைகொட்டிச் சிரிப்பு மீண்டும் பூப் பூவாய்க் கொட்டியது.

“விளையாட்டுப் பாடல் அது. பாடிக் கொண்டே விளையாடுவது. விளையாடிக் கொண்டே பாடுவது! திருச்சாழல் என்று பெயர்” என்றபோது கண்டிப்புடன் பேசிய பெரியவர், “என்ன பாடலோ, எந்த வேளையில் என்ன பாடுவது என்று இல்லாமல் போய்விட்டது. இப்படியே நடந்து சென்றால் ஒரு வாரங்கூட ஆகிவிடும்” என்று முணுமுணுத்துக் கொண்டே வேகமாக நடக்கலானார்.

தஞ்சை மாநகரத்திலுள்ள வீதிகளிலுள்ள மாந்தர்கள் ஒவ்வொரு கணமும், மாளிகையிலிருந்து செய்தி வருவதை எதிர்பார்த்து வீட்டு வாசலில் நின்று கொண்டிருந்தனர்.

உள்ளாலை எனப்படும் பகுதியில் கோயிலும், மன்னர் வதியும் மாளிகையும் இருந்தன. நகரத்தின் நடுநாயகமாக அவை இருந்தன.

கொலுமண்டபம் இருந்தது. ஆவணக் களரி, அறச்சாலை இருந்தன. அருகருகே அரசியல் அதிகாரிகள்; படைத்தலைவர் மாளிகைகளும் இருந்தன.

விழாக் காலங்களில் நாட்டியம் நாடகம் நடைபெற ஆடரங்கும் நாடக சாலையும் மாளிகையை ஒட்டி இருந்தன. பெருவுடையார் கோயிலின் திருச்சுற்றில் உள்ள விசாலமான இடத்திலும் விழாக் காலங்களில் நாடகம், நாட்டியம் நடைபெறும்.

வெளியூர்களிலிருந்து நகரத்திற்குள் வந்தவர்கள் எங்கெங்கு முடியுமோ அங்கெல்லாம் தங்கினர். முன்பே கலகலப்பாகவும், மக்கள் வருகை அதிகமாகவும், இருக்கும் கடைத்தெருவில் இன்று நெருக்கடி அதிகமாகியது.

தஞ்சைபுரியைப் பார்த்திராதவர்கள் நகரின் மையப் பகுதியிலேயே சுற்றிச் சுற்றி வந்தார்கள். எப்பொழுதோ தஞ்சையைக் கண்டிருந்த பெரியவர்களுக்கு அந்தக் கடைத் தெருவின் வளர்ச்சி பிரமிப்பாக இருந்தது.

ஒவ்வொரு கடைவீதிக்கும் ஒவ்வொரு பெயர் சூட்டப்பட்டிருந்தது.

'திருபுவன மாதேவிப் பேரங்காடி', 'கொங்காள்வர் அங்காடி', 'இராசராச பிரம மாராயன் அங்காடி' என்று அழைக்கப்பட்ட கடை வீதிகளுக்குள் இன்று மெல்லத்தான் நகர முடிந்தது. வணிகர்களும் தம் அங்காடிகளை உடனே மூடி விட்டு அரசரின் உடல் நிலையைக் காணச் செல்லவேண்டும் என்ற பரபரப்புடனிருந்ததால் வியாபாரத்தில் அதிகம் ஈடுபாடு கொள்ளவில்லை.

அங்காடிகள் நிறைந்த வீதிகளுக்கருகே நகரத்தில் முக்கியமான வீதிகள் இருந்தன. வீரசோழர்ப் பெருந்தெரு, இராசவித்தியாதரப் பெருந்தெரு, சயங்கொண்ட சோழர்ப் பெருந்தெரு, சூரசிகாமணிப் பெருந்தெரு என்ற பெயரில் பெருந்தெருக்கள், மக்கள் வெள்ளத்தைத் தாங்கின. "இதுதான் வானவன் மாதேவிப் பெருந்தெரு, சில நாள்கள் முன்பு முடி சூட்டிக் கொண்டாரே இராசேந்திர சோழர் அவரைப் பெற்றெடுத்த பாக்கியசாலி" என்று இளைஞர்களுக்கும் பெண்களுக்கும், விளக்கினார் முதியவர்.

முதியவர்களைக் கேலியும் கிண்டலுமாகப் பேசி வந்த இளைஞர்களுக்குப் பெரியவர்கள் மீது மதிப்பும் மரியாதையும் அதிகரித்தன.

"நீங்கள் வானவன் மாதேவியைப் பார்த்திருக்கிறீர்களா?"

"இன்று நாம் இராசேந்திர சோழ தேவரைப் பார்க்க முடியுமா?"

"நானும் படையில் சேர்ந்து என் நாட்டிற்குத் தொண்டாற்றப் போகிறேன். வீரனாய்ச் சேர்ந்தால், சக்கரவர்த்திகளை அடிக்கடிச் சந்திக்க முடியும் அல்லவா?" என்றனர் சில இளைஞர்கள்.

"மிக சீக்கிரம் போர் ஒன்று மூளப் போகிறதாமே? போர்க்களத்தில் வீரதீர சாகசங்களைச் செய்ய வேண்டும் என்று ஆசை."

"ஓ! வீரனுக்குத்தான் மாலை இடப் போவதாக உன் மாமன் மகள் முடிவு செய்திருப்பதால் படைவீரனாகச் சேரப் போகிறாய், அப்படித்தானே?" என்று அருகே இருந்த இளம் பெண் ஒருத்தி அவனைச் சீண்டினாள். சிரிப்பு அலை ஓய நேரம் பிடித்தது.

தஞ்சை நகருக்கு வந்தவர்கள் தங்கள் உறவினர் வீடுகளிலும், தெரிந்தவர்கள், அறிந்தவர்கள் வீடுகளிலும் தங்குவதற்கு, அவர்கள் முகவரி கேட்டு அலைந்தனர்.

தொழிலாளர்கள் குடியிருப்புகளான அந்த வேளங்கள் தஞ்சைக் கோட்டைக்கு வெளியே இருந்தன.

அபிமான பூஷணத் தெரிந்த வேளம், அருண்மொழித் தேவர் தெரிந்த திருபரிகளத்தார் வேளம், இராசராசத் தெரிந்த பாண்டித் திருமஞ்சனத்து வேளம், உத்தம சீலியார் வேளம், பஞ்சவன் மாதேவியர் வேளம் என்று அழைக்கப்பட்ட வேளத்து வீடுகளில் அவர்கள் தங்க இடம் பிடித்தனர்.

கோட்டைக்கு வெளியே புற நகர்ப் பகுதியில் அவை இருந்ததால், நகரத்திற்குள் வந்தவர்கள் மீண்டும் புறநகர்ப் பகுதியை நோக்கி விரைந்தனர். கூட்ட நெரிசலில் ஊர்ந்தவண்ணம் சென்றதால் சிலர் பொறுமை இழந்தனர்.

கலைஞர்களின் இல்லங்களிலும் நிற்க இடம் இல்லை.

தஞ்சை மாநகர் தாங்க முடியாத அளவுக்கு மக்கள் நிறைந்து விட்ட செய்தியும், மேலும் மேலும் பல திசைகளிலிருந்து மக்கள் வெள்ளம்போல் வந்து கொண்டிருக்கும் செய்தியும் இராசராசனுக்கு அறிவிக்கப்பட்டது.

இராசராசன் உடல் நிலையில் சிறந்த முன்னேற்றம் காணப்பட்டது.

அவர் அருகே கருவூர்த் தேவரும் இராசேந்திரனும், பட்டத்தரசியும், திருமந்திர ஓலை நாயகமாக இப்போது பணி ஏற்றிருக்கும் முதியவர் கிருஷ்ணன் ராமனும் மட்டுமே இருந்தனர்.

தன் அன்புப் புதல்வர் இராசேந்திரன் திருக்கரத்தைத் தன் கரத்துடன் பிணைத்துக் கொண்ட இராசராசன் மெல்லப் பேசினார்.

"பரகேசரி இராசேந்திர சக்கரவர்த்தியே!" என்று அவர் அழைத்தபோது இராசேந்திரன் நெகிழ்ந்து விட்டார்.

"தந்தையே, தந்தையே! நீங்கள்தான் இந்தக் கணம் இந்தப் பொழுது வரை சக்கரவர்த்தி" என்றார் இராசேந்திரன்.

புன்முறுவலுடன் தலை அசைத்த இராச ராசன் சொல்லுவார் : "அருமை மகனே! எப்பொழுதோ பிரிந்திருக்க வேண்டிய இந்த உயிரை இந்தக் கூட்டிற்குள் தங்க வைத்திருக்கும் பெருமை கருவூர்ச் சித்த ருடையது. அவர் அருகே இருக்கும்போது இயம பயம் ஏது? அவர் நேற்று இரவு மூலிகை மருந்தைக் கொடுத்தார். என் பிணிகள் ஓடோடி விட்டன. உடல் கனம் குறைந்தது. பார்வை தெளிவாகிவிட்டது.

"மகனே! கருவூர்த் தேவர் நமக்கு ஆதர வாக, உதவியாக இருப்பது ஆடவல்லான் நமக்களித்த பரிசு. அதற்காக ஏழேழு பிறவிக்கும் நாம் இறைவனுக்கு நன்றி செலுத்த வேண்டும். என் அருகே இருந்து சோழ நாடு வாழ வாழ்த்திக் கொண்டே இருப்பதுபோல், உன்னுடன் அவர் என் றைக்கும் இருக்க வேண்டும் . நாடு நகரம் எங்கும் அவர் சுற்றி வருகிறார். தெற்கே அகத்திய மலைக்குச் சென்றுவிடப் போகி றாராம். இராசேந்திரா, நீ அவர் பாதங் களைக் கெட்டியாகப் பிடித்துக் கொண்டு அவர் உன்னை விட்டுப் பிரியாமல் இருக்க வேண்டிக் கொள்ள வேண்டும்.

"இராசேந்திரா! வடக்கே வனப்பு மிகு பெரிய நதி இருக்கிறது. புனிதமான அந்த நதியின் பெயர் கங்கை என்பதை நீ அறிவாய். சிவபெருமான் சடை முடியி னின்று இந்தப் புண்ய பூமிக்கு வந்து வளம் பெருக்கும் தெய்வநதி. அந்த மாபெரும் நதியை நம் சோழநாட்டிற்குக் கொண்டு வர வேண்டும். என் ஆசைகளுள் அதுவும் ஒன்று.

"இராசேந்திரா, நீ கங்கை நதிக்குச் சென்று நீராட வேண்டும். அந்த நதியி லிருந்து லட்சம் லட்சம் குடங்களில் கங்கை நீரைக் கொண்டு வரவேண்டும். கங்கை நீரைக் கொண்டு பெருவுடையாரை திரு முழுக்காட்ட வேண்டும் என்பது என் பேரவா.

"என் ஆசை நிறைவேறப் போவதில்லை; இறைவன் என்னை அழைத்துக் கொண் டிருக்கிறான். எந்தக் கணமும் கைலாய பதியின் கணங்கள் என்னை அழைத்துச் செல்ல விமானங்களுடன் வருவார்கள். பெருவாழ்வு வாழ்ந்து விட்டேன். நம் புலிக் கொடி திக்கெட்டும் பறக்கிறது. அதில் பெருமை இல்லை.

"நான் வென்ற நாடுகளைப் பற்றி, வெற்றி களைப் பற்றி மட்டுமே வருங்காலத்தவர் பேசிக் கொண்டிருக்கப் போவதில்லை. ஆடவல்லான் அருளால் தட்சிண மேருவாய் விளங்குகிறதே, அந்தப் பெருவுடையார்த் திருக்கோயில்தான் அழியாது இருக்கப் போகிறது. என் அருமை இராசேந்திரா! தஞ்சைக் கோயிலைப் போன்று பெரிய, மிகப் பெரிய கோயிலைக் கட்டு. அங்கே பெரிய லிங்கம், பெரிய நந்தி, பெரிய விமானம் எல்லாம் உருவாக்கு."

இராசராசர் மெல்லப் பேசினார். தொடர்ந்து பேசியதால் களைப்படைந் தார். விழிகளை மூடிக் கொண்டார்.

அருகே இருந்தவர் பதறினர். கருவூர்த் தேவர் நாடியைச் சோதித்தார். 'பயமில்லை' என்றார்.

சிறிதுநேரம் கழித்து இராசராசர் கண் திறந்தார்.

மீண்டும் அதே புன்னகை. முகத்தில் தனி ஒளி.

"இராசேந்திரா, இராச இராசேசுவர நாடகத்தைக் கடைசியாகக் காண வேண்டும் என்ற ஆவல். சென்ற வைகாசித் திங்களில் அந்த நாடகத்தைக் கண்டு மகிழ்ந்தேன். சாந்திக் கூத்தன் தன் தள்ளாத வயதிலும் மிகச் சிறப்பாக அந்த நாடகத்தை நடத்தி னான். அவன் நலமாக இருக்கிறானா? அவனுடைய குடும்பத்தினருக்கு எந்தவித வறுமையுமில்லாமல் வாழ ஏற்பாடு செய்ய வேண்டும்" என்று கூறிச் சற்று நிறுத்தினார்.

"தந்தையே, திருப்பந்தணை நல்லூருக் குச் செய்தி அனுப்பி சாந்திக் கூத்தனை உடன் அழைத்து வரச் செய்கிறேன்" என் றார்.

"அவரை அழைப்பதும் நடக்கட்டும். மற்றொரு செய்தி; மிக முக்கியமானது" என்று கூறி அவனிடம் மெல்லிய குரலில் தெரிவித்தார்.

இராசேந்திரன் முகத்தில் புதிய ஒளி பிறந்தது.

(தொடரும்...)



கர்மயோகி

அன்பர் அனுபவம் : 2

சென்ற இதழில் அன்பர்கள் அனுபவம் என்ற தலைப்பில் பல கடிதங்களிலிருந்து சிறு பகுதிகளை எடுத்துத் தொகுத்து எழுதியிருந் தேன். அதை இந்த இதழிலும் தொடர்ந்து எழுதுகிறேன். அத்துடன் வேறு சில நிகழ்ச்சி களையும் எழுதுகிறேன்.

1. ஒரு சமயம் அமெரிக்கா, கனடா, ஹாலண்டு ஆகிய நாடுகளிலிருந்து பக்தர்கள் வந்திருந்தார்கள். பொதுவாக இவர்கள் வெவ் வேறு மாதங்களில் வருவது வழக்கம். இம்முறை இம்மூவரும் ஒரே சமயத்தில் வந்திருந்தார்கள். மாதம் முதல் தேதியும், ஒவ் வொரு திங்களன்றும் இங்கு (Calling) அழைப் புண்டு. இந்த நண்பர்கள் தங்கள் நாட்டில் 'அழைப்பை' மேற்கொண்டதைப் பற்றி விவர மாகச் சொல்லிய பொழுது, அழைப்புக்குரிய நிபந்தனைகளையும், அதன் பல்வேறு முக்கி யத்துவங்களையும் விளக்கமாகச் சொன்னேன். கனடாவிலிருந்து ஜான் வந்திருந்தார். அவர் மாலை தியானத்தில் கலந்து கொண்டு பிறகு தன் விடுதிக்குப் போய்விட்டார். அவர் வந்து 3 ஆண்டுகள் ஆகின்றன. அவர் 15 நாள் தங்கு வார். ஊருக்குப் புறப்படுமுன் நான் அவரை ஒருமுறை சந்திப்பேன். மற்றவர்கள் வந்து 15, 20 வருஷம் ஆகிறது. இவர்கள் தங்கள் நாட்டில் அன்னைக்குரிய சேவையை மேற்கொண் டுள்ளார்கள். என்னுடனேயே இங்கு இத்தனை வருஷமாகத் தங்கியிருந்தவர்கள்.

அழைப்பின் சிறப்புகளை மேலும் மேலும் சொல்லும் பொழுது அமெரிக்க நண்பர் மறுநாள் அழைப்பில் கலந்து கொள்ள ஜான் விரும்புவார் என்றார். நான் அழைப்புக்கு ஒருவரை அனுமதிக்கும் முன் அவருடைய வீட்டில் அழைப்பை மேற்கொண்டு அதை எனக்கு விளக்கமாக எழுதச் சொல்லி, அதன் பிறகே முடிவு செய்வது வழக்கம். ஜான் புதியவர் என்பதால் எனக்குத் தயக்கம். அமெரிக்க நண்பர், ஜானைப் பற்றிச் சொன் னார். அவர் அழைப்பை மேற்கொண்டு கடைப் பிடிக்கும் முறையை விளக்கினார். அதனால் அவரை மறுநாள் அழைப்பில் கலந்து கொள்ள நான் சம்மதித்தேன். நேரம் இரவு 9.30 மணி. ஜான் விடுதிக்குப் போய்விட்டார். அவர் அறையில் போன் இல்லை. டிரைவர் வீட் டிற்குப் போய்விட்டான். விடுதி சுமார் 2 மைல் தூரத்தில் உள்ளது. அனுப்ப ஆள் இல்லை. மறுநாள் காலையில் அழைப்பு 8 மணிக்குத் துவங்கும். ஹாலந்து நண்பர் ராபர்ட் தான் போய் ஆசிரமத்தில் ஜான் தியானத்தி லிருக்கிறாரா எனப் பார்த்துச் சொல்லிவிட்டு வருவதாகப் போனார்.

ஜான் ஆசிரமத்தில் இல்லை. ராபர்ட் அவரைத் தேடி விடுதிக்குப் போனார். அவரைச் சந்தித்து மறுநாள் அழைப்புக்கு வரும்படி சொன்னார். "நானிருப்பது 15 நாள். அடுத்த அழைப்புக்கு முன் நான் கனடா புறப்பட்டு விடுவேன். நாளை அழைப்பில் கலந்து கொள்ள எனக்கு அளவு கடந்த ஆர்வ முண்டு. ஸான் பிரான்ஸிஸ்கோவிலிருந்து மாக்பர்லேன் சென்ற மாதம் என்னை போனில் அழைத்து அவர் நடத்தும் அழைப்பின்போது, என்னையும் அழைப்பில் உட்காரும்படி கேட்டுக் கொண்டார். நான் மாதந்தோறும் அழைப்பை மேற்கொள்கிறேன். இங்கு வந்த பொழுது எனக்கு அழைப்பில் கலந்து கொள்ள வேண்டும் என்று அதிக அவா. என்னை நீங்கள் அழைக்காதது எனக்கு ஏமாற்றம். உங்கள் வீட்டிலிருந்து நேரே சமாதிக்குப்போய் அன்னையிடம் என் குறையைச் சொல்லிவிட்டு அறைக்கு வந்துவிட்டேன். இரண்டு மணி கழித்து நீங்கள் வந்து என்னை அழைப்பது என்னை ஆச்சரியத்தில் ஆழ்த்தி விட்டது" என்று ஜான் பதில் சொன்னார்.

2.மாக்பர்லேன் கத்தோலிக்கக் குடும்பத்தில் பிறந்தவர். அவரது தாயாரும், சிறிய தாயாரும் தினமும் இன்றும் சர்ச் செல்பவர்கள். அதே காரணத்தால் சர்ச் இல்லாத ஊருக்குப் போக மாட்டார்கள். மாக்பர்லேன் கத்தோலிக்கப் பாதிரியாகப் போக வேண்டுமென்று அவரது

குடும்ப விருப்பம். அவர் 1970 இல் ஆசிரமம் வந்து இங்கேயே தங்கிவிட்டவர். ஒரு சமயம் அவரது சிறிய தாயாரிடம் போனில் பேசும் பொழுது, தன் காருடைய பின்புறக் கண்ணாடியை மாற்ற வேண்டும், அதற்கு அதிகச் செலவாகும், ஓய்வு பெற்ற நிலையில் அது தனக்கு அதிகச் செலவு என்று சிறிய தாயார் சொன்னார். அந்தக் கண்ணாடியை முதலில் பொருத்திய ஒர்க்ஷாப்பில் காரைக் கொண்டு போய் விட்டால், தவறு அவர்களுடையது என்பதால், அவர்களே செலவில்லாமல் மாற்றி விடுவார்கள் என்றும், அந்த ரசீதை இந்த 3 வருஷத்திற்குப் பின் தேட முடியவில்லை என்றும் சொன்னார், 70 வயதான பெண்மணி. சமீபத்தில் வீடு மாற்றியவர். பழைய ரசீதை எங்கு போய்த் தேடுவது? அது கிடைத்தால் இப்பொழுது 1000 டாலர் மிச்சம். தேடியும் பார்த்து விட்டார். கிடைக்கவில்லை. ரசீதைக் கண்டுபிடிக்கும் மார்க்கம் மாக்பர்லேனுக்கு தெரியும். சிறிய தாயார் அன்னைக்குப் பிரார்த்தனை செய்தால் ரசீது கிடைக்கும். ஆழ்ந்து ஊறிய கத்தோலிக்கரிடம் எப்படி அதைச் சொல்ல முடியும்? எந்த தெய்வத்திற்குப் பிரார்த்தனை செய்தாலும், உண்மையான பிரார்த்தனைகளை அன்னை அந்த தெய்வத்தின் மூலம் ஏற்பார் என்பது அவருக்குத் தெரியும். தன் சிறிய தாயாரிடம் அவர் பின் வருமாறு சொன்னார்:

"உங்களுக்கு ஏசுமீது அளவு கடந்த நம்பிக்கை இருக்கிறதல்லவா? ஏசுவுக்குப் பிரார்த்தனை செய்தால் ரசீது கிடைக்கும்" என்றார். இந்த 70 ஆண்டுகளாக அதுபோன்ற அனுபவம் தனக்கில்லை என்று பதில் வந்தது. "கிடைக்கும் என்ற நம்பிக்கையுடன், மனத்தைப் புறக்கணித்துச் சில நிமிஷம் ஏசுவுக்குப் பிரார்த்தனை செய்துவிட்டு, ரசீதைத் தேடுங்கள்" என்று சொல்லிவிட்டுப் போனை வைத்து விட்டு, ஆபீஸுக்கு வேண்டிய பேப்பர்களை எடுத்துக் கொண்டு, வீட்டை விட்டுப் புறப்பட ஆயத்தமானார் மாக்பர்லேன். போன் மணிச் சத்தம் கேட்டு போனை எடுத்தார். சிறிய தாயார், சிறு குழந்தை போல் போனில் ஆர்வமாகக் கண்களில் நீர் ததும்ப பேசமுடியாமல் சந்தோஷத்தில் மூழ்கி, "என் வாழ்நாளில் இல்லாத அனுபவம் இன்று கிடைத்தது. நீ சொன்னதுபோல் பிரார்த்தனை செய்தேன். அளவு கடந்த சந்தோஷம் ஏற்பட்டது. பிரார்த்தனையை முடித்து விட்டு, ரசீதைப் பிறகு தேடலாம் என வேறு வேலைக்குப் போகு முன் டிராயரை மூடினேன். சரியாக வைக்க முயன்ற பொழுது அதனுள் நான் இத்தனை நாள் தேடிய ரசீது இருந்தது. எனக்கு அளவு கடந்த சந்தோஷம்" என்று சொன்னார்.

3. "எனது தம்பிக்கு மனநிலை சரியில்லாமல் இருந்தது. தங்களுக்கு எழுதியதன் பலன் நல்லபடியாய் முன்போல் ஆகி வேலைக்குச் சென்று கொண்டிருக்கிறார். அவருக்கு இன்று பெண் குழந்தை பிறந்துள்ளது".

4. "ஞாயிற்றுக்கிழமை தியான மையம் ஆரம்பித்துள்ளேன்... அன்று முழுவதும் வீடு சந்தோஷத்தால் நிரம்பியிருந்ததைப் பார்க்கும் பொழுது தினமும் தியானம் நடத்த முடியாதா என்று நினைத்தேன்".

5. "ஒரு பஸ் டிரைவருக்குக் கான்சர் முற்றிவிட்டது. டாக்டர் ஆப்பரேஷன் செய்தார். கான்சர் அளவுகடந்து முற்றிவிட்டதால், மீண்டும் அதை மூடிவிட்டார். வயிற்றை மூடிவிட்ட டாக்டரும், மற்ற டாக்டர்களும் டிரைவர் ஒருவாரத்திற்குமேல் உயிரோடு இருக்கமாட்டார் என்றார்கள். ஆஸ்பத்திரியின் தலைவர் என்ற முறையில் என் தாயார் டிரைவரைப் பார்க்கப் போனார். அவர் ஒரு Blessing packetடை டிரைவரிடம் கொடுத்தார். இது நடந்து 5 மாதம் ஆகிறது. டிரைவர் குணமாகி வேலையில் சேர்ந்து விட்டார். வலியில்லை".

6. "சென்ற வாரம் என் நண்பரின் மகன் நோய்வாய்ப்பட்டிருந்தான். தாயார் குழந்தையுடன் தனியாக இருந்தாள். குழந்தை தொடர்ந்து அழுதுகொண்டே இருந்தது. காரணம் தெரியவில்லை, நான் குழந்தையைப் பார்க்கப் போனேன். அழுகை நிற்கவில்லை. என்ன செய்வது என்று தெரியாமல் திகைத்தோம். அன்னை பிரசாதத்தைக் குழந்தை தலையணையின் கீழ் வைத்தேன். ஆச்சரியமாகக் குழந்தை நிம்மதியாகத் தூங்கிவிட்டது".

7. "மதர் கிருபையால் என் கணவருக்கு மதுரையிலிருந்து நானிருக்கும் ஊரான பெல்லாரிக்கு மாற்றல் கிடைத்துள்ளது".

8. "உங்கள் கடிதம் கிடைத்த இருபது நாட்களில் என் சகோதரிக்கு ஒரு வரன் நிச்சயமாகும் சூழ்நிலை ஏற்பட்டுள்ளது".

9. "மீண்டும் என் பெண்ணுக்கு மூலம் ஆப்பரேஷன் செய்ய 18 ஆம் தேதி குறிக்கப் பட்டுள்ளது. ஒரு சாதகருக்கு ஆப்பரேஷன் இல்லாமல் மூலம் குணமானதைப் பற்றி எழுதியிருந்தீர்கள். நமக்கும் அதேபோலாகுமா என்ற ஐயத்துடன் பெண்ணை ஆப்பரேஷன் தியேட்டருக்குள் அனுப்பினோம். Blessing packetடைப் பெண்மீது தடவி அனுப்பினோம். சிறிது நேரத்தில் டாக்டர் வெளியே வந்து ஆப்பரேஷன் தேவையில்லை என்றார்".

ஃ

நிழல் அல்ல நிஜம்!

நாகராஜகுமார்

"ஐயா... அம்மாவோட உடம்புல எந்த நோயுமில்லே. மனசில இருக்கிற ஏதோ ஒரு குறையாலதான் ரொம்ப பல வீனமா இருக்காங்க. நான் எழுதித்தர்ற டானிக்கைச் சாப் பிடச் சொல்லுங்க" என்று கழுத் தில் இருந்த ஸ்டெதஸ் கோப்பை ப்ரீஃப் கேஸில் திணித்து, எதிரே அமர்ந்து இருந்த கிருஷ்ணமூர்த்தியிடம் பிரிஸ்கிரிப்ஷனை நீட்டி, வணக் கம் சொல்லிக் கிளம்பினார் டாக்டர்.

நாற்காலியின் கைப்பிடியி லிருந்து துண்டை உதறித் தோளில் போட்ட கிருஷ்ண மூர்த்தி படுக்கையில் இருந்த விசாலத்தின் தலையை வருடி விட்டார்.

விசாலத்தின் கண்களில் இருந்த ஏக்கம் தெளிவாய்ப் புரிந்தது.

வேட்டியின் ஒரு முனையை இடது கைக்குத் தந்து தயக்க மாய் ஹாலுக்கு வந்தார்.

"லேய்...ராஜமாணிக்கம்..."

"ஐயா..." - தோளில் இருந்த துண்டு கைக்கு வந்து குனிந்து நின்றான் அந்த ராஜ மாணிக்கம்.

"போய்... தந்தி ஒண்ணு கொடுத்துடு..."

அவரின் வார்த்தைக்குக் காத்திருந்தவன் போல் "சரிய்யா" என்றான்.

"மணி ஆறாகப் போகுது... தந்தி ஆபீஸ் திறந்திருக்குமா லேய்?"

"டவுன்லே ராத்திரி முழுக்க திறந்திருக்கும்யா... இதோ கிளம்பிட்டேன்யா..."

"செய்" என்றவர் மீண்டும் விசாலம் படுத்திருந்த அறை வாசப்படிக்குத் தலையைத் தாழ்த்தி உள்ளே வந்தார்.

விசாலத்தின் கண்கள் லேசாய் ஒளிர்ந்து கை கூப்பிய நிலைக்கு வந்தவளின் கையைப் பிடித்து... "எனக்கு மட்டும் நம்ப பையன் மேலே பாசமில் லேன்னு நினைச்சுக்காதே விசா லம். ஆனா அவன் என் மூஞ் சிலே பூசின கரிதான் இன்னும் அழியலை..." குரலில் கலக்க மிருந்தது.

"அவன் ஆசைப்பட்ட பொண் ணைக் கட்டிக்கிட்டான். குலத் திலே அவள் தாழ்ந்தவளா இருந்தாலும் பணத்திலே அவள் உயர்ந்துதானே இருக்கா?" என்று விசாலத்தின் குரல் லேசாய் வெளிப்பட்டது.

"அவங்கப்பன் சேர்த்த பணம் முழுக்கவும் நல்ல பண மில்லே விசாலம். சாராயம் வித்த பணம் - ஏழைங்களோட ரத்தம். அதை நல்லபடியா நான் கேட்கப்போய் என்னையே எதிர்த்தவன்தானே அவன்? இவன் மட்டும் சரியான வழி யிலே போயிருந்தா... கட்டின கழுதையை நம்ப வீட்டோட வச்சு வாழ்ந்திருந்தா ஊர்ல ஒரு பய என்னைத் துக்கம் விசாரிப் பானா. ஆனது ஆச்சு! அவனை வரச் சொல்லி தந்தி கொடுக் கச் சொல்லியிருக்கேன். நான் களத்து மேட்டுக்குப் போய் மோட்டர் சரியில்லையாம், பார்த்துட்டு... வர நாழியாகும். நீ சாப்பிட்டுப் படு... மனசை அலட்டிக்காதே" என்று கிருஷ்ணமூர்த்தி வெளியே வந்து இருட்டத் தொடங்கியிருந்த வானத்தைப் பார்த்து நடையில் வேகம் சேர்த்தார். வயது அறு பதானாலும் நடையின் வேகம் இருபதைத் தொட்டது.

விடியத் துவங்கியிருந்த நேரம், விசாலத்தின் அறையில் மிக மெல்லிய காலடி ஓசைகள் வெளிவர - ஊஞ்சலில் இருந்த கிருஷ்ணமூர்த்தி எழுந்து அறைக்குள் நுழைந்தார்.

குளித்து முடித்த ஈரத் தலையுடன் புடைவைக் கொசு வத்தை இடுப்பில் செருகி முடித்து நிமிர்ந்து பார்த்த விசாலத்தின் முகம் பிரகாச மாய் இருந்தது.

புன்னகைத்த முகத்துடன் திரும்பிய கிருஷ்ணமூர்த்தியைப் பார்த்து "பத்து மணிக்குள்ளே பையன் வந்துடுவானில்லே?" கேட்டாள்.

"வரணும்!"

"ஏங்க பையனோட பொண் ணும் வருவாளா?"

"தெரியலை!"

"போய் குளிச்சிட்டு வாங்க. அவங்களும் வந்தாச்சுன்னா எல்லாரும் சேர்ந்து டிபன் சாப்பிடலாம்..."

விசாலத்தின் திடீர் ஆரோக் கியம் - கிருஷ்ணமூர்த்தியையும் தொற்றிக் கொள்ள - "லேய்... ராஜமாணிக்கம், வண்டியை பூட்டிட்டுப் போய் அவங்களைக் கூட்டிட்டு வந்துடு லேய்..."

"அவன் விடியல்லேயே போயாச்சுங்க!" என்றாள்.

வண்டிச் சத்தம் கேட்க, பரபரப்பாய் வராந்தாவில் நுழைந்த விசாலம், "ராஜ

மாணிக்கம்... அவங்களை ஒரு நிமிஷம் அப்படியே நிக்கச் சொல்லு" என்றவள் கையில் ஆரத்தித் தட்டுடன் வெளிப் பட்டாள்.

"முதல் முதலா வீட்டுக் குள்ளே நுழையறே... வலது காலை வச்சி வாம்மா" - நுழைந் தார்கள்.

"அத்தை கொஞ்சம் மாமா வோட சேர்ந்து நின்னு எங்களை ஆசிர்வாதம் பண்ணுங்க" என்றாள் ஜானகி.

குனிந்து எழுந்தபோது பின் புற இடுப்புக்கு ஒரு கையைக் கொடுத்தாள்.

ஆதரவாய் அவளைத் தூக்கி நிறுத்திய விசாலம், "இது எத்தனையாவது மாசம்?" கேட் டாள்.

"அஞ்சி முடிஞ்சு ஆறு..." என்றாள் ஜானகி.

"இன்னும் ஒரு தோசை போட்டுக்கயேன்".

"வேணாம் அத்தை... வயித் திலே தங்க மாட்டேங்குது.. உங்க உடம்பு இப்ப தேவ லையா? தந்தி வந்ததும் ரொம் பப் பயந்துட்டேன்!"

"உடம்புக்கு என்னம்மா? மனசுதான் சரியில்லை. உன் புருஷன் எங்களை விட்டுப் போன கடந்த ஒரு வருஷமா தான் இப்படி. இப்பக்கூடப் பாரேன். நீங்க ரெண்டு பேரும் எப்படியும் வருவீங்கன்னு தெரிஞ்சதும் எழுந்து நடமாட ஆரம்பிச்சிட்டேன்!"

"என்னவோ தெரியலை அத்தை... கல்யாணமான புது சில உங்களையும், மாமாவை யும் பார்க்கணும்னு நான் வற்புறுத்தின போதெல்லாம் வேண்டாம்னு பிடிவாதமா மறுத்தவர் கடந்த ரெண்டு மாசமா உங்களைப் பார்க்க ணும்னு அடிக்கடி சொல்லிட் டிருந்தாரு. தந்தி வந்ததோ, இல்லியோ உடனே பெட்டியைக் கட்டியாச்சு." ஏதோ சொல்ல வந்த ஜானகி தயங்கியபோது -

"நீங்க வந்தது உங்கப்பா வுக்குத் தெரியுமா ஜானகி?"

"வழி அனுப்பி வைச்சிதே அவருதான் அத்தை!"

"கொஞ்சம் நெய் விடட்டுமா?"

"உங்களுக்கு வேணா நான் விடறேன்" என்று சொல்லி ஜாடியில் இருந்த நெய்யை விசாலத்தின் இலையில் சாய்த்தபொழுது உருகிப் போனது விசாலத்தின் மன மும்.

இரண்டு நாட்கள் கோயில், குளம், வயல், வரப்பு, காடு, கழனி என்று பொழுது கழிந்து மூன்றாம் நாள் காலை ஆரம்ப மானது அந்த விபரீதம்.

"ஏண்டி வந்து ரெண்டு நாள் ஆகுது. வந்த விஷயம் முடியாம அப்படி என்ன இழைச்சல் வேண்டிக் கிடக்கு? சட்டு புட் டுன்னு பேசி விஷயத்தை முடிக்கிற வழியைப் பாரு" என்றான் விஜயன் - ஜானகியின் கணவன்.

"உடம்புக்கு முடியாம இருந்து நம்பளை - முக்கியமா உங்களைப் பார்த்த அப்புற மாதாங்க எழுந்து நடமாட ஆரம்பிச்சிருக்காங்க. இன்னும் வாரம், பத்து நாளு போகட் டுங்க. அத்தை முழு குண மானதும் கேட்டுப்போம்..."

"நல்லாயிருக்குடி நீ சொல் றது... வாரம், பத்து நாள் என்னை இங்கேயே இருக்க ணுங்கிறியா? பிசினஸ் என்ன வாகிறது? அதுவுமில்லாமல் கவர்ன்மெண்ட்ல இந்த வாரக் கடைசியில டெண்டர் நோட்டீஸ் வந்தாச்சுன்னா, அடுத்த வாரமே நாம இடத்தைக் காண் பிச்சாகணும்!"

"ஏங்க இப்படி மனிதாபி மானமில்லாமல் பேசறீங்க? என்ன பெரிய பிசினஸ்? சாராய பிசினஸ், வேண்டாங்க அந்தத் தொழிலை விட்டுடுங்க. ஊர்ல இருக்கிறவங்களோட தாலி எல்லாம் காலியாகி என் தாலியோட எடை ஏறுகிறது. எனக்குப் பிடிக்கலைங்க. உங்க அம்மாவோட மூஞ்சி யைப் பாருங்க. அவங்க உங்க மேலே வைச்சிருக்கிற பாசத் தைப் பாருங்க..."

"என்னடி தத்துவமெல்லாம் பேசறே? உன்னோட உடம்பு அந்தச் சாராயத்துக் காசுல தான் வளர்ந்ததுன்னு மறந் தாச்சா?"

"மறக்கறதா? அந்த ஞாபகம் ஒவ்வொரு நிமிஷமும் என் உடம்பைச் சல்லடையாத் துளைக்கிறதை இப்போ உணர்றேங்க!"

"வீண் வேதாந்தம் வேண டாம்! நீயா கேட்கப் போறியா மாட்டியா?"

"நீங்க என்னை இங்கே கூட்டி வர்றதுக்கு முன்னாடி அந்த எண்ணம் இருந்திச்சு. ஆனா இப்ப இல்லை... உங் கப்பா - அம்மாவையும் பார்த்து - அவங்களை முழுசா புரிஞ் சிக்கிட்ட அப்புறம் - முடியாது - என்னால கேட்க முடியாது!" என்றவளின் கன்னத்தில் ஓங்கி ஓர் அறை விட்டான் விஜயன்.

கூச்சல் கேட்டு அறைக்குள் நுழைந்த விசாலம், "ஏண்டா பிள்ளைத் தாச்சிப் பொண்ணை அடிக்கிறே?" என்றாள் கோப மாய்.

"ஒண்ணுமில்லை. கவர்ன் மெண்ட்ல புதுசா பிராந்திக் கடைக்கு ஏலம் விடறாங்க. இந்தத் தடவை நான் எடுக்க லாம்னு இருக்கேன்! அதுக்காக இடம் ஒண்ணு தேவைப்படுது..."


"உன் மாமனார் சேர்க்காத சொத்தா? அவருக்கு இல்லாத இடமா?"

"ஆனா இந்தப் பிராந்திக் கடை ஏலத்தை நானே தனியா எடுத்து நம்ம ஊர்லேயே நடத்தலாம்னு இருக்கேன்..."

"நம்ம ஊர்லயா?"

"ஆமாம். உனக்காக அப்பா எழுதி வைச்சாரே மெயின் ரோடைப் பார்த்த இடம்... அந்த இடத்தை எனக்கு எழுதிக் கொடுத்துடு... இல்லை குத்த கைக்கு விட்டுடு... மாசம் பணம் வந்துடும். நம்ப ஊர்ல சாரா யக்கடை இல்லாததால அவ னவன் அசலூருக்குப் போய்க் கிட்டிருக்கான். இந்த இடத் திலே மட்டும் நான் கடையைத் திறந்தேன், என்னைப் பிடிக்க எந்தக் கொம்பனாலேயும் முடி யாது" - விஜயன் சற்றே சிரித்த போது அவன் கன்னத்தில் ஓர் அறைவிட்ட விசாலம் பதட்ட மாய்...

"யாருக்கிட்டே பேசறேன்னு தெரியுதா உனக்கு? இந்தக் கிராமத்துல சாராய வாச னையே இல்லாமச் செய்ய ணும்னு நினைச்சி... அதை நடைமுறைக்குக் கொண்டு வந்தவர்டா உங்கப்பா. ஆனா நீ? அவரையே எதிர்த்துட்டு சாராய வியாபாரி பொண் ணைக் கட்டிக்கிட்டவன். அதால எவ்வளவு பேர் உங்கப் பாவைத் துச்சமா மதிச்சாங் கன்னு தெரியுமா உனக்கு? இப்பவும் சொல்றேன்... அவரா தந்தி கொடுத்து உன்னை இங்கே அழைக்கலே. நான்... என் பிள்ளைப் பாசம்தான் உன்னை இங்கே அழைச் சிருக்கு. ஆனா நீ வந்த சூட்ச மம் இப்பதாண்டா புரியுது. என் கண்ணு திறந்திருக்கற வரை இதை ஒருக்காலும் அனு மதிக்க மாட்டேன். போலாம்... நீ போலாம்... நான் செத்தாலும் என் மூஞ்சில விழிக்காதே... போ... போயிடு..." என்ற விசா



லம் ஒடுங்கிப் போனவளாய் சுவரில் சாய்ந்து சரிந்தாள்.

ஜானகி அவசரமாய் விசாலத்தைத் தொட்டுத் தூக்க முயன்றபோது - வெடுக்கெனக் கைகள் தட்டப்பட்டு - விஜயனின் கைக்குள் சிக்கி அவனின் வேக நடைக்கு ஈடுதர இயலாமல் இழுத்துச் செல்லப்பட்டாள்.

விசாலம் கீழே சரிந்த நேரம் - யமன் எதிர்பார்த்த நேரமாய் இருந்தது.

முழுங்கையில் துண்டுடன் குனிந்த நிலையில் நின்றிருந்த ராஜமாணிக்கம், "ஐயா... உங்களைப் பெரியய்யா கூட்டி வரச் சொன்னாருங்க. இரண்டு தடவை தந்தி கொடுத்தும் நீங்க வராததால என்னை நேரிலேயே போய் தகவல் சொல்லி வரச் சொன்னாருங்க" என்றான் ஹாலில் அமர்ந்திருந்த விஜயனிடம். உள் அறையில் இருந்து ஜானகி எட்டிப் பார்ப்பது தெரிந்தது.

"என்ன விஷயமாம்?"

"ஏதோ உயில்னு சொன்னாருங்க..."


"அப்படியா?" என்ற விஜயனின் பார்வை பிரகாசமானதைத் தெளிவாய் உணர்ந்தாள் ஜானகி.

"நீங்க வர்றச்ச ஜானகி அம்மாவையும் அழைச்சுட்டு வரணுமாம்" என்றான் உள் அறையைப் பார்த்து.

"எதுக்கு?"

"சொல்லச் சொன்னாரு... சொன்னேனுங்க..."

விஜயனும், ஜானகியும் வீட்டில் நுழைந்தபோது எதிரே இருந்த சுவரில் பூவுடன் விசாலம் படத்தில் புன்னகைக்க - ஊஞ்சலில் தளர்வாய்ப் படுத்திருந்தார் கிருஷ்ணமூர்த்தி.



சுரங்க விபத்துகளைத் தடுப்பதற்காக நியமிக்கப்பட்ட விசாரணைக் குழுவின் தலைவராக சர்.ஹம்ப்ரி டேவி சென்றிருந்தார். சுரங்கத்தைப் பார்வையிட்டார். அதன் நிர்வாகிகளைக் கண்டு பேசினார். "வெடிமருந்துகள் எல்லாம் பத்திரமாக இருக்கின்றனவா?" எனக் கேட்டார். "பத்திரமாயிருக்கின்றன" என நிர்வாகிகள் பணிவுடன் கூறினார்கள். வெடிமருந்துகளை எல்லாம் எங்கே வைத்திருக்கிறீர்கள்" என்று கேட்டார் டேவி. "அந்த வெடி மருந்து மூட்டைகளின்மீதுதான் தாங்கள் அமர்ந்திருக்கிறீர்கள்" என்று பதில் வந்தது.

ஆதாரம் : "நகைச்சுவை அறிவியல்" என்ற நூலிலிருந்து.

- க.ச. மணியன்.

இவர்களைக் கண்டதும் தலையணையின் கீழ் கையை விட்டுப் பழுப்பு நிறப் பேப்பர் கட்டைத் தந்தார்.

சட்டென்று அதைப் பிடுங்கி சரசரவென்று படித்த விஜயனின் முகம் லேசாய் கறுத்தாலும் - உடனே மகிழ்ச்சிக்கு வந்தவனாய், "நினைச்சேன்... அப்பவே நினைச்சேன். மாமியாரும், மருமகளும் அப்படி இழைஞ்சப்பவே நினைச்சேன், அடியேய்... நான் கேட்ட அந்த மெயின் ரோடு இடத்தை உன் பேருக்கு எழுதி இருக்காங்க, இப்ப மட்டும் என்ன கெட்டுப் போச்சு? நம்ப ஊருக்குப் போனதும் உயில்படி உனக்குச் சேர வேண்டிய அந்தச் சொத்தை என் பேருக்கு மாத்தி எழுதிட்டா முடிஞ்சுது காரியம். சரி... கிளம்பு பொழுதோட போய்ச் சேருவோம்..."

கிருஷ்ணமூர்த்தியையே பார்த்துக்கொண்டிருந்த ஜானகி, "நான் வரலைங்க" என்றாள். குரலில் உறுதியிருந்தது.

"ஆ... ரெண்டு நாள் இருந்து ஆறுதல் சொல்லிவிட்டு வரலாங்கிற பச்சாதாபமா... இரு... வேணாம்னு சொல்லலை. ஆனா இப்ப இல்லை. ஊருக்கு வந்து ரிஜிஸ்டரார் முன்னால கையெழுத்தைப் போட்டுட்டு வந்து சாவகாசமாயிரு...!"

"மொத்தமா வரலைன்னு சொன்னேங்க... இன்னொண்ணையும் சொல்றேன் கேட்டுக்குங்க.. அந்த இடத்தை உங்க பேருக்கு மாத்தி எழுதற உத்தேசமும் இல்லீங்க...

அதிர்ந்தான், "என்னடி உளர்றே?"

"உளறலீங்க... உண்மையைத்தான் சொல்றேன். இனி இந்த வீட்டை விட்டு என் உடம்பு வெளியே போச்சுன்னா அது உயிரில்லாமதாங்க போகும். என்னிக்குச் சொத்தைக் கேட்டு அத்தையோட உயிரை ஒரேயடியாய்ப் போக வைச்சீங்களோ... அன்னிக்கே உங்களை நான் வெறுத்துட்டேன். இதோ படுத்து இருக்காரே மாமா... அவரோட காலமும் சீக்கிரமா முடியறதை நான் அனுமதிக்க மாட்டேன். நீங்க போகலாம்... என்னிக்கு நீங்க உங்க மனசாட்சிக்குப் பயந்து நல்ல மனுஷனா மாறிட்டதா நினைக்கறீங்களோ... அன்னிக்கு வரலாம்" என்று கூறி விட்டு ஊஞ்சலில் படுத்திருந்த கிருஷ்ணமூர்த்தியின் கண்ணீரைத் துடைத்தாள் ஜானகி.



காட்டுப் பூணூல்

அப்பாவுக்கும் எனக்கும் அடிக்கடி தகராறு வருவது சகஜம். சில விஷயங்களில் அப்பாவின் லாஜிக் எனக்குப் பிடிப்பதில்லை. பழைய பழக்க வழக்கங்களில் அவருக்கு இருந்த அதீத நம்பிக்கையை நான் வெறுத்தேன். முன்னோர்கள் ஆரம்பித்து வைத்திருக்கும் ஒவ்வொரு பழக்க வழக்கத்திற்கும் விஞ்ஞான ரீதியாய் சம்பந்தம் இருப்பதாக வாதாடுவார். ஒரு சிலவற்றில் இருக்கக்கூடும். ஆனால் எல்லாவற்றிலும் இருப்பதாக என்னால் ஒத்துப்பாட இயலவில்லை. நான் ஏதேனும் மறுத்துப் பேசினால் அவர் முகம் சிவக்கும். கண்களில், ரௌத்ரம் தெரியும். உடனே நான் வாய் மூடிக் கொள்ள வேண்டும். இல்லா விட்டால் நிச்சயம் அன்று முழுக்க ஏதாவது ஒரு பொருளின் மீது தன் கோபத்தைக் காட்டிக் கொண்டேயிருப்பார். இதனாலேயே அதற்கும் மேல் வாதிட முடியாமல் நான் மௌனித்து விடுவேன். மொத்தத்தில் அவர் என்னை அடக்கி ஆள நினைப்பதாக எனக்குள் வெறுப்பும், எரிச்சலும் வந்தன.

என் பன்னிரண்டாவது வயதிலேயே எனக்கும் அவருக்கும் போர் மூள ஆரம்பித்து விட்டது. நான் படித்தது கிறித்துவப் பள்ளியில். வெகு தொலைவில் உள்ள பள்ளிக்கு என்னைத் தனியே அனுப்பப் பயந்தும் இந்தப் பள்ளி வீட்டுக்கருகிலேயே இருந்ததாலும் என்னை அதில் சேர்த்தார்கள். என் நண்பர்கள் அனைவருமே கிறித்துவர்கள்தான். அவர்கள் பெரும்பான்மையாகவும், நான் ஒரே ஒருவன் சிறுபான்மையாகவும் போய் விட்டதால் நான் பெரும்பாலும் எங்கள் ஜாதி மத சம்பிரதாயங்களைப் பற்றி அவர்களிடம் பேசக் கூச்சப்படுவேன். இதை ஒரு வகை காம்ப்ளெக்ஸ் என்று கூடச் சொல்லலாம்.

இந்நிலையில் பன்னிரண்டாம் வயதில் நான் காலடி எடுத்து வைத்த போது எனக்கு உபநயனம் பண்ணப் போவதாக அப்பா சொன்னபோது எனக்குக் கூச்சமாக இருந்தது. நான் ஒரே பிள்ளை என்பதால் மிகப்பெரிய அளவில் அதை நடத்தப் போவதாக அப்பா எல்லாரிடமும் சொல்லிக் கொண்டிருந்தார். இது நிச்சயம் என் நண்பர்களின் காதுகளை எட்டத்தான் செய்யும் என்று நினைத்தபோது எனக்கு அவமானமாக இருந்தது. எனவே பூணூல் அணியும் பிரச்னையிலிருந்து தப்பிக்கும் மார்க்கத்தை நான் சாப்பாடு தூக்கம் அனைத்தையும் மறந்து யோசித்தேன். ஒருநாள் அப்பாவிடம் நேருக்கு நேர் சொல்லியே விட்டேன்.

"எனக்கு இப்போ பூணூல் போட வேண்டாம்."

"ஏண்டா?"

"எனக்குப் பிடிக்கலை."

"ஏன்?"

"பிடிக்கலைன்னா பிடிக்கலை."

"அதான் ஏன்னு கேக்கறேன்."

நான் சற்றுத் தயங்கி விட்டு, "ஸ்கூல்ல எல்லாரும் கேலி பண்ணுவா" என்றேன்.

"உங்க ஸ்கூல்ல எதைத்தான் கேலி பண்ணலை? இதுக்கெல்லாம் பயந்தா முடியுமா? இது எங்க சம்பிரதாயம்னு அவாகிட்ட சொல்லு. அவாள்ளாம் கோவில்ல ஞானஸ்னானம் பண்ணிக்கலையா? அதைமாதிரி நமக்கு இதுன்னு சொல்லு."

பன்னிரண்டு வயதில் அப்பா சொன்னதிலிருந்த நியாயத்தை உணரும் பக்குவமோ அறிவோ பொறுமையோ எனக்கில்லை.

"நான் போட்டுக்க மாட்டேன்னா மாட்டேன்" என்றேன் தீர்மானமாக. அப்பா ஊஞ்சலிலிருந்து இறங்கி ரெண்டே எட்டில் என்னருகில் வந்து பளாரென்று என் கன்னத்தில் அறைந்தார். எனக்குப் பொறி கலங்கிப் போயிற்று.

அன்று இரவு அனைவரும் நன்கு தூங்கிய பின் நான் வீட்டை விட்டு வெளியேறினேன். எங்கெங்கோ சுற்றியலைந்த பிறகு ஒரு பாழ் மண்டபத்தில் படுத்துக் கொண்டேன். மறுநாள் விடியும் முன்பே ஏதோ ஒரு பஸ்ஸில் ஏறினேன். அவ்வப்போது அம்மா கொடுக்கும் சில்லறைகளைச் செலவு போக உண்டியலில் போட்டு வைத்தது வழிச் செலவுக்குக் கை கொடுத்தது.

ஏதோ ஓர் ஊரில் இறங்கி கால் போனபோக்கில் நடந்தேன். நடைபாதைக் கடைகளில் அரை வயிறும் கால் வயிறும் சாப்பிட்டேன். பஸ் ஸ்டாண்டு ஒன்றில் இரவு தூங்கினேன். ஒரே ஒரு நாள்தான். அதற்குள்ளாகவே என் உடுப்புகளிலும் தலையிலும் ஒரே புழுதியும் அழுக்கும் சேர்ந்து விட்டன. மறுநாள் காலை பத்து மணியிருக்கும். இரண்டு போலீஸ்காரர்கள் கையில் சிக்கினேன்.

அப்பாவுக்கு இரண்டு மூன்று சப்-இன்ஸ்பெக்டர்களைப் பழக்கமுண்டு. அவர்கள் உதவியோடு அப்பா என்னை ரகசியமாகத்

விஜயா சுப்ரமணியம்

தேடியிருக்கிறார். அவர் அதிர்ஷ்டம் உடனே என்னைத் தேடிப் பிடித்து விட்டார்கள்.

வீட்டுக்கு வந்ததும் என்னைக் கொல்லையில் நிற்க வைத்துக் குடம் குடமாய்த் தண்ணீர் விட்டுக் குளிப்பாட்டினாள் என் அம்மா. தண்ணீரோடு அவள் கண்ணீரும் என் மீது விழுந்து வழிந்தது.

"ஏண்டாம்பி இப்டி பண்ணினே?" என்று அவள் கேட்ட போது. "அப்படித்தான் பண்ணுவேன். பூணூல் போட்டா இப்டித்தான் ஓடிப் போவேன்" என்றேன் ஆக்ரோஷத்தோடு.

என் செய்கைகள் அப்பாவுக்கு அதிர்ச்சியளித்திருக்க வேண்டும். எனக்கு உபநயனம் பண்ணி வைக்கும் எண்ணத்தை அவர் அப்போதைக்குக் கைவிட்டு விட்டார். என்னிடம் அதிகம் பேசவோ என்னை மிரட்டவோ கூடப் பயந்தார்.

இரண்டு வருடம் கழித்து மீண்டும் அவர் உபநயனப் பேச்செடுத்தார். நான் உடல்ரீதியாக அவரைவிட உயர்ந்து விட்டதாலோ என்னமோ என்னைத் தன் அருகில் உட்கார வைத்துக் கொண்டு பவ்யமாய், ரொம்ப சிநேகமாய்ப் பேச ஆரம்பித்தார்.

"பூணூல்ங்கறது ரொம்ப உசந்த விஷயம்டா அம்பி! பதினாறு வயசுக்குள்ள. காமம் மனசுல புகுந்துக்கறதுக்குள்ள பூணூல் போட்டுடணும்னு சொல்லுவா. பாகவதத்துல வாமனாவதாரம் எடுத்த அந்த நாராயணனுக்குப் பூணூல் போடறதை எவ்ளோ அழகா சொல்லியிருக்கு தெரியுமா? பிருஹஸ்பதி பூணூல்ல எடுத்துக் கொடுக்க, சூரியபகவான் காயத்திரி மந்திரம் சொல்ல, முஞ்சிக் கயிற்றைக் காசியபர் இடுப்பிலே கட்ட, பூமிதேவி மான் தோல் போர்த்த, தாயான அதிதி கௌபீனம் கட்ட, தேவதை குடை பிடிக்க, சப்தரிஷிகள் தர்ப்பை எடுத்துக் கொடுக்க, சரஸ்வதி ஜபமாலையும், குபேரன் பிட்சாபாத்திரத்தையும் கொடுக்க, உமாதேவி பிட்சையிட உபநயனம் நடந்ததுன்னு சொல்றது பாகவதம். பூணூல் போட்டுண்ட ஒவ்வொரு குழந்தையுமே சாட்சாத் அந்த வாமனாவதாரம் மாதிரிதான்னு சொல்லுவா. உன்னையும் அப்டி ஒரு கோலத்துல, பூரண தேஜஸோட பாக்கணும்னு நாங்க ஆசைப்படறதுல என்ன தப்பு சொல்லு?"

அவர் பேசிய முறை எனக்குப் பிடித்திருந்தாலும் கூடப் பூணூல் என்னும் வெள்ளை நூலால் அவர்கள் என்னைச் சிறையிடுவதாகத்தான் எனக்குத் தோன்றியது. தினமும் இரண்டு வேளையும் மூக்கைப் பிடித்து சந்தியா வந்தனம் சொல்லி, யார் வந்தாலும் அபிவாதயே சொல்லி நமஸ்கரித்து... இதெல்லாம் அர்த்தமில்லாததாகத் தோன்றியது.

இம்முறையும் நான் மறுத்ததும் அப்பாவின் முகம் பேயறைந்தது போலாகி விட்டது. முடிவில்லா கவலையில் ஆழ்ந்து விட்டது போல உடலாலும் மனசாலும் தொய்ந்து போய் விட்டார்.

அதற்குப் பிறகு மேலும் ஐந்தாண்டுகள் ஓடிவிட்டன. நான் பிஸினஸ் மானேஜ்மெண்ட் படித்துக் கொண்டிருக்கிறேன். பன்னிரண்டு வயசிலிருந்ததுபோல் இப்போது படிப்பில் சராசரி ரகமில்லை. நம்பர் ஒன் என்று பெயர் வாங்கியிருக்கிறேன். ஆனாலும் அப்பாவிடமோ அம்மாவிடமோ ஏறுக்கு மாறாகப் பேசுவது என்பது இன்னும் கூடப் பாயசம் சாப்பிடுவது மாதிரிதான். இப்போதெல்லாம் அப்பா என்னோடு அதிகம் பேசவே பயப்படுகிறார்.

அன்று காலை கண்விழித்து என் அறையிலிருந்து வெளியே வந்தேன். கூடம் பெருக்கித் துடைக்கப்பட்டு நாலைந்து மணைக் கட்டைகள் சுவரில் சாத்தி வைக்கப்பட்டிருந்தன. பித்தளைத் தட்டில் பஞ்சபாத்திரத்தில் ஜலமும், எள்ளும் தர்ப்பையும் இருந்தன. ஓஹோ இன்று அமாவாசையா? அப்பா தர்ப்பணம் செய்யப் போகிறாரா? எனக்குச் சிரிப்பு வந்தது. செத்தவருக்கு என்ன தெரியப் போகிறது இன்று எள்ளும் ஜலமும் இறைத்து... சிரிப்போடு எரிச்சலும் எழுந்ததை அடக்கியபடி சோபாவில் உட்கார்ந்து ஆங்கில நாளிதழைப் பிரித்துத் தலைப்புச் செய்திகளை மேய ஆரம்பித்தேன்.

சாஸ்திரி வந்தார். அப்பா சோமன் உடுத்தி தர்ப்பணத்திற்கு உட்கார்ந்தார். பூணூல் இடமும்



வலமுமாக மாறிக் கொண்டிருந்தது.

பித்தளைத் தாம்பாளத்தில் கிழக்கு மேற்காக தர்ப்பைகளைப் பரத்தி தெற்கு நுனியாகக் கூர்ச்சம் வைத்து "ஆயாத பிதஹ" என்று ஆரம்பித்து ஆவாஹனத்தோடு ஆரம்பித்த தர்ப்பண காரியத்தை நான் உற்றுப் பார்த்ததைக் கண்ட சாஸ்திரிகள், "இதுக்கு அர்த்தம் தெரியுமாடா அம்பி? சொல்றேன் தெரிஞ்சுக்கோ! பூணூல் போட்டுக்கலைன்னா என்ன?" என்றவர், "இதுக்குப் பேர் ஆவாஹனம். பித்ருக்களை இந்தக் கூர்ச்சத்துல எழுந்தருளப் பண்றதுன்னு பேர். அப்பறம் ஆஸனம்."

அவர் மேலும் சொல்லிக் கொண்டே செல்ல, திடீரென்று என் உடம்பில் எதுவோ தலை முதல் கால் வரை ஓடி என்னை ஆட்டி வைப்பது போல் தோன்ற நான் சட்டென்று எழுந்து அங்கிருந்து சென்றேன்.


அன்று மாலை நான் வீட்டுக்குள் நுழைந்தபோது உள்ளேயிருந்து அம்மா பெரிசாய்க் கத்தியபடி வெளியே வந்தாள்.

"அம்பி... அம்பி... அப்பாவைப் பாருடா..."


"என்னம்மா என்ன ஆச்சு?" நான் பதறியபடி உள்ளே போக அப்பா உடம்பு தெப்பலாக வியர்வையில் நனைந்து, நெஞ்சைப் பிடித்தபடி துடித்துக் கொண்டிருந்தார். ஹார்ட் அட்டாக்கா? குப்பென்று என் தொண்டைக் குழியை எதுவோ அடைக்க, அவசரமாக ஆட்டோ அழைத்து வந்து அவரை ஆஸ்பத்திரிக்கு அழைத்துப் போக, வழியிலேயே அப்பா மரணம் அடைந்து விட்டார் என்பது ஆஸ்பத்திரிக்குப் போய் டாக்டர் சொன்ன பிறகுதான் தெரிந்தது.

உடம்பில் உள்ள சக்தியெல்லாம் போய் விட்டாற்போல் உணர்ந்தேன். இரவு முழுக்க அப்பாவின் முகத்தையே பார்த்துக் கொண்டு பிரமை பிடித்தவன் போல் உட்கார்ந்திருந்தேன். மறுநாள் அவரை எடுப்பதற்கான ஏற்பாடுகளைச் சுற்றமும் சொந்தமும் செய்து கொண்டிருக்க, சாஸ்திரிகள் அம்மாவிடம், "பிள்ளைக்குப் பூணல் போட்டாச்சோ?" என்று கேட்க, அம்மா அழுது கொண்டே இல்லையென்று தலையாட்டினாள்.

"அப்டின்னா காட்டுப்பூணல் தான்! உம்...! நீ கொடுத்து வச்சது அவ்ளோதானாப்பா? இதுக்கப்பறம் ஊரைக் கூட்டிப் பிரும்மோபதேசம் பண்ணிக்க முடியுமோ? ஏந்துர்ரா அம்பி! நாழியாறது பார். எமகண்டத்துக்கு முந்தி காரியம் ஆகணும்!" சாஸ்திரிகள் என்னைத் தொட்டு உலுக்க, அதுவரை என் நெஞ்சுக்குள் முட்டி மோதிக் கொண்டிருந்த துக்கமும் துயரமும் 'அப்பா ஆ ஆ ஆ' வென்ற சத்தத்தோடு அணை உடைந்து கிளம்ப, கதறிக் கொண்டே அவர் மீது விழுந்து புரண்டேன். "எத்தனை ஆசைப் பட்டாய்...! எத்தனை ஆசைப் பட்டாய்! பாவி நிறைவேற்றாமல் சாகடித்தேனே" என்று சொல்லிக் கொண்டே என் நெஞ்சிலும் முகத்திலும் மாற்றி மாற்றி அறைந்து கொண்டு அழுத என்னைத் தடுக்க அங்கே யாராலும் முடியவில்லை.



அமுதசுரபியின்
'முக்கனி'- திட்டம்



ஸ்ரீராம் டிரஸ்டில் ரூ.3000/- டெபாஸிட் செய்து 6 வருடங்களில் இரட்டிப்பாக ரூ.6000/- பெறுங்கள்.

44 வருடங்களாகத் தமிழகத்தில் தொடர்ந்து வெளிவரும் "அமுதசுரபி" தமிழ்ப் பெருமக்களால் விரும்பிப் படிக்கப்படும் தமிழ் மாதப் பத்திரிகை.

இயல், இசை, நாடகத்துறையின் வளர்ச்சிக்கு ஊக்கம் அளிக்கும் ஸ்ரீராம் நிறுவனங்களின் ஓர் அங்கமான ஸ்ரீராம் டிரஸ்ட், தமிழ் இலக்கிய வளர்ச்சிக்குப் பணிபுரிய 'அமுதசுரபி'யை வெளியிடுகிறது.

அதன் தொடர்பாக வாசகப் பெருமக்களுக்கு இனிய பல நல்ல பலன்களை அளிக்கவே இந்த முக்கனித் திட்டம்.

முக்கனி போனஸ்:

1. ஒவ்வொரு மாதமும் "அமுதசுரபி" மாத இதழ் சந்தா முதலீடு செய்த உங்களுக்கோ அல்லது நீங்கள் விரும்பும் அன்பருக்கோ அனுப்பப்படும்.

   ஆறு வருடத்திற்கு, வருடா வருடம் "தீபாவளி மலர்" பதிவுத் தபாலில் அனுப்பிவைக்கப்படும்.

   நீங்கள் முதலீடு செய்தவுடன் உங்களுக்கு (அன்பளிப்பாக) 8 கிராம் எடையுள்ள பூஜையில் வைப்பதற்கேற்ற வெள்ளிப் பதக்கம் அளிக்கப்படும்.

உங்கள் முதலீட்டிற்கு, ஸ்ரீராம் இன்வெஸ்ட்மெண்ட்ஸ் (Shriram Investments) முழு உத்திரவாதம் அளிக்கிறது.

சந்தா முதலீட்டுத் திட்டத்தில் (டெபாஸிட்) முதலீடு செய்பவர்களுக்கு :

1. தமிழ் அன்பர்கள் தமிழ் இலக்கிய வளர்ச்சிக்கு அளிக்கப்படும் டெபாஸிட் இது.
2. ரூ.3000/-ம் டெபாஸிட் தொகை ஆறு ஆண்டுகள் முடிவடைந்தவுடன் ரூ.6000/-ம் ஆகத் திருப்பித் தரப்படும்.
3. டெபாஸிட் தொகையை டிராப்ட்டாகவோ, செக்காகவோ "ஸ்ரீராம் டிரஸ்ட்" பெயருக்கு கிராஸ் செய்து Account Payee எனக் குறிப்பிட்டு எழுதப்படல் வேண்டும்.
4. டெபாஸிட்டுகளைத் தனியாகவோ கூட்டுக் கணக்காகவோ அளிக்கலாம். திரும்பப் பெறும்போது முதலில் குறிப்பிட்டுள்ள பெயருக்கோ அல்லது எழுத்து மூலம் தெரிவிக்கப்படுபவருக்கோ டெபாஸிட் தொகை அளிக்கப்படும்.
5. ஆறு ஆண்டு காலத்திற்குப் பிறகே டெபாஸிட் தொகை (இரட்டிப்பாக) திருப்பி அளிக்கப்படும்.

கலையும், நிதியும் கலந்து அளிக்கும் ஸ்ரீராம்.

நால் மனிதர்கள்

சுஜாதா ஃபிலிம்ஸ் லிட். நிறுவனமும்,
அமுதசுரபி வெளியீட்டாளர்கள்
ஸ்ரீராம் டிரஸ்டும் இணைந்து நடத்திய
போட்டியில் ரூ. 5,000 பரிசு பெற்ற நாவல்



பாப்ரியா

17

சின்னாளப்பட்டிக்குத் திரும்பியவுடன் ராஜப்பாவிற்குக் கிடைத்த இரண்டு செய்திகளுமே எப்பேர்ப்பட்ட மனதையும் நொறுங்கி விடச் செய்கின்ற செய்தியாகத்தான் இருந்தது.

வருடங்களின் இடைவெளியில் பெற்று வளர்த்த மண்ணின் வாசனையைக்கூட அனுபவிக்க முடியாதபடி 'அஞ்ஞானவாசம்' போல காரைக்குடியில் இருந்துவிட்டுத் திரும்பியவுடன் இப்படிச் செய்திகள் தனக்காகக் காத்துக் கொண்டிருந்தது போல நினைத்துக் கொண்டார் ராஜப்பா.

சின்னாளப்பட்டி நுழைவிலேயே சிநேகிதன் சந்திரசேகரன் முகவாட்டத்துடன் வந்து நின்ற போது ராஜப்பாவினால் புரிந்துக்கொள்ள முடியவில்லை. முதலில் வலிந்து சிரித்த போதும், சந்திரசேகரனின் முகச்சாயல் காட்டிக் கொடுத்து விட்டது. ராஜப்பாவின் கையில் இருந்த பையையும் ராஜம்மாவிடம் இருந்த பையையும் கேட்டே வாங்கிக்கொண்டார் ராஜசேகரன்.

'ஊரில் எல்லாம் சவுக்கியமா?' என்ற ராஜப்பாவின் கேள்விக்குப் பதிலாக 'ம்' என்ற பதில் மட்டுமே வந்தது.

"என்ன சந்துரு. ஒரு மாதிரியா இருக்கே நானும் பஸ்ஸை விட்டு இறங்கனப்போ இருந்து பாக்கறேன் முகமே உனக்கு வாட்டமா இருக்கு. பேச்சிலே தெளிவே காணோம் என்ன காரணம்... இத்தனைநாள் கழிச்சி நான் வந்திருக்கேன். ஊர்லே... இப்படி இப்படி நடந்துச்சி இவங்க இவங்க இப்படி நாட்டாமை பண்ணுனாங்க, நாங்க இப்படியெல்லாம் இருந்தோம். நெசவாளிங்க இப்படி இப்படி இருந்தாங்கன்னு புட்டுபுட்டு வைப்பியா... இப்படி என்னமோ கட்டினவளைப் பறிகொடுத்த மாதிரி இருக்கியே என்ன விஷயம்ப்பா?"

ராஜசேகரைப் பார்த்து ராஜப்பா கேட்ட கேள்விகளுக்கு உடனடியாகப் பதில் சொல்லுவது மாதிரி தெரியவில்லை ராஜசேகர். ஒரு முறை திரும்பி ராஜப்பாவையும் ராஜம்மாவையும் பெண்களையும் ஏதோ ஓர் அர்த்தபுஷ்டியில் பார்த்துவிட்டு 'வீட்டுக்கு வாங்க போய் பேசிக்கிடலாம்' என்று சொல்லிவிட்டு நடையை வேகமாக்கினார்.

அதற்குள்

அந்த வீதியில் விடியற்காலையிலேயே ஊரின் மண்ணை மிதித்த விருந்தாளியாய் ராஜப்பாவும் குடும்பமும் வந்து கொண்டிருந்த விஷயமும் அந்த வீதிக்கே தெரியப் போய்,

கொஞ்ச நேரத்தில் 'திமுதிமு'வென்று ஆண்களும், பெண்களுமாய் அவர்களைத் தொடர ஒரே ஆச்சரியமாக இருந்தது ராஜப்பாவிற்கு.

அவர் அதிசயப்பட்டதோ, ஆச்சரியப் பட்டதோ கணநேரம்கூட நிலைக்கவில்லை. கூட்டத்தின் நெரிசலை விலக்கிக்கொண்டு நடுத்தர வயதுடைய இரண்டு பெண்கள் முந்தியடித்துக் கொண்டு ஓடிவந்து ராஜப்பாவை ஒருத்தியும், ராஜம்மாவை ஒருத்தியும் கட்டிப்பிடித்துக் கொண்டு 'கோ'வென்று அழத் தொடங்கினார்கள். கூட்டத்தில் இருந்தவர்களும் 'கசமுசா' என்று அடித்தொண்டையில் பேசத் தொடங்கினார்கள்.

ராஜப்பாவிற்கு விஷயம் ஒன்றும் புரிய வில்லை. வருஷ இடைவெளிகளில் ஊருக்கே திரும்பி வந்திருக்கும் தன்னையும் மனைவியை யும், பிள்ளைகளையும் பார்க்கத்தான், வீடு போய்ச் சேர்ந்தவுடன் சிநேகிதர்கள், பக்கத்து வீட்டுப் பெண்கள் என்று வந்து சேமநலம் விசாரிப்பார்கள் என்றுதான் கற்பனை செய்து கொண்டே வந்தார்.

இங்கு வந்தவுடன் நிலைமையே மாறிப் போயிருந்ததற்குக் காரணம்தான் என்ன வென்று பிடிபடவில்லை.

நடுத்தர வயதுடைய பெண்கள் கட்டிப் பிடித்து அழுவதற்கான முக்கியமான விஷயம் எதுவாக இருக்கும் என்று யோசித்துப் பார்த்த தில் சிந்தனைக்குத் தோல்விதான்.

அழுதுபுலம்பிய பெண்கள் காரணத்தைச் சொல்லி அழுதிருந்தால் இந்த யோசித்துப் பார்க்கும் நிலைமை தனக்கும் ராஜத்திற்கும் பிள்ளைகளுக்கும் வந்தே இருக்காது என்று நினைத்துக்கொண்டார்.

"வழி விட்டு நடப்பியா, இப்படிச் சந்தைக்கு போன ஜனங்கமாதிரி அடைச்சி நின்னுட்டா, களைப்பிலே வர்றவங்க எப்படி கஷ்டப் படுவாங்க. சிறுமலை வெயிலு முதுகு தண்டைப் பொளக்குது? என்ன விஷயம் இருந்தாலும் வீடு போய் பேசிக்குவியா... இங்கேயே 'பஞ்சாயத்து' கூட்டம் போட்டுருவிக போலிருக்கு. தள்ளுங்க தள்ளி வழிய விடுங்க" என்று அதட்டலான சத்தம் போட்டார். அப்போதுதான் குடிசையி லிருந்து என்னவோ ஏதோ என்று சத்தம் கேட்டு வெளியே வந்தார் வயதான பெரியவர் ஒருவர்.

ஜனங்கள் கலையத் தொடங்கினார்கள். ஆனாலும் ஒருசிலர் மட்டும் ராஜப்பாவின் குடும்பத்தைச் சுற்றிப் பாதுகாப்புக்குத் தொடர்ந்து வந்ததுபோல, வந்தார்கள், கூட் டத்தில் அடித் தொண்டையில் பேசியவர்களின் வார்த்தைகள் எல்லாம் காற்றில் கரைந்து போனது.

ராஜப்பாவிற்கு 'என்ன விஷயம் ஏதுவிஷயம்' என்று மனதிற்குப் பட்ட சந்தேகக் கேள்வி களுக்கு, வீட்டின்முன் நின்ற வரைக்கும் பதிலே கிடைக்கவில்லை.

ராஜப்பா தன் ஜிப்பாவிலிருந்து எடுத்துக் கொடுத்த சாவியைச் சந்திரசேகரன் வாங்கி, பூட்டைத் திறந்து கதவுகளை ஒருக்களித்தபடி திறந்தார். பூட்டி அதிகநாட்கள் ஆனபடியால், கதவைத் திறந்ததும் உள்ளே இருந்து பழக்க மான காற்றும் பட்டுப் பாவு நூலின் வாசமும் கலந்து வெளியே வந்தது.

கூட வந்தவர்களில் சிலர் வெளியே திண்ணையில் உட்கார்ந்து கொண்டு 'தஸ்புஸ்', என்று பெருமூச்சு விட்டுத் தங்களை ஆசுவாசப் படுத்திக்கொண்டார்கள்.

வழியில் கட்டிப்பிடித்த பெண்கள் மூக்கைச் சிந்தி, முந்தானைத் தலைப்பால் முகத்தைத் துடைத்தபடி மறுபடியும் உள்ளே போனார்கள், கூடவே இன்னும் சிலபெண்கள்.

அவர்களைப் பார்த்தவுடன் ராஜப்பாவிற்கு என்னமோ மாதிரி இருந்தது. 'வாங்க' என்று மட்டும்தான் சொல்ல வந்தது அவரால்.

சந்திரசேகர் அதற்குள் வெளியே போய் 'லோட்டா'வில் காபி வாங்கிக்கொண்டு வந்து ஆளுக்கொரு டம்ளரில் ஊற்றிக் கொடுத்தார்.

அதைக் குடித்துவிட்டு ஜன்னல் வழியே நோட்டம் போட்டு பார்வையை உள்ளே திரும்புவ தற்குள், வந்த பெண்கள் அழத் தொடங்கி விட்டார்கள், அவர்கள் அழ ஆரம்பித்தவுடன் அதைக் கேட்டுவிட்டு வந்ததுபோல் ஆண்களும் பெண்களுமாய் உள்ளே வர ஆரம்பித்தார்கள்.

அழுது கொண்டிருந்த பெண் ஒருத்தி தன் தம்பி 'கனகின்' பெயரைச் சொல்லி 'மகனே' என்ற முறையில் தன்னைக் கட்டிப்பிடித்துக் கொண்டபோதுதான் அதிர்ச்சி அடைந்தார் ராஜப்பா.

அவருக்கு என்ன செய்வதென்றே புரிய வில்லை. தம்பி 'கனகின்' பெயரைக் கேட்ட மாத்திரத்தில் கண்களில் நீர் முட்டிக்கொண்டு நின்றது, தொண்டையில் எதையோ வைத்து அடைத்தது போன்ற உணர்வில் பேச நினைத்த வார்த்தைகள் குரல்வளையிலிருந்து வெளிவர முடியாமல் திக்குமுக்காடின.

கேட்கக் கூடாத விஷயத்தைக் கேட்டுவிட்டது போல, துடிதுடித்துப் போனார், முற்றத்தில் என்றோ ஒருநாள் ஆடி ஓய்ந்து நின்றுப்போன 'தொங்கு ஊஞ்சலில்' இருந்த சங்கிலியைப் பிடித்து இழுத்தபடி சாய்ந்து கொண்டார்.

ராஜம், ராஜப்பாவின் தோளைப் பிடித்துக் கொண்டு அழத்தொடங்கினாள். அம்மாவும், அப்பாவும் அழும் நிலையில், தன் சித்தப்பா வின் நினைவு வந்ததும் ராஜப்பாவின் பெரிய மகளும் சின்னமகளும் சேர்ந்து அழத் தொடங் கியதும்,


வீட்டிற்குள் வந்திருந்த பெண்களும் சேர்ந்து கொண்டு மார்பில் அடித்துக் கொண்டு ராஜப்பாவின் பெண்களைக் கட்டிப்பிடித்துக் கொண்டு அழ ஆரம்பித்து விட்டார்கள்.

ராஜப்பாவிற்கு விஷயம் தெளிவாகப் புரிந்து போனது, தம்பி கனகு போர்முனையிலே

செத்துப் போன விஷயம். அப்படியே கல்லாக உட்கார்ந்து கொண்டார். கண்களில் நீர் பொலபொலவென்று வழிய ஆரம்பித்தது சொல்லி வைத்ததுபோல. தன்னுடைய அப்பா, அம்மா செத்த நேரத்தில்கூட இப்படி அழ வில்லையே. அவர் அப்படி அழுவதைப் பார்த்தவுடன் அங்கிருந்தவர்கள் எல்லாம் சேர்ந்து அழத் தொடங்கி விட்டார்கள்.

'சித்தப்பா சித்தப்பா' என்ற ராஜப்பாவை கட்டிப்பிடித்துக் கொண்டு அழுதார்க பெண்கள் இரண்டுபேரும்.

ராஜப்பாவின் கண்கள் ஹஞ்சலின் எத புறம் உத்திரம் பக்கத்தில் வரிசையாக மாட் வைக்கப்பட்டிருந்த தன்னுடைய திருமண படத்தையும் தம்பிகள் இரண்டு பேரி திருமணப்படத்தையும் வெறித்துப் பார்த்த கனகின் திருமணப் படத்தில் கண்கள் நிலை குத்தி நின்றது.



25 ஆண்டுகளுக்கு முன்... அமுதசுரபி

1967 நவம்பர் இதழ் கைகளில் தவழும்போதே கண் களுக்கு விருந்தளித்துக் கருத் தைக் கவர்கிறது. அப்படி ன்ன அட்டைப்படத்தில்? அர வையில் கவிஞன் ஒருவ னுக்குப் பாண்டியன் மகளே முத்துமாலையைப் பரிசளிப்பது போன்ற எழிலான ஓவிய ல்லவா அது! மாணவ மாண வியருக்கு அட்டைப்படக் கட் டுரைப் போட்டிக்கான ஓவிய மௌனத் தலையங்கம் தெரிவிக் கிறது.

ஆசிரியர்களின் அகமலர வேண்டுமல்லவா? 'ஆசிரியர் சிறுகதைப் போட்டி' 6ஆவது கதை 'குறிஞ்சியும் முல்லையும்' என மலர்கிறது. சி. கண்ணன் எழுதியுள்ளார். இலக்கிய ஆர்வலர்களுக்குத் தேனும் தினையும் இணைந்த இனிப்பு இது!

குடும்பச் சித்திரத் தொடர் குதூகலமளிக்குமல்லவா! 'இத யத்தில் யார்?' என்ற இனிய தொடர் இந்த இதழில் ஆரம்ப மாகிறது. பி.எஸ். சாமிநாதன் படைத்துள்ளார்.

வரலாற்றுப் பிரியர்களுக்குத் தான் சாண்டில்யன் எழுதிய 'பல்லவதிலகம்' உள்ளதே! 21 மற்றும் 22 அத்தியாயங்களைக் கொண்டு மிளிர்கிறது.

புராணத்தை விரும்பும் நெஞ் சங்களுக்குத் 'திரிபுரா ரகசியம்' என்ற புராணத் தொடரை சி.வி. ஸ்வாமி சாஸ்திரிகள் பக்தி ரசம் சொட்டச் சொட்ட வழங்கு கிறாரே! காமனைத் தன் கண் களில் இழுத்துக் கொண்டதால் திரிபுரா தேவிக்குக் 'காமாட்சி' என்ற திருப்பெயர் உண்டான காரணத்தை அறிகிறோம்.

கனகின் மனைவியைப் பற்றிய யோசனை ராஜப்பாவை இன்னும் அசத்தியது போல இருந்தது.

சாந்தமும், அடக்கமும், சாதுர்யமும் கொண்ட கனகின் மனைவி முகம் அடிக்கடி ந்து போனது. வீட்டின் மட்டுமரியாதையாய் பண்கள் எப்படியிருந்தால் நல்லது என்று தாரணமாய் இருந்த அவளின் முகம் ஞாப த்தில் அடிக்கடி ஆரம்பிக்கும்போது ராஜப்பா ின் அனுதாபமான எண்ணங்கள் மிகவும் ஷ்டப்பட்டன.

ராஜம் இருந்த பக்கம் பார்வையைப் படர ிட்டார். ராஜம் முந்தியால் முகத்தைத் துடைத் க் கொண்டிருந்தாள். அழுது அழுது முகம் ீங்கிச் சிவப்பாய் கந்திப் போயிருந்தது. இரண்டு பெண்களும் ராஜத்தின் மடியில் ஆளுக்கொரு மடியில் ஆளுக்கொரு பக்கமாய் லையைச் சாய்த்து அழுதபடியிருந்தார்கள்.

அழுது புலம்பிய பெண்களும், ஆண்களும் இன்னமும் கூடியிருந்த அர்த்தம் புரியாமல் வடிக்கையாய் 'அழுவதையே பார்த்துக் கொண்டிருந்த பையன்களும் சிறுமிகளும் ாசல் பக்கம் ஆள் தனியா நடந்து வரும் சத் ம் கேட்கவே திரும்பிப் பார்த்தார்கள். ஒரே மயத்தில் சந்திரசேகர் கையில் சிறிய மூட்டை ஒன்றைக் கையில் எடுத்துக் கொண்டு வந்து ராஜப்பாவிடம் கொடுத்தார். எல்லோருடைய பார்வையும் அந்தச் சிறிய மூட்டையின் மீதே இருந்தது

அதைக் கையில் வாங்கும்போதே ராஜப்பா வின் உடலே பூகம்பத்தால் நடுங்கியது போல உதறியது. கண்களில் 'குபுக்' என்று ரத்தம் வெளியே கொட்டியது போலக் கொடுமையான உணர்வு, நெஞ்சு ஒருமுறை விம்மி, இதற்குமேல் விம்மினால் வெடித்துவிடும் என்று பயந்து தாழ்ந்தது.

சந்திரசேகர் கொடுத்த மூட்டையை மெது வாகப் பிரிக்கும்போது அவரது ஜாக்கிரதையை யும் மீறி மூட்டையிலிருந்து 'கனகின்' அரக்குச் சிவப்பான 'சில்க்' சட்டை கீழே விழுந்தது. கூடவே ராணுவச் சீருடை.

ராஜப்பா மூட்டையில் இருந்த கனகின் முழுக்கால் டிரவுசரையும் எடுத்துப் பார்த்துப் பெருமூச்சு விட்டார்.

சந்திரசேகரிடம் கேட்டார் சன்னக்குரலில்!

"உங்களுக்குக் கடிதாசி எழுதி ஒருவாரம் இருக்கும்னு நெனெக்கிறேன் ராஜப்பா... உட னடியா உனக்குத் தகவல் தெரிவிச்சரலாம்னு தான் நெனெச்சேன். ஆனா மனசு கேக்கலே. ஏற்கனவே உனக்கு எழுதின தபாலிலே, வீட்டு சமாசாரம் பத்தி எசகு பிசகான வார்த்தை எழுதியிருந்தேன். அதுவே நீ படிச்சா ரொம்ப வும் சங்கடப்பட்டிருப்பே. மனசு வேதனைப் பட்டிருக்கும். கூட, இதையும் தெரிஞ்சா உன் னோட மனசு... எப்படிப்பட்டதுன்னு எனக்குத் தெரியாதா என்ன..? தாம்சமா அனுப்பிச் சிருக்கலாம்... அதுவும் செய்யலே. நீ நேர்லே

ஐந்து எழுத்தாளர்கள் சோந்து எழுதும் தொடர்கதை தான் 'ஐந்தருவி'. இந்த இதழ்ப் பகுதியை குளிர்ச்சியாகவும் இதமாகவும் தருபவர் சோம. மகாதேவன்.

முத்தான மூன்று சிறுகதைகளும் முகிழ்த்திருக்கின்றன. மனைவியை இழந்த ராமமூர்த்தி தன் மகளின் தோழியை மணக்கப் போகிறாரா என வியப்படையும் நமக்கு ஒரு சஸ்பென்ஸ்! 'யாருக்குக் கலியாணம்?' என்ற தலைப்பில் ஆசிரியர் விக்கிரமன் சூடாகவும் சுவையாகவும் விருந்தளித்துள்ளார். எழுத்தாளர் ஒருவர் புரட்சி எழுத்தாளராக மாறிய விந்தையை விளக்குகிறது 'போலி' என்ற கதை. எழுதியவர் எஸ். கிருஷ்ணமூர்த்தி.

வெங்கடலெட்சுமி எழுதிய 'அபிராமி' ஒரு பெண்ணுக்குப் பிடிவாதமும் முரட்டுத்தனமும் கூடாது என்ற கருத்தைச் சித்திரிக்கிறது.

இசையை விரும்பும் இதயங்களுக்கு 'வரவீணா மிருதுபாணி' என்ற பகுதி உண்டே! தனம்மாள், கல்பகம் ஸ்வாமிநாதன், ரங்கநாயகி ராஜகோபாலன், பர்வதவர்த்தனி பாலசுப்ரமணியம் ஆகியோர் வீணைத் துறையில் பெற்றிருந்த திறன்களை நன்கு விளக்குகிறது இந்த அரிய கட்டுரை.

உழைக்கும் வர்க்கத்தை ஊக்கப்படுத்த, 'உழைப்பே உறுதுணை' என்ற பகுதி. 'வெற்றிப்பாதை நம் கண்களில் தெரிய, ஊக்கமும் இடைவிடாத முயற்சியும் தேவை!' என்ற என். சீனிவாசராவ் பேட்டி அருமை.

பாண தீர்த்தத்தில் நீராட ஆவல்கொண்ட ஆசிரியர் குழு பல இடர்களைச் சந்தித்து, தாமிரவருணியின் கரு அறையைக் கண்டு ரசித்துத் திரும்பியதைச் 'சொந்த டைரியிலிருந்து' என்ற பகுதி சுவையாக விவரித்துள்ளது.

புதுமைச் சித்தனுக்கு நிதி திரட்டும் பணி நெஞ்சைத் தொடுகிறது.

மொத்தத்தில், எல்லா தரப்பு மக்களையும் மகிழ்விக்கும் நோக்கில், திட்டமிட்டு உருவாக்கப்பட்ட உன்னத படைப்பாகவே 1967 நவம்பர் இதழ் திகழ்கிறது!

காரைக்குடி.
தங்கம்பழநிவேலு

வந்தப்புறமா, தெரிஞ்சிட்டா போதும்னு நெனெச்சிட்டுதான் கடுதாசி எழுதலே. அதுவில்லாமே, உனக்கு ரத்தக்கொதிப்பு ஆரம்பமாயிருக்குன்னு நம்ப சிநேகிதன் ஹோமியோபதி டாக்டர் ஜுவா அகஸ்மாத்தா ஒருநாள் சொன்னதும் ஞாபகத்துக்கு வந்திருச்சி..., கடிதாசி படிச்சி விஷயத்தைத் தெரிஞ்சிட்டு உனக்கு ஏதாச்சும் ஆயிட்டா..., அதாம்ப்பா நான் இதைப்பத்தி எழுதலே. இது தப்பாயிருந்தா..., என்னை மன்னிச்சுக்கப்பா..., என்னோட சிநேகிதனை இழக்கறதுக்கு எனக்குச் சம்மதமில்லேப்பா" கண்ணீருடன் பேச ஆரம்பித்து சிநேகிதன் சந்திரசேகரைக் கட்டிப்பிடித்து கொண்டார், ராஜப்பா.

18

"என்ன ராஜப்பா, என்ன யோசனை பண்ணிட்டு இப்படி உக்காந்துட்டே.

நேத்து மொதலாளிகிட்டே போயிட்டு வந்த சங்கதி ஏதாச்சும் இப்படி யோசிக்க வச்சிருக்காக்கும்?"

சந்திரசேகரின் பேச்சைக் கேட்டு நிதானத்திற்கு வந்தார் ராஜப்பா. ஒருகணம் தன் சிநேகிதனின் முகத்தை ஏற இறங்கப் பார்த்தார் லேசாய் சிரித்துக் கொண்டவர், அவரை உட்காரச் சொன்னார். திண்ணையில் சாவகாசமாய் உட்கார்ந்து திண்ணைக்கு வெளியே ஓட்டியபடி ஒடிய ஜலதாரையில் எச்சிலைக் காரி உமிழ்ந்து துப்பினார்.

அவருடைய நிதானம் சந்திரசேகருக்குத் தெரிந்த விஷயம் என்றாலும், இப்போது அவர் சிரித்த சிரிப்புக்கு அர்த்தத்தைக் கண்டுபிடிக்க முடியவில்லை, விளங்கவும் இல்லை.

"நான் எவ்வளவு அக்கரையா கேக்கறேன்... நீ என்னடான்னா என்னமோ பச்சைக் கொழந்தையாட்டமா ஒண்ணுமே புரியாதபடி சிரிக்கிறே, சொல்லிட்டுச் சிரிச்சாக்கா நானும் சிரிக்கலாமில்லே... அப்படிச் சிரிக்கற விஷயமா இருந்தாக்க...!"

சந்திரசேகரின் வார்த்தைகளில் ராஜப்பாவிற்குள் நெருங்கிய சிநேகிதன் என்ற பெயரில் பிடிப்பு இருந்தது. ஆதங்கம் இருந்தது. அதனால் இந்தக் கேள்வியைக் கேட்டுவிட்டு சிநேகிதனின் முகத்தை வெறித்துப் பார்த்தார்.

"என்ன சந்துரு, எதுக்கு இப்படி இவ்வளவு மனசுவுட்டுட்டே. வருத்தப்படறதும், வர்றதை அனுபவிக்கப் போறதும் நான்தானே, நீ எதுக்காக இவ்வளவு வருத்தப்படறே?"

"சரிப்பா, வர்ற நல்லது கெட்டது எல்லாமே நீதான் அனுபவிக்கப்போறே,யாரு இல்லேன்னு சொன்னது இப்போ. ஆறுதலா ஏதாச்சும் கேக்கலாம் நேத்து மத்தியானமா முதலாளி வீட்டுக்குப் போயிட்டு வந்தப்போ, நான் மூக்கு

கடையிலே நின்னு புஸ்தகம் பாத்துட்டிருந்தேன். நீ வர்றது பார்த்ததும் புஸ்தகத்தை மூடி கடைக்காரர்கிட்டே கொடுத்திட்டுத் திரும்ப றப்போ, என்னோட சகலை, அவசரமா வேறு ஜோலி இருக்குன்னு கூட்டிட்டுப் போயிட்டாரு. திரும்பி வர்றப்போ அங்கே இங்கேன்னு கூட்டிட்டுப் போயிட்டாரு. திரும்ப வர்றப்போ அங்கேன்னு நின்னு வர ராத்திரி ஆயிரிச்சு. இல்லேன்னா நேத்தே சந்திச்சு விவரம் கேட்டிருப்பேன். இருந்தாலும் ஒண்ணு, நல்லது கெட்டதுன்னு உனக்கு வந்தாலும் என்னாலே ஏதாச்சும் முடிஞ்சுதுன்னா நிச்சயம் செய்வேன் ஏத்துக்கணும். பெரிய பொண்ணுக்குதான் சீரு..., அது இதுன்னு இந்த ஊர்லே சிநேகிதர் வூட்லே பொம்பளைங்க சேந்து செஞ்சிப் பாக்க முடியலே. நேத்துதான் வீட்லே சொன்னா, சின்னப் பொண்ணு சடங்காயிருச்சாமே! சந்தோஷம். என்னோட வீட்லே வச்சிதான் இந்த சின்னப் பொண்ணு சடங்கை மனசார செய்யணும்னு வீட்லே ஆசைப்படறா. இப்ப ஏற்பட்ட கனகு பிரச்னையிலும் வீடு சம்பந்தப் பட்ட பிரச்னையிலும் உன்னோட மனசும் சரி தங்கச்சி மனசும் சரி..., சரியில்லேன்னு தோணுது. அதுவுமில்லாமே கருப்பு கருமா தின்னு இப்பதான் இந்த வீட்டிலே நடந்து முடிஞ்சிருக்கு. அதனாலேயும் உன்னோட தம் பிங்க சம்சாரங்க இப்ப வீட்டுக்கு எப்படி வரு வாங்க, சொந்தக்காரனுங்க எப்படி வருவாங் கன்னு சொல்ல முடியாது. நீயும் மறுக்காமே, தங்கச்சியும் மறுக்காமே கண்டிப்பாக இதை ஒத்துக்கணும். இதை நீ ஒண்ணும் பெரிசா எடுக்க வேணாம். உன்னாலே முடியாதுங்கற விஷயம்னு இல்லே இது. காலாகாலத்திலே இதையெல்லாம் செஞ்சிட்டா வீட்டுக்கு நல்லது, பெத்தவங்களுக்கும் சரி, கூடப் பொறப்பு களுக்கும் சரி நல்லதுன்னு நெனெச்சித்தான் இதைச் செய்யணும்னு தோணிச்சி. சிநேகிதன் நான் செய்யாமே வேறு யாரு செய்யப் போறா..., தப்பா மட்டும் எடுக்க வேண்டாம். அவ்வளவு தான் என்னாலே சொல்ல முடியும். ஆமா..."

அப்படியே ஒருமுறை தன்னுடைய சிநேகி தனைப் பார்த்தார் ராஜப்பா. பேச வாய் திறந்தபோது வார்த்தைகள் வரவில்லை நாக்கு தழுதழுத்தது. கண்கள் மூடி மூடித் திறந்தன.

'பந்த பாச உறவுகள்' என்பது ரத்தம் சம்பந்தப்பட்ட விஷயம் அல்ல, வெளியுலகில் சிநேகத்திலும் உண்டு என்று அறிந்து கொண் டது போல, சந்திரசேகரின் இரண்டு கைகளை யும் சேர்த்துப் பிடித்துக் கொண்டார்.

அகஸ்மாத்தமாக வெளியே துணி காயப் போட வந்த ராஜம், இந்த வார்த்தைகளை யெல்லாம் கேட்டுவிட்டு ஓரமாய் அங்கேயே உட்கார்ந்து விட்டாள். தன் சொந்தங்களின் பிரிவை அவளால் தாங்க முடியாதது போல இருந்தது அவளின் சோகமான கோலம்.

பிழைக்கப்போன மண்ணில் ஒரு பெண் சடங்காகி, சிநேகிதர் ஒருவரால் செய்யப்பட்ட கடமையும்....,

பிறந்த மண்ணிற்கு வந்தபோது இன்னொரு பெண் சடங்காகி அதுவும் சிநேகிதர் ஒருவரால் செய்யப்படப் போகும் நிகழ்ச்சியையும் நினைத்து மனம் நொந்து போய், நாடி நரம்பு கள் செயல் இழந்து போய் ஓட்கார்ந்து விட்டது போல இருந்தது ராஜம் உட்கார்ந்திருந்தது. தன் ஒரே மகன், இரண்டு கொழுந்தனார்கள், இரண்டு முறையில் வந்த தங்கைகள், இன்ன மும் தன் புருஷனின் நெருங்கிய சிநேகிதர்களின் அவர்கள் வீட்டுப் பெண்கள் எல்லாம் ஒன்றாகச் சேர்ந்து சொந்தவீட்டு முற்றத்து 'ஊஞ்சலில்' மகள்களை உட்காரவைத்துப் 'பூப்புநீர்சடங்கு' செய்ய வேண்டிய நிலையில்லாமல் போய், தன் மகள்கள் இரண்டுபேரின் சடங்கையும் சொந்தக் காரர்களும் ரத்த சம்பந்தமில்லாதவர்களு மின்றி... ராஜம் மிகவும்தான் சோர்ந்து போய் விட்டாள்.

"சரி என்ன சொன்னாரு மொதலாளி... அது சொல்லு முதல்லே... கேப்போம். எதை யெதையோ பேசி பேசவந்ததை வுட்டுப் புட்டோம். ஆனா, ஒன்னு என்னோட சம்சாரம் சொன்ன விஷயத்தை மட்டும் ஞாபகப்படுத் தறதுக்கு ஒரு நல்ல நேரம் கெடச்சிருச்சி இப்போ, இதுலே தான் இப்போ எனக்கு சந்தோஷம்".


"இல்லே நம் மொதலாளி 'சின்ன பையன்ங் கறது' சரியாதா இருக்குது, அனுபவம் இல்லே சந்துரு, அவரோட அப்பா அப்படி இல்லே..., எதுலேயும் நியாயம் - தர்மம் - நீதி - ஜாதி ஜனங் கன்னு பார்த்து, யாருக்கும் தீங்கு வரக் கூடாதுன்னு நெனைக்கற தர்ம மனசு. இவரு கிட்டே அதெல்லாம் நாம எதிர்பார்க்கறது தப்புன்னு தோணுது. ஏற்கனவே நான் 'மாஸ்டர் வீவங்கருகிட்டே' உள்ள தவறான போக்கைச் சுட்டிக் காட்டினதிலேயே என்மேலே வெறுப்பு. இன்னொரு விஷயம், 'விசைத்தறி' விஷயம் பற்றி நான் எல்லா எடத்திலேயும் பேசறது. காரைக் குடிக்கு நான் போனப்ப, விசைத்தறி விவகாரம் அத்தோட முடிஞ்சி போயிரிச்சுன்னு நெனைச் சிருக்காரு. இவரு மட்டுமல்ல, இவரு மாதிரி இருக்கற முதலாளிங்க எல்லாமே சந்தோஷமும் பட்டிருக்காங்க. இப்போ, நான் திரும்பி வந் திருக்கறதிலே மறுபடியும் அவுங்களுக்கு பிரச்னை வரும்னு நெனைக்கறாங்க.

"இதெல்லெ இன்னும் ஒன்னும் பாக்கணும் நம்ப, நம்ம ஜனங்களுக்கு இந்த தொழிலே விட்டா வேறு தொழில சரியா செய்யத் தெரியுதான்னு வேறே கேக்கறாங்களாம்? ஏதாச்சும் செஞ்சி ஜனங்களுக்கு உபகாரம் செய்யலான்னா...., இப்படி வேறே பேசிக்கறாங்களாம் மச்சு வீட்டுக்காரருங்க..."

"எப்படியோ, சங்கம்னு நீ ஆரம்பிச்சு வச்சிட்டுப் போனே நல்லபடியா, இப்போ பாரு, பூஞ்சோலை சாத்தான் கோயில் வீதி, ராமர் கோயில் வீதி, மேட்டுப்பட்டின்னு ஒவ்வொரு வீதியிலும் 'சங்கம் சங்கம்ன்னு' ஆரம்பிச்சு நல்லபடியா தொழில் செய்யறாங்க. தலைவருங்க பேரு எப்படியோ இருந்துட்டுப் போவட்டும், ஒருத்தருக்கு ஆகற தலைவரு இன்னொருத்தருக்கு ஆகாது.., எப்படியோ, நூலு பட்டுன்னு நெசவாளிக்குக் கொடுத்து தொழில் செய்ற அளவுக்கு ஊருக்குள்ளே மாத்தம் வந்திருக்கறது சந்தோஷப்படற விஷயம்தான். வேண்டிய அளவுக்கு நூலும் பட்டும் கெடைக்கறதனாலே தொழில் நிச்சயமா இனிமே தொடர்ந்து நடக்கும். அதுலே சந்தேகமே இல்லே."

"சரி... சரி அதுலே சந்தேகம் இல்லே. என்னோட பொழப்புதான் சந்தேகமா இருக்கு..., மகன் கடுதாசி போட்டிருக்கான், எல்லாம் முடிஞ்சிருச்சாம் ;படிப்பெல்லாம், படிக்கறப்போகூடவே இருக்கற சிநேகிதனோட கம்பெனியிலே அநேகமா வேலை கெடக்கலாம்னு நம்பறதா எழுதியிருக்கான். இவன் வந்தாதான் சந்துரு எனக்கு மனசே நிம்மதிப்படும். முன்ன மாதிரியெல்லாம் ரொம்ப நேரமா கண்விழிச்சி தறிகுழியிலே நெசவு நெய்ய முடியறதில்லே. காரைக்குடியிலேயே முதுகுத்தண்டு வலி ஆரம்பமாயிருச்சி,கைகாலு கூட இத்துப்போன மாதிரி சடப்பா இருக்கு... பொண்ணுங்க ரெண்டும் தோளுக்கு வந்தாச்சு. இனிமேதான் என்னோட வாழ்க்கையே கேள்விக்குறியா இருக்கு. யோசிச்சுப் பாக்கத் தோணுது".

"ஆமா... இப்போவாவது பொண்ணுங்க ஞாபகம் வந்திருச்சே சந்தோஷம். ஒருவிஷயமா நான் சொல்றேன், தப்பா நீ எடுத்துக்கலைன்னா... சொல்லலாம்னு இருக்கேன். கொஞ்ச நாளா எனக்கு இந்த யோசனை, உங்ககிட்டே சொல்லலாம்னு..., ஆனா, நீ என்ன நெனெச்சிருக்கியோன்னுதான் தயக்கமா இருக்கு..."



சொன்னபடி நடந்தது

நாஸ்ட்ராடாமஸ் என்பவர் பிரான்சில் 1503 இல் பிறந்தார். யூதர்களாக இருந்து கிறிஸ்தவர்களாக மாறிய குடும்பம். டாக்டருக்குப் படித்துத் தொழில் செய்த அவர் 1555 இல் பத்து புத்தகங்களை வெளியிட்டார். அவற்றில் 100 பாடல்களில் எதிர்காலம் பற்றிய ஆருடங்களைக் கூறியிருந்தார்.

தமது முடிவு குறித்தும் சரியான நாளை அவர் குறிப்பிட்டார். பிரெஞ்சு மன்னர் இரண்டாம் ஹென்றி விசித்திரமான சூழ்நிலையில் இறந்தார். அதை முன்னதாகவே ஒரு விவரம் தவறாமல் கூறியிருந்தார். பதினாறாம் லூயி மன்னனும் அவனுடைய மனைவி மேரி அன்டாய்னட்டும் உயிர் பிழைக்க அரண்மனையிலிருந்து தப்பி ஓடுவார்கள். பின் புரட்சிக்காரர்களிடம் பிடிபட்டுக் கொல்லப்படுவார்கள் என்பதையும் கூறினார்.

நெப்போலியனுடைய எழுச்சி, வீழ்ச்சி, அவன் ஒரு சிறிய தீவுக்கு நாடு கடத்தப்படுவது பற்றியெல்லாம் தெளிவாகக் கூறினார். இங்கிலாந்து அரசர் சார்லஸ் கொல்லப்படுவார். ஆலிவர் கிராம்வெல் அரசராக மக்களால் ஏற்றுக் கொள்ளப்படுவார் என்றும் சொன்னார்.

அவர் எழுதியுள்ளபடி நடந்த வேறு சில நிகழ்ச்சி லண்டனைப் பீடித்த கொள்ளை நோயும் பெருந் தீ விபத்தும். லூயி பாஸ்ட்டருடைய கண்டுபிடிப்பு. எட்டாம் எட்வர்ட் மன்னர் இங்கிலாந்து அரச பதவியைத் துறப்பது. ஸ்பெயினில் பிராங்கோவின் எழுச்சி ஹிட்லரின் வளர்ச்சியும் வீழ்ச்சியும் அவர் எழுதியுள்ளபடி நடந்ததே.

துறைமுகத்துக்கருகே இரு நகரங்களில் உலகம் இதற்கு முன் கண்டிராத பேரழிவு ஏற்படும் என்றும் ஹிரோஷிமா, நாகசாகி அணு குண்டு அழிவு பற்றியும் குறிப்பிட்டிருக்கிறார்.

வடகோளார்த்தத்தில் இந்நூற்றாண்டில் மூன்றாவது உலகப்போர் மூளும். ரஷ்யாவும் அமெரிக்காவும் சேர்ந்து சீனாவைத் தாக்கும். நூற்றாண்டின் முடிவில் போர் நிற்கும். இதனால் பெரும் சேதம் ஏற்படும் என்றும் அவர் கூறியிருப்பது நடந்து விடுமோ என்று அச்சத்துடன் எதிர்பார்க்கப்படுகிறது.

ஆதாரம் : 'அதிசய உண்மைகள்' என்ற நூல்.

— சி. பன்னீர்செல்வன்

"சந்துரு, என்ன இது? உன்னைப் போய்..., நீ பேசறதை வச்சி தப்பா எடுத்துக்குவேனா நான்..! அப்படி நான் தப்பா அர்த்தம் எடுத்துக்குவேன்னு நீ நம்புறியா...?"

சந்திரசேகரின் பிடி கிடைக்காத கேள்வியால் திடுக்கிட்டுப் போனார் ராஜப்பா.

"இல்லே... நீயும் தங்கச்சியும் ஒத்துக்கறதா இருந்தா... என்னோட ஒரு பையன் விசுவநாதனுக்கு உங்க பெரிய பெண்ணை வர்ற முகூர்த்தத்திலே கல்யாணம் பண்ணி வச்சிடலாம்னு நெனைக்கிறேன்.

"உன்னோட தங்கச்சியும்கூட, நீ காரைக்குடிக்குப் போனபின்னாலே பேச்சுவாக்கிலே பேச, கடைசியிலே அப்படியே செஞ்சிட்டா என்னான்னு என்னைக் கேட்டா..., இப்போ நேரம் வந்திருக்கு உன்கிட்டே மனசார பேச, தப்பா தயவு செஞ்சி எடுத்துக்க வேணாம். சீரு - செமத்தை - நகை அது இதுன்னு எதுவுமே வேணாம். உன்னாலே முடிஞ்சதைச் செஞ்சா போதும். வேறு எதையுமே வற்புறுத்தமாதிரி இல்லே. உன்னோட பழைய அந்தஸ்து, குடும்ப கௌரவம் அது இதுன்னு போட்டு குழப்பிட்டு தத்துபித்துன்னு பேசவாணாம். பழையதை யாரு நெனைச்சாலும் கசப்பும் இனிப்பும் நிச்சயமா இருக்கும்.

"இது எதுக்கு நான் சொல்ல வர்றேன்னா, ஓஹோன்னு வாழ்ந்தவங்க கீழே வர்றதும், கீழே இருந்தவங்க மேலே வர்றதும் சகஜம்தான்; இதை நான் சொல்லித் தெரிஞ்சுக்கணும்னு அவசியமில்லே உனக்கு.


"நான் நெனைக்கற மாதிரி இந்தக் கல்யாணம் மட்டும் நடந்திருச்சின்னா நானு மட்டுமில்லே, உன்னோட தங்கச்சியும் ரொம்ப சந்தோஷப் படுவா... என் மகன் ஒத்துக்குவானோ என்னவோன்னு நெனைக்க வேண்டா... இதைப் பத்தியெல்லாம் ஏற்கனவே நாங்க ரெண்டு பேரும் பேசியிருக்கோம் பையன்கிட்டே, அவனுக்கு பூர்ண சம்மதம். சின்னவயசுலே ஓடிப் பிடிச்சு விளையாடின சின்னஞ்சிறுசுங்க தானே. என்ன சொல்றே ராஜப்பா, நீ தங்கச்சியே கேட்டுட்டு சொல்லு அவசரமில்லே. வேறே எதைப்பத்தியும் யோசிக்க வேணா... ஆமா..., சொல்றதைச் சொல்லிட்டேன். என்னோட தாத்தா பெறந்த மண்ணிலே நெசவாளிங்களுக்கு செஞ்ச கொடுமை. இந்தக் கல்யாணம் நடக்கறதாலே கொஞ்சம் அப்படியாவது பாவம் போகட்டுமேன்னு நான் நெனச்சிகிட்டிருக்கேன்.. என்னோட நியாயமான ஆசையை வீணாக்கிடாதே" சொல்லி முடித்துவிட்டு ராஜப்பாவின் தோளைப் பிடித்தபடி எழுந்தார் சந்திரசேகர்.


ராஜப்பா தன் சிநேகிதன் சொன்ன வார்த்தைகளைக் கேட்டு அப்படியே அசந்துப் போய் விட்டார். மனதில் ஒரே நேரத்தில் எண்ணங்கள் மீது சந்தோஷக் குமிழிகள் பெரியதாய் பூத்து மறைந்தன. தன் குடும்ப விஷயங்கள் எல்லாவற்றையும் புடம்போட்ட தங்கமாய், முழுக்கவே நன்றாகச் சாயத்தை நனைத்துக் காயவைத்த பட்டைப்போல கணக்குப் போட்ட சிநேகிதனின் வார்த்தைகள் ஒவ்வொன்றும் தன் அனுபவங்களையும் மீறிக் கொண்டு பறப்பதைப் போன்ற உணர்வை அடைந்தார் ராஜப்பா.

ஒரே வார்த்தையில் தன் சிநேகிதனின் ஆசைக்குச் 'சரி' என்று தலையாட்டி விடக் கூடிய நிலையில் தான் இல்லை என்பது மட்டும் தெரிந்துபோனது.

இரண்டு மூன்று நாட்களில் விபரம் சொல்வதாகச் சொல்லிவிட்டு எழுந்தார். சந்திரசேகரும் ராஜப்பாவின் தோளைப் பிடித்துப் படியிறங்கினார் பாந்துவமாய். இருட்டு படரத் தொடங்கியது வீதியில்..., ராஜப்பா பெருமூச்சு விட்டார்.

தொடரும்...





கம்ப்யூட்டர் இன்ஸ்ட்டியூட்கள் *எதில் சேருவது?*

பொழுதுபோய்ப் பொழுது விடிந்தால் செய்தித்தாளில் புதியதொரு கம்ப்யூட்டர் கோர்ஸ் ஆரம்பித்துள்ள விளம்பரம்! நாங்கள் ஸ்காலர்ஷிப் தருகிறோம்; நாங்கள் கடனுக்கு ஏற்பாடு செய்கிறோம்; எங்கள் நிறுவனம் அகில உலகத் தொடர்புடையது. இப்படி ஒவ்வொரு விளம்பரமும் ஒவ்வொரு வாக்குறுதி அளிக்கிறது. எதில் சேருவது என்று புரியாமல் மாணவர்களும் பெற்றோர்களும் திகைக்கிறார்கள்

எந்தக் கோர்ஸ் சரியானது? எதில் வேலைக்கு உத்தரவாதமுண்டு?

இந்தத் தீர்மானத்திற்கு வருமுன் உங்கள் தேவை என்னவென்று நீங்கள்தான் உறுதி செய்து கொள்ள வேண்டும்.

வாழ்க்கையின் ஒவ்வொரு துறையிலும் உறுதியான சரியான முடிவிற்கு வருவது எளிதல்ல. கம்ப்யூட்டர் துறையும் இதற்கு விதிவிலக்கல்ல.

கம்ப்யூட்டர் கோர்ஸ்களைப் பொதுவாகத் தொழில்முறை (Career) கோர்ஸ்கள், திறன்வழி (Proficiency) கோர்ஸ்கள், அல்லது சான்றிதழ் கோர்ஸ்கள், விரைவுப் பயிற்சி கோர்ஸ்கள், குறிப்பிட்ட வகையினருக்கான சிறப்புக் கோர்ஸ்கள் என்று பிரிக்கலாம்.

அதிகாரிகள், தொழில் செய்வோர், பள்ளி மற்றும் கல்லூரி மாணவர்கள் வேறு பணி புரியும் ஊழியர்கள் என்று எல்லோருக்கும் ஏற்ற கோர்ஸ்கள் உள்ளன. சில நாட்கள் முதல் சில ஆண்டுகள் வரை நீடிக்கும் கால அளவில் இவை அமைக்கப்பட்டுள்ளன.

வேலை தேடுவோருக்கு கம்ப்யூட்டர் நிறுவனம் வழங்கும் வாக்குறுதி மற்றும் வாய்ப்புகள் எத்தனையோ! எனினும் கம்ப்யூட்டர் கோர்ஸுகளுக்குப் போய் வேலை கிடைக்காமல் திண்டாடுவோர் ஆயிரக்கணக்கில் உள்ளனர் என்பது ஒரு கசப்பான உண்மை.

இதற்கு முக்கிய காரணம் கம்ப்யூட்டர்கள் என்ன செய்யும் என்பதைப் பற்றிப் போதுமான ஞானம் பயிற்சியாளருக்கு இல்லாததே.

பேஸிக் மொழியிலோ கோபால் மொழியிலோ எப்படி எழுதுவது என்பதைப் பற்றி அவர்கள் ஓரளவு அறிந்திருக்கலாம். ஆனால் கற்றுக்கொண்டதை நிஜ வாழ்க்கைச் சூழலில் குறிப்பாக வணிக மற்றும்



தொழில் துறையில் எப்படிப் பயன்படுத்துவது என்பதை அவர்கள் தெரிந்து கொள்ளாதது ஒரு குறை.

கம்ப்யூட்டர்களின் வணிக மற்றும் தொழில்துறைப் பயன் பாட்டுக்குத்தான் இன்றைக்கு அதிகம் கிராக்கி. இதைப் பிஸினஸ் அப்ளிகேஷன்ஸ் என் பார்கள்.

இந்த பிஸினஸ் அப்ளிகேஷனில் நிதித்துறைக் கணக்கீடு (Financial accounting) கண்டுபிடிப்பு (inventory) இன் வாய்ஸிங், பேரோல் பொருளாதார எதிர்கால நிலை அறிவித்தல் (economic forecasting) கட்டுப்பாடு (Control), முன்னதன் அடிப்படையில் திட்டமிடல் (Planning on the basis of forecasting) என்று பல அம்சங்கள் அடங்கும்.

ஒரு கம்ப்யூட்டர் இன்ஸ்டிடியூட்டைத் தேர்ந்தெடுக்கு முன் மேற்கண்ட எல்லாப் பயிற்சிகளையும் அது தருகிறதா என்று நன்கு தெரிந்து கொள்வது பயிற்சி பெற விரும்புபவரைப் பொறுத்த வரை மிக முக்கியத் தேவையாகும்.

கல்வித் தகுதி

ஒரு மாணவர் தேர்ந்தெடுக்கும் கோர்ஸை அவரது கல்வித் தகுதி வரையறை செய்து விடுகிறது. பட்டப்படிப்பு இல்லாதவருக்கான கோர்ஸ்கள் Basic, Cobal, Pascal, C, D base IV MS - Dos, Unix, Word processing, Lotus 1-2-3 மற்றும் Data entry என்னும் வகைகளில் அடங்கும்.

+ 2 முடித்த மாணவர்களுக்குச் சில பயிற்சி நிறுவனங்கள் டிப்ளமோ வழங்குகின்றன. பட்டப்படிப்பு முடிந்தவருக்கான டிப்ளமோ கோர்ஸ்களில் அப்ளிகேஷன் ப்ரோகிராமிங், ஸிஸ்டம்ஸ் மேனேஜ் மெண்ட், கம்ப்யூட்டர் சயன்ஸ், EDP. மேனேஜ்மெண்ட், சாஃப்ட் வேர் டெக்னாலஜி மற்றும் கம்ப்யூட்டர் மேனேஜ் மெண்ட் ஆகிய தனித்தனி வகைப் பயிற்சிகள் தரப்படுகின்றன.

கட்டணம் மற்றும் இதர முக்கிய அம்சங்கள்

இன்ஸ்டிடிட்யூட் வாங்கும் கட்டணம் பொதுவாக மிகவும் அதிகம். குறுகியகாலப் பயிற்சிக்கு ரூ 3,000 முதல் ரூ. 18,000 வரை வாங்கப்படுகின்றன. ஓராண்டு அல்லது இரண்டாண்டுப் பயிற்சி தரும் நிறுவனங்கள் இன்னும் அதிகமாக வாங்குவதுமுண்டு.

தவணை முறையில் கட்டணம் செலுத்துவதையே பெரும்பாலான மாணவர்கள் விரும்புவதால் எல்லா நிறுவனங்களும் இந்த வசதியை அளிக்கின்றன.

கட்டணத்தைப் போன்றே முக்கியமான அம்சங்கள் இன்னும் பல. ஒரு மாணவருக்குத் தரப்படும் கம்ப்யூட்டர் டைம் நிறுவனத்தில் பணியாற்றும் ஆசிரியர் எண்ணிக்கை, கோர்ஸின் நெகிழ்ச்சித் தன்மை.

PC, XT, AT ஒரு நிலையிலுள்ள Unix மற்றும் Xenix கம்ப்யூட்டர்கள் போதுமான அளவு பயிற்சி நிறுவனத்தில் இருக்க வேண்டும்.

கம்ப்யூட்டரில் நல்ல தேர்ச்சியுள்ள பயிற்சியாளர்கள் மிகவும் முக்கியம். அப்போதுதான் கம்ப்யூட்டர் பயிற்சி நிறுவனத்தில் ஒரு மாணவர் சிறந்த பயிற்சி பெற முடியும்.

மேலும் மாணவருக்குக் கம்ப்யூட்டரில் வாரத்துக்குச் செய்முறைப் பயிற்சி நேரம் எவ்வளவு ஒதுக்கப்படுகிறது என்று தெரிந்து கொள்வது அத்தியாவசியம்.

கம்ப்யூட்டர் - மாணவர் விகிதம் எவ்வளவு முக்கியமோ அவ்வளவு முக்கியம் ஆசிரியர் மாணவர் விகிதம், 15 மாணவர்களுக்கு ஓர் ஆசிரியர் என்பது நல்ல விகிதம். இது 25க்கு ஒருவர் என்ற அளவுக்கு வரை போகலாம்.

ஒரு இன்ஸ்டிடியூட்டின் முழு நேர ஊழியராக உள்ள ஆசிரியரிடம் பயிற்சி பெறுவது எப்போதும் சிறப்பானது. எலக்ட்ரானிக்ஸ் டிபார்ட்மெண்ட் (DOE) தனியார் பயிற்சி நிறுவனங்களுக்கு O லெவல் உள்ள ஃபவுண்டேஷன் கோர்ஸ்களுக்கு அனுமதியை மேற்கண்ட எல்லா விதிகளையும் அது திருப்தி செய்துள்ளதா என்று கண்டறிந்த பின்பே வழங்குகிறது.

பெங்களூரில் உள்ள ஸ்பான் கம்ப்யூட்டர் ஸ்கூலில் பயின்ற 24 வயது நெஹா என்ற எம்.காம். மாணவர் "என் ஆசிரியர் மிகவும் ஒத்துழைப்புத் தந்தார். நான் கற்கவேண்டும் என்று மிகவும் சிரமம் மேற்கொண்டார். எனக்குப் போதுமான கம்ப்யூட்டர் நேரமும் கிடைத்தது" என்கிறார்.

டிப்ளமோ கோர்ஸ் பயின்ற மற்றொரு மாணவர் "இன்ஸ்டிடியூட்டில் கற்றுக்கொடுத்த விஷயத்தில் ஒரு குறையுமில்லை. ஆனால் மற்றொரு க்ளாஸ்மேட்டுடன் நான் கம்ப்யூட்டரைப் பகிர்ந்து கொள்ள வேண்டி வந்தது. நான் மூக்கால் அழுதவாறு பயிற்சிக்கான பணம் கட்டும்போது PC இல் அதிக நேரம் வேண்டும் என்று தான் எதிர்பார்க்கத் தோன்றுகிறது" என்றார்.

ஒரு புகழ்பெற்ற பயிற்சி நிறுவனத்தில் கடந்த ஆண்டு பயின்ற மற்றொரு மாணவர் "வேலை கிடைத்த பிறகுதான் நான் பயின்ற கோர்ஸின் பற்றாக்குறை எனக்குப் பிடிபட்டது. அடிப்படைகளை நான் கற்றுக்கொண்டேன். உண்மை. ஆனால் மெஷினில் நான் மிகவும் நிதானமாக இருக்கிறேன். கற்கவேண்டிய விஷயங்கள் இன்னும் இருப்பது தெரிகிறது" என்கிறார்.

வேலைக்கான உத்தரவாதம்

ஒரு கம்ப்யூட்டர் இன்ஸ்டிடியூட்டில் சேர்வது ஒரு நல்ல வேலை கிடைக்கப்பதற்காகத் தான்.எனவே பயிற்சியாளருக்கு வேலை வாய்ப்புத் தேடித் தருவதில் ஒரு பயிற்சி நிறுவனம் முக்கியப் பொறுப்பு வகிக்கிறது.

தமது கம்பெனிகளுக்கு ஊழியர் நியமனத்திற்காகப் பல நிறுவனங்கள் புகழ்மிக்க பயிற்சிக்கூடங்களை அணுகுகின்றன. ஆனால் எந்த மிகப் பிரபலமான பயிற்சி நிறுவனமும் தனது மாணவர் எல்லாருக்கும் வேலை வாங்கித்தரும் என்று எதிர்பார்ப்பது மிகையாகும்.

பெரும்பாலும் பயிற்சியில் முதல்தரமாய்ப் பிரகாசிக்கிற மாணவருக்கு வேலை கிடைக்கலாம். பிறர்தாமே தான் வழியைத் தேடிக் கொள்ள வேண்டும். சில நல்ல பயிற்சிக் கூடங்கள் தம் 80 சதவீத மாணவர்களுக்கு வேலை வாங்கித் தருவதாகக் கூறுகின்றன.

தொழில் நிறுவனங்களின் தேவைக்கு ஏற்ப தம் மாணவர்களுக்குப் பயிற்சி முறை அமைக்கப்பட்டுள்ளது என்று இன்ஸ்டிடியூட்கள் கூறுகின்றன. ஆனால் பயிற்சி முறை மற்றும் பயிற்சி பெற்றவர் பற்றி அந்த நிறுவனங்கள் என்ன கூறுகின்றன? மாணவர்களிடமிருந்து வேலை தருபவர்களால் என்ன எதிர்பார்க்கப்படுகிறது?

வேலை தருவோர் கண்ணோட்டம்

லிப்டன் நிறுவனம் தனியார் பயிற்சிக் கூடங்களிலிருந்து வெகு சிலரையே வேலைக்கு எடுத்துக் கொண்டுள்ளது. அந் நிறுவனத்தின் சிஸ்டம்ஸ் மானேஜர் "தனியார் பயிற்சி நிறுவனத்தில் டிப்ளமோ பயிற்சி பெற்றவர்களுக்குக் கம்ப்யூட்டர் அப்ளிகேஷனில் டிப்ளமா பெற்றதோடு கூடவே பொறியியல் பட்டம் பெற்றிருப்பவருக்கு நிர்வாக அதிகாரிப் பதவி தரப்படுகிறது. தனியார் நிறுவனத்தில் டிப்ளமா பெற்றவர்களுக்குச் சிறிது பயிற்சி தந்தால் போதுமானது. ஆனால் பொறியியல் பட்டம் பெற்ற அதிகாரிகளுக்கு விரிவான பயிற்சி யளிக்க வேண்டியுள்ளது" என்கிறார்.

ப்ரூக்பாண்ட் நிறுவனத்தின் சிஸ்டம்ஸ் மானேஜர் "கம்பெனியின் EDP பிரிவில் ஜூனியர் லெவல்களில் தனியார் கம்ப்யூட்டர் பயற்சி பெற்றவர்கள் நியமிக்கப்படுகின்றனர். சிலருக்கு நிர்வாக அதிகாரி பதவி நியமனமும் உண்டு. ஆனால் அவர்கள் விதிவிலக்குகள் தான். ஒன்று அவர்களுக்கு கம்ப்யூட்டர் டிப்ளமாவுடன் பொறியியல் பட்டம் இருக்கும். அல்லது மானேஜ்மெண்ட் பின்னணி இருக்கும்" என்கிறார்.

பொறியியல் பட்டம் மதிக்கப்படுகிறது

ஒரு B.E. பட்டமோ அல்லது M.C.A. பட்டமோ இருப்பது வெறும் பட்டத்துடன் கம்ப்யூட்டர் டிப்ளமோ பெற்றிருப்பவரை



விட அதிகமாகத் தொழில் துறையினரால் விரும்பப்படுகிறது. காரணம் என்ன?

"பொறியியல் பட்டதாரிகளுக்குப் பகுத்தாய்வுத் திறன், கணித மனப்பாங்கு, போட்டிச் சூழலில் போதுமான அளவு வெளிப்படுவதால் உண்டாகும் உயர்ந்த தன்னம்பிக்கை இவை அதிகமாக இருப்பதே" என்கிறார் ஒரு நிபுணர்.

"மைக்கோ நிறுவனமோ பொறியியல் பட்டதாரிகளை மட்டுமே வேலைக்கு எடுத்துக் கொள்கிறது. "தனியார் கம்ப்யூட்டர் இன்ஸ்டிடியூட்கள் அவ்வளவு தரமான கல்வியைத் தருவதில்லை என்று நாங்கள் கருதுகிறோம். பயிற்சிப் பாடத் திட்டம் எல்லாம் சிறப்பானவை தான். ஆனால் மாணவர்களைப் போதுமான அளவு ஸ்க்ரீனிங் செய்து தேர்ந்தெடுப்பதில்லை. மேலும் இந்த நிறுவனங்கள் தொழில் துறையுடன் போதுமான அளவு தொடர்பு கொள்வது அவசியம்" என்கிறது.

பயிற்சிக்கு முன்பும் பின்பும்

தம் ஊழியர்களான நிர்வாகிகளுக்குக் குறிப்பான சில பயிற்சிகளை அளிக்க விரும்பும் பெரிய கம்பெனிகள் சாஃப்ட் வேரிலும், ஹார்ட் வேரிலும் சிறந்த தேர்ச்சி பெற்றவர்களையே எதிர்பார்க்கிறது.

எனவே சரியான இன்ஸ்டிடியூட் சரியான கோர்ஸ் இரண்டையும் தேர்ந்தெடுப்பது மிக முக்கியம். ஒழுங்காகக் கோர்ஸைத் தொடர்வது, திறன் மிக்க தேர்ச்சி பெறுவதுடன் வேலைக்குப் பின் குறிப்பிட்ட சூழ்நிலைக்கேற்பத் தரப்படும் பயிற்சிகளைத் துல்லியமாகப் பெறத் தயாராவது இவையும் கம்ப்யூட்டர் பயிற்சியாளரின் திறமை பிரகாசிக்க உதவும்.

தகவல் : கிரீஷ் குமார்
நன்றி : கம்ப்யூட்டர் டுடே

மதுவைச் சாடி...

பின்னலூர் மு. விவேகானந்தன்



மதுவைச் சாடி நடக்கின்றேன்
மாயையை ஊடிக் களிக்கின்றேன்
விதியைச் சாடி விரைகின்றேன்
வீழ்ச்சியைப் பாடிக் கரைகின்றேன்
(மதுவைச் சாடி நடக்கின்றேன்)
பரிசல் நதிவழிப் பாய்தல்போல்
பற்றும் சுதிபண் மாறுதல்போல்
சரியும் திறமை ஆய்ந்திட்டேன்
சாராயச் சிறுமை காய்ந்திட்டேன்
(மதுவைச் சாடி நடக்கின்றேன்)
அன்றே வள்ளுவர் அறமுரைத்தார்
நஞ்சுண் பார்கள்ளுண் பவரென்றார்
இன்று மதற்குச் சான்றுகளாய்
தின்று பிதற்றும் மாண்புகளாய்
(மதுவைச் சாடி நடக்கின்றேன்)
பெண்ணின் பெருமையைக் குலைத்திடும்
மண்ணில் வறுமையை வளர்த்திடும்
கண்ணின் ஒளியைக் குறைத்திடும்
இன்னல் எள்ளல் இழைத்திடும்
(மதுவைச் சாடி நடக்கின்றேன்)
கம்பன் கள்ளுண்டா கவிதைதந்தான்
கூத்தன் தள்ளாடியா கோவைசெய்தான்
பொங்கும் கண்ணீரில்லா புத்துலகுகாண
எங்கள் மணிக்கவிகள் தத்துவமான
(மதுவைச் சாடி நடக்கின்றேன்...!)

ஒரு நாள்....

ராபர்ட்ஸ்தான் என்னை உறக்கத்தில் இருந்து எழுப்பி, 'நாகசாமி வந்திருப்பதாக'ச் சொன்னார். மகிழ்ச்சியான செய்தி. அப்போது வந்து கொண்டிருந்த 'ஞானரதம்' பத்திரிகையில் அவரது சிறு கதைகள் பிரசுரம் ஆகிக் கொண்டிருந்தன. நாகசாமியின் சிறுகதைகள், மனுஷனைச் சாக்கடையில் குளிப்பவனாகச் சித்திரித்தன. மனுஷன் ஒரு பெருச்சாளி. மனுஷன் ஒரு புற்றுப் பாம்பு. மனுஷன் ஒரு காலரா. அவர் சிறுகதையில் வரும் பெண்கள், பெரும்பாலும் பெண்களுடனேயும், சிறுபான்மை ஆண்களோடேயும் உறவு கொள்பவர்கள். இன்றைக்கு என் கருத்துகள், இந்தச் சித்திரிப்புகளை மறுத்தாலும், அன்று எனக்கு அவர் பிரதிமைகள் பிடித்து இருந்தன. கதையை மட்டுமல்ல, எதையும் மனிதன் அவன் அனுபவக் கண்ணாடி வழியாகத்தான் பார்ப்பான்.

நான் அவசரமாகக் குளித்து அரை மணியில் தயாரானேன். ராபர்ட்சும் நானும், நாகசாமி தங்கியிருந்த அம்மணி வாசத்திற்குப் போனோம். அது புகழ்பெற்ற பிரமுகர்களின் வாசஸ்தலம். அங்கேயே 'பாரும்' இருந்தது. சமயங்களில் டான்சும் நடக்கும். நாகசாமி அறை சாத்தியிருந்தது. அறைக்குள் தண்ணீர் வழியும் குளியல் சத்தம் கேட்டது. நாங்கள் காத்திருந்தோம். சத்தம் நின்று அவர் உடுத்திக்கொள்ள அவகாசம் கொடுத்த பிறகு கதவைத் தட்டினார் ராபர்ட்ஸ். கதவைத் திறந்து, நாகசாமி தோன்றினார். போட்டோவில் பார்த்த அதே முரட்டு முகம். மிகப் பெரிய, முனையில் சுருட்டிவிடப்பட்ட தஞ்சாவூர் மீசை. பயிற்சி செய்து வரப்பெற்ற அழகான மார்பும், புஜங்களும். போட்டோவில் இல்லாத சிநேகம் மிகுந்த பார்வை.

"வா, ராபர்ட்ஸ்" என்று வரவேற்றுவிட்டு, என்னைக் கவனித்து, "யார் இவர்" என்றார். ராபர்ட்ஸ் என்னை இன்னாரென்று அறிமுகம் செய்தார்.

அம்மாதம் என் கவிதைகள் இரண்டு ஞானரதத்தில் வெளிவந்திருந்தன. "அடடே, அவரா நீங்கள்! நான் அந்தக் கவிதைகளைப் படிச்சேன். ரொம்ப உண்மை மாதிரி பட்டுச்சு" என்றார். "ஒரு காபி சாப்பிடலாமே" என்றுவிட்டு, பையனை அழைத்துக் காபிக்குச் சொல்லிவிட்டு, சுவர் பக்கம் திரும்பி நின்று உடைமாற்றிக் கொண்டார். வெள்ளைக் கதர் அரைக்கைச் சட்டையும், வேஷ்டியும்.

காபி சாப்பிட்டபடி, "எதுக்கு கவிதை எழுதறீங்க?" என்றார்.

எழுத வந்தது. எழுதினேன். ஏன் எழுத வேண்டும். ஏன் எழுதினேன் என்று அன்றுவரை யோசித்ததில்லை. ஆகவே சொன்னேன்.

"எழுதணும்னு தோணிச்சு. எழுதறப்போ சந்தோஷமா இருந்துச்சி. பார்க்கிறவங்க என்னைக் கவிஞனா நினைச்சுப் பேசறப்போ பெருமையா இருக்கு."

தலையைப் பலமாக அசைத்து, "நல்லது, ரொம்ப நல்லது" என்றார் நாகசாமி. அவர் முகம் திருப்தியில் நிறைந்திருந்தது தெரிந்தது. அவர் சொன்னார் : "நல்ல வேளை. புரட்சி பண்ண எழுதறேன்னு சொல்லிடுவீங்களோன்னு பயந்தேன். ஏதோ புரட்சி, விழுப்புரம் ஜங்ஷன்லே இருக்கிற மாதிரியும், அங்கிருந்து புறப்பட்டுடுச்சு, இன்னும் ரெண்டரை மணியிலே சென்னை வந்து சேரப் போறதுன்னுதான் இப்போ எல்லோரும் கவிதை எழுதிக்கிட்டு இருக்கா. அதான் கேட்டேன். நாலு கவிதை எழுதிட்டவுடனே சமூக மாறுதல் வந்துரும்னு பையங்க நினைக்க ஆரம்பிச்சுட்டாங்க. கட்சியில இருக்கிற பாமரத் தலைமையும் இவனுங்களை ஊக்கப்படுத்திக் கிட்டு இருக்கு. மொத்தத்துல, குருடும் குருடும் குருட்டாட்டமாடுது. இதுதான் இன்னைக்குக் கலாச்சாரச் சூழ்நிலை."

நாகசாமி ரொம்பக் கசந்து போயிருந்தது தெரிந்தது. ராபர்ட்சை நான் கவனித்தேன். அவர் வலது கம்யூனிஸ்ட் கட்சியின் உறுப்பினர். அவர் சொன்னார், "புரட்சியே வராதுன்னு சொல்றவங்களைக் காட்டிலும், வரும்னு நம்பிக்கை தொனிக்க எழுதறது ஒண்ணும் தப்பு இல்லை. மனுஷன் மனசில நம்பிக்கையை விதைக்கிறதுதான் நல்ல இலக்கியம்."

பிரபஞ்சன்

புதிய மேகங்களே! புறப்படுங்கள்!

புதிய மேகங்களே!
புறப்படுங்கள்!
புதுமைக் கருத்துமழை
பொழியுங்கள்!
—ஓ... இளைஞர்களே!
உங்களைத்தான்!

சமரச வித்துகளைத்
தூவுங்கள்!
சமுதாய ஜோதியை
ஏற்றுங்கள்!
—ஓ... இளைஞர்களே!
உங்களைத்தான்!

பேதக் களைகளைக்
களையுங்கள்!
நீதித் தராசுகளைப்
பிடியுங்கள்!
—ஓ... இளைஞர்களே!
உங்களைத்தான்!

கொடுமைப் பேய்களைக்
கொல்லுங்கள்!
அடிமைத் தளைகளை
அறுத்திடுங்கள்!
—ஓ... இளைஞர்களே!
உங்களைத்தான்!

உரிமைக் கீதங்களைப்
பாடுங்கள்!
வறுமைச் சுவடுகளை
அழியுங்கள்!
—ஓ... இளைஞர்களே!
உங்களைத்தான்!

போதை மருந்துகளைப்
புதையுங்கள்!
பாதை மாறாமல்
செல்லுங்கள்!
—ஓ... இளைஞர்களே!
உங்களைத்தான்!

படிப் பயணத்தைத்
தவிருங்கள்!
படிப் படியாய்ப்
படியுங்கள்!
—ஓ... இளைஞர்களே!
உங்களைத்தான்!

புதிய பறவையாய்ப்
பறந்திடுங்கள்!
பொதுமை மலராய்ப்
பூத்திடுங்கள்!
—ஓ... இளைஞர்களே!
உங்களைத்தான்!

—பி.வி. கிரி

நாகசாமி சத்தம் போட்டுச் சிரித்தபடி கையைத் தூக்கி ராபர்ட்ஸை நிறுத்தினார்.

"ராபர்ட்ஸ், முப்பத்தஞ்சு வருஷத்துக்கு முன்னால, தாம்பரபரணியிலே முக்குளி போட்டு விளையாடினப்போ என்ன சொன்னியோ, அதைத் தான் இப்பவும் சொன்னா" நீ வளரவே இல்லியே."

"ஆறு மாசத்துக்கு ஒரு தரம் கருத்தை, தத்துவத்தை, நம் பிக்கையை மாத்திக்கிறதுதான் வளர்ச்சிங்கறயா?"

நாகசாமி தலை வாரிக் கொண்டிருந்தார். அந்தக் காலத்து அமெரிக்கன் கிராப். அழுந்தச் சீவிக்கொண்டு, "வெளியே புறப்படுவமா?" என்றார். ராபர்ட்ஸ், "எனக்கு ஸ்கூல் இருக்குப்பா. வைத்தி உன்னோட இருப்பார்."

"கோவம் இல்லியே?"

"சேச்சே."

ஆகவே, ராபர்ட்சுக்கு விடை கொடுத்துவிட்டு நானும் நாக சாமியும் புறப்பட்டோம். அவர் வேகமாக, முயல் மாதிரி தாவிக் கொண்டு நடந்தார். என் நடை நிதானமானது. அவருடன் நடக்க மிகவும் சிரமப்பட்டேன்.

"நீங்கள் சாப்பிட்டாச்சா?"

"இல்லை."

"முதலில் ஒரு நல்ல என்.வி. ஹோட்டலுக்குப் போகலாம்."

அரிஸ்டோவுக்குப் போனோம். நான் இட்லியும் கோழிக்கறியும் சொன்னேன். அவர் வெறுமே இருந்தார்.

"உங்களுக்கு?"

"நான் சாப்பிடுவதில்லை."

"அதெப்படி சார்... சாப் பிடாமல்? கொஞ்சமாக ஏதா னும் சாப்பிடுங்கள்." என் வற் புறுத்தலுக்காக ஓர் ஈரல் வறு வல் மட்டும் வாங்கிக் கொண் டார். அது உள்ளங்கைகூட நிறையாத துண்டம். அதுக்குப் பிறகு டீகூட அவர் சாப்பிட வில்லை. நாங்கள் ஹோட்டலை விட்டு வெளியே வந்தோம்.

"உங்கள் அடுத்த புரோக் ராம் என்ன சார்? எங்கே போகணும்?"

"எனக்கு ஒரு வேலையும் இல்லை. சென்னைக்குப் போகிற வழியில், ரெண்டு நாள் தங்கணும்னே, தங்கி ஓய் வெடுக்கணும்னே வந்திருக் கேன்."

"பாரதி வாழ்ந்த வீட்டுக்குப் போகலாமா சார்?"

"வேணாம். ஒரு சாராயக் கடைக்குப் போகலாம். பாரதி வீட்டைப் பார்த்தாச்சு. ஒரு வீடா, பல நூறு வீடு. அவன் கவிதைகள் எல்லாம் அவன்

வாழற வீடுதானே. ஆமா! வைத்தி, அது என்ன சார்? நான் வெறும் நாகசாமி."

நானும் மது அருந்துபவன் தான். எனினும் சாராயக் கடைக்குப் போகிற அளவுக்குத் துணிந்தது இல்லை. முக்கிய காரணம், இந்த ஊரில் கள்ளுக் கடையும், சாராயக் கடையும் நடத்துகிறவர்கள் பெரும்பாலும் எனக்குச் சொந்தக்காரர்கள். என் அப்பாமேல் மிகுந்த மரி யாதை கொண்டவர்கள். அவர் கள் பார்வையில் சாராயம் விற்பது இழிவில்லை. சாப்பிடு வது இழிவு.

வாய்க்கால் தெருவும், புசி தெருவும் சந்திக்கிற இடத்தில் தட்டி வைத்து அடைத்திருந்த சாராயக் கடைக்கு நாங்கள் போனோம். மேடை போட்டு, சாடியில் சாராயம் விற்றுக் கொண்டிருந்தது. நாகசாமி, "கொஞ்சம் · சாப்பிடலாம் தானே?" என்றார்.

பனியன் அணிந்த சாக்னா கடைப் பையன் எங்கள் அருகில் வந்து, "தொட்டுக்க எதனாச்சும் வேணுமா சார்?" என்றான். தொடர்ந்து, "எறா, மீன், நண்டு வறுவல், ரத்தப் பொறியல்."

நாகசாமி தலையசைத்து அவனை அப்புறப்படுத்தினார். கல்லாவில் அமர்ந்திருந்த நடு வயதுக்காரர் என் அருகில் வந்து என் அப்பாவின் பெய ரைச் சொல்லி, அவர் மகன் தானே என்றார். "ஆமாம்" என்ற என்னை ஒரு மாதிரியாகப் பார்த்துவிட்டு அவர் அகன்றது சங்கடமாகவே இருந்தது.

அரை சோடாவைப் பயன் படுத்தி, அவர் முன்னூறு மில்லியையும் முடித்திருந்தார். மீண்டும் மேடையை அணுகி, மேலும் இருநூறு மில்லி சரக்கை வாங்கிக்கொண்டு வந்து அமர்ந்து கொண்டார்.

தின்றுவிட்டு, தோலாலேயே அதை மூடி, தன் உள்ளங் கையில் காடையை, அதை வளர்ப்பவன் வைத்துக் கொள்வது மாதிரி அமுக்கிக் கொண்டார்.

"எங்கே போய் உட்காரலாம்?"

"கவர்னர் வீட்டுக்கு முன் னால் பூங்கா இருக்கு. அங்கே போகலாம்."

பூங்கா, மதிய வெயிலில் வெறிச்சிட்டுக் கிடந்தது. ஆண் கள் தம் தொழில் கேந்திரங் களிலும், பெண்கள் அலு வலகம் அல்லது அடுப்படி களிலும் அடங்கி இருக்கும் நேரம். ஆகவே, ஜனநடமாட்டம் குறைந்திருந்தது. எல்லா சிமெண்ட் பெஞ்சுகளிலும் வய சாளிகள் அல்லது நோயாளிகள் அல்லது சோம்பேறிகள் படுத்துக்கிடந்தனர். மாபெரும் சுதந்திர இந்தியாவே சோம்பிப் படுத்துக் கிடப்பதுபோலத்

ஒருவருக்கொருவர்

ஆறு, தன் கரையில் உள்ள தேற்றாங்கொட்டை மரத்தைப் பார்த்து, "ஏன் இப்படிப் பொங்கிப் பெருகிப் புதுவெள்ளமாய், உன் வேரைத் தொட்டுக் கொண்டு ஓடுகிறேன் தெரியுமா? உன்னை வளர்க்கவும் வாழ்விக்கவும்தான்!" என்று கர்வமாகக் கூறியது.

மரம், அதற்குப் பதில் தந்தது.

"நான் ஏன் உன் கரையோரமாகவே வளர்ந்துள்ளேன் தெரியுமா? கலங்கலாக வரும் உன் தண்ணீரை, என் விதை கொண்டு தெளிய வைப்பதற்காகத்தான்!"

ஆறு தன் கரைக்குள்ளேயே நாணிக் கோணி, இப்பொழுது அடக்கமாக ஓடியது.

— தமிழழகன்

"எனக்கு வேணாம்" என்று சொல்லி அவரைச் சாப்பிடச் சொன்னேன்.

நாகசாமி முதலில் முன்னூறு மில்லியும் ஒரு சோடாவும் வாங் கிக் கொண்டார். சுவர் தடுப் போரம் பலகை அடித்து, உட் கார்ந்து சாப்பிடப் பெஞ்சும் மேஜையும் ஏற்பாடு பண்ணி யிருந்தார்கள். தட்டி அழிக்குப் பின்னால் கார மீன் வறுக்கும் வாசனை மூக்கைச் சிரமப் படுத்தியது. எனினும் வாசனை ரம்மியமாகவும் இருந்தது.

கிளாசில், சோடாவை ஊற்றி ஒரே மூச்சில் குடித்து முடித் தார். ஓரமாக நின்றும் இருந்தும் மது அருந்திக் கொண்டிருந்த வர்கள், நாகசாமியை லேசான வியப்புடனும், மரியாதையுடனும் அவதானிப்பதை நான் பார்க்க முடிந்தது.

சாராயக் கடைக்கு வெளியே இருந்த பெட்டிக் கடையில், நாகசாமி ஒரு ரஸ்தாளி வாழைப்பழம் வாங்கிக் கொண் டார். அதன் தோலை உரித்து, அரைப்பழத்தை மட்டும்

தோன்றியது. நூற்று நாற்பது கோடிக் கைகள், இந்தியாவில் மட்டும் வெறும் தோள்முனைத் தொங்கல்கள்.

"எங்கு வேலை பார்க் கிறீங்க?" என்று கேட்டார் நாக சாமி.


"வேலை தேடிக்கிட் டிருக்கேன்."

"எப்படியாவது ஏதாவது வேலையில் உங்களைப் பொருத்திக் கொள்ளுங்கள். முழுநேர எழுத்தாளனாக வாழ

நன்றி

இந்தக் குளிர்கால இரவில்
ஏழை எனக்கு
சட்டை கொடுத்ததற்கு நன்றி
வயற்காட்டு பொம்மையே!

— தெ. வெற்றிச்செல்வம்



முயல்வது தற்கொலைக்குச் சமம். அது மாத்திரம் அல்ல. இலட்சிய எழுத்தாளன் எழுதவே முடியாமல்கூடப் போய் விடுகிற அபாயம் நேர்கிறது. என் தொழில் கணக்கு வாத்தியார். அப்புறம்தான் நான் எழுத்தாளன். எழுத்தை இரண்டாம் பட்சமா ஆக்குகிறது நமக்குச் சங்கடமா இருக்கு. வீம்புக்காக எழுத்தைத் தொழிலா மாத்திக்கிறோம், அழிஞ்சு போயிடறோம். ஞாயிற்றுக்கிழமை எழுதுகிறவனுக்கும், பணக்காரன் பொண்டாட்டிகளுக்கும் தான் எழுத்து, பிராபல்யம், பணம், காசு, கலர் போஸ்டர் எல்லாம், தமிழர் தமிழர்களுடைய யோக்யதைக்கு ஏற்ற மாதிரிதானே எழுத்தாளனும் உருவாகிறான்."

தோட்டக்காரன் செடிகளுக்குத் தண்ணீர் வார்த்துக் கொண்டிருந்தான்... பூக்களில் இருந்து எழுந்த வாசனை சுகமான சுவாசமாய் இருந்தது. நிமிஷத்துக்கு ஒரு தரம் சுண்டல் என்றும் முறுக்கு என்றும் கஜூரா என்றும் விற்றுக் கொண்டு வந்த பையன்கள் அவரைச் சிரமப்படுத்தியிருக்க வேண்டும். ஆனால், அந்தச் சிறுவர்களிடம் கோபத்தைச் செலுத்த வேண்டுமா என்று அவர் அடங்கியதுபோல் இருந்தது. அந்த நேரம் பார்த்து ஒரு ஜோஸ்யர் வந்து சேர்ந்தார். எனக்கு அவரைத் தெரியும். பகவத்கீதை வாசகங்கள் போட்ட மேல் துண்டு அணிந்திருந்தார். சடை மாதிரி முடி. தாடி மீசை. ஒரு காவி ஜிப்பா,. அதே வண்ண வேஷ்டி.

"கைரேகை, பாமிஸ்ட்ரி சார்" என்று குறிப்பாக வெளிநாட்டுக்காரர்களை நத்துவார். காவி, சம்ஸ்கிருதம், ஜடா முடி ஆகிய வற்றுடன் நிற்கிற ஜோசியரை இந்திய கலாசாரத்தில் சின்னமாகக் கண்டு வெளிநாட்டுக்காரர்கள் ஏமாறுவார்கள். அவர் ஜோஸ்யரே தவிர, ஜோஸ்யம் அறியார்.

ஜோஸ்யர், நாகசாமியை நெருங்கி, "கைரேகை, பாமிஸ்ட்ரி சார்" என்றார். ஜோஸ்யரின் முகம் வெளிப்படுத்தின சிரிப்பு வெகு ஆபாசமாக இருந்தது.

"வேணாம்" என்றார் நாகசாமி கறாராக.

"பாஸ்ட், பியூச்சர் ரெண்டும் சொல்றேன் சார்..."

"நீ என்ன சொல்றது? எனக்கே தெரியுமே?"

ஜோஸ்யர் ஒரு கணம் மிரண்டார்.

"கடந்த காலம்தான் எனக்குத் தெரியுமே. நிகழ் காலத்திலே வாழ்ந்துக்கிட்டு இருக்கேன். பழசும், யதார்த்தமும் தெரிஞ்சா, எதிர்காலத்துக்கு யாரைக் கேட்கணும்?"

"பாமிஸ்ட்ரி பெரிய கலை சார்."

"செருப்பால அடிப்பேன்... சோத்துக்கு அஞ்சு ரூபா கேளு தர்றேன்... கலை, கிலைன்னு எதுக்குப் பொய் சொல்றே? உனக்கு என்னடா தெரியும் அந்தக் கலையைப் பத்தி?"

மதிய நேரத்தில் பூங்காவில் ஒரு ரகளையை நான் எதிர்பார்த்தேன். ஜோஸ்யர் பூங்காச் சோம்பேறிகள் சிலரை அழைத்து வந்து பெரும் ரகளை செய்யக்கூடும் என்று சற்று அச்சத்துடனே நான் எதிர் பார்த்தேன். நல்ல வேளையாக அங்ஙனம் ஆகவில்லை. தண்ணி போட்டிருக்கிற ஆள் என்பதாலோ என்னவோ, ஜோஸ்யர் மெல்ல சற்று தூரத்தில் வந்து கொண்டிருந்த ஐரோப்பியரைப் பார்க்க நடந்தார். நான்தான் அந்த இறுக்கமான மௌனத்தைக் கலைக்க வேண்டி வந்தது.

"என்னத்துக்கு அந்த ஆளை அப்படிக் காயணும்? போன்னா போறார்."

நாகசாமி சாந்தமாய்ச் சொன்னார்.

"அதுக்கில்லை வைத்தி. எனக்கு இந்த ஏமாத்துப் பேர் வழிகளைக் கண்டா தாங்க முடியறதில்லை. இங்க எல்லாத் துறையிலும் எல்லாப் பயலும் ஏமாத்துப் பேர்வழியா இருக்கான். அரசியல், சினிமா, கலை, இலக்கியம், மதம், ஆன்மீகம் எல்லாம் பொய்யான ஆளுங்ககிட்டே இருக்கு. ஒரு கம்யூனிஸ்ட்டோட அறுபது விழாவை, ஒரு பெரிய முதலாளி செலவு பண்ணிக் கொண்டாடறான். இது எப்படிச் சாத்தியம்? அந்தக் கம்யூனிஸ்ட்டோட அறுபது வருஷமும் என்னாச்சு? ஜோஸ்யம் ஒரு கலையாகவே இருக்கட்டும். அது இப்படியா பிச்சைக்காரத்தனமா சீரழியறது? எதைத் தொட்டாலும் பொய்யி. சே..."

நாகசாமி மதியம் ரெண்டு, ரெண்டரை வரை இதே தொனியில்தான் பேசிக்கொண்டிருந்தார். அவர் எதைத் தொட்டாலும் அதன் மேல் வெம்மை அரைத்துப் பூசியிருந்தது. எந்த விஷயத்துக்கும் இனிமையான ஒரு பக்கம் இருக்கும். அது,

அவர் பார்வையில் படாமல் போவது ஆச்சர்யம்தான். தடியடியும், குண்டடியும் பட்டு வீரமரணம் எய்திய மகத்தான மனிதர்கள் அவர் நினைவில் இல்லை. வட்டிக்கு விட்டுச் சம்பாதிக்கிற தலைவர்கள் அவர் கண்களுக்குப் பட்டார்கள். அவரது பால்யகால சிநேகிதர்களான ராமசாமியும், ரகுநாதனும் அவர்கள் சேர்ந்து கொண்டிருக்கிற தத்துவமும் கட்சியும் பொய் என்று தெரிந்தும், உண்மை சொல்லத் தயங்குகிறார்கள் என்றார்.

அறைக்கு நடந்தே திரும்பினோம். வந்ததும், பெட்டியைத் திறந்து ஒரு கத்தைப் பேப்பரை எடுத்து, "இது என்னோட நாவல். படிச்சுப் பாருங்கள். நான் சித்த நேரம் படுக்கிறேன். அதுக்குள்ளே இதை நீங்க படிச்சுடலாம்" என்றார்.

"ஆமா, நீங்க இன்னும் சாப்பிடலையே" என்றபடி பையனை அழைத்து எனக்குப் பிரியாணி சொன்னார். அவருக்கு அரை பாட்டில் ரம் சொன்னார்.

"நீங்க ஒன்றும் சாப்பிடலியே ?" என்றேன்.

மறவாமல் போற்றிக் காப்பாற்றிக் கொண்டு வந்து மேஜையின் மேல் வைத்திருந்த அரை ரஸ்தாளிப் பழத்தைக் காட்டி "இது போதும்" என்றார். அவர், வந்த அரை பாட்டிலைப் பாதி தீர்த்துவிட்டுப் படுத்தார்.

நான் நாவலுக்குள் புகுந்தேன். கந்தன் என்கிற சாமான்யனைப் பற்றின நாவல் அது. பெண்களுக்குப் புரோக்கராக இருந்து வாழ நேர்கிற மனிதனின் அன்றாட வாழ்க்கையில், ஒருநாள் எடுத்துச் சொல்லப்பட்டிருந்தது. தண்ணீர் நிற்கிற தெருக்கள். வெளிச்சம் காணாத குடிசைகள். மனிதர்கள் பல்லிகளைப்போல் தரையில் ஒட்டிக்கொண்டிருக்கிறார்கள். நாகரிக வாழ்க்கை என்று சொல்லப்படுகிற வஸ்துவின் எந்த ரேகையும் அந்தச் சேரி மக்களிடத்தில் இல்லை. அவர்களுக்கு நாளை என்பதும் இல்லை. நாளை என்பது இன்றைய நீட்சி. இரவுக்குப் பிறகு வருகிற மற்றொரு பகல். அவர்களைப் பொறுத்தவரை சூரியன் எப்போதும் அஸ்தமித்துவிட்ட பிண்டம். கூண்டைத் திறந்ததும் வெளிப்படுகிற மிருகத்தைப் போல, இரண்டு மூன்று வார்த்தைகளில் ஒரு மனுஷப் பாத்திரத்தைக் கொண்டு வந்து விடுகிற நேர்த்தி அவர் மேல் எனக்கிருந்த மரியாதையை அதிகப்படுத்தியது. பாத்திரங்கள் புழங்கும் பிரதேசத்தின் வாசனையும்கூட என்னால் உணர முடிந்தது.

நாகசாமி எழுந்து பாத்ரூமுக்குள் நுழைந்து முகம் கழுவிக்கொண்டு திரும்பினார். நானும் தயாரானேன்.

"எங்கு போகலாம்?"

"கடற்கரைக்குப் போகலாம்."

மீதி இருந்த சுமார் கால் பாட்டில் ரம்மை எடுத்து இடுப்பில் சொருகிக் கொண்டார். வாழைப்பழத்தில் மீதி இருந்த கால் பகுதியை விழுங்கி, தோலைக் கூடையில் போட்டுவிட்டுக் கிளம்பினார். போகும் வழியில் ராபர்ட்சும் வந்து சேர்ந்துகொண்டார்.

"ராபர்ட்ஸ்... பையன்களுக்கு என்ன சொல்லிக் கொடுத்தே? மிசிசிபி ஆற்றின் அகலம், ஆழம், டல்ஹவுசி பிரபுவோட தயாள குணம், அமெரிக்கக் குடியேற்றம்..."

"எல்லாம்தான் தெரிஞ்சுக் கிடணும்."

"ஆனா, வீட்டுப் புழக்கடையில் ஒடுற ஆற்றோட வரலாறை என்னைக்குச் சொல்லிக் கொடுக்கப் போறே?"

"அதுக்குப் பாடத் திட்டத்தையே மாற்ற வேணும். மேல இருக்கிற மடையன்களுக்கு யார் சொல்றது?"


"நீதான். நானும் வாத்திதான். அதனாலதான் சொல்றேன். மேல இருக்கிற முட்டாள்களுக்குச் சொல்லு. கேக்கலையா, சாக்பீசை எடுத்து மூஞ்சி மேல அடிச்சுட்டு வெளியே வா."

அவ்வளவு லகுவான விஷயமா அது? பூட்டிய சேணத்தைத் தோளில் இருந்து இறக்கி வைக்கக் கூடாது என்கிற கங்கணத்தின் பெயர் அல்லவா வாழ்க்கை? நுகத்தடியை நாற்பத்தெட்டு வருஷம் சுமந்தல்லவா மனுஷன் கடமை வீரன் ஆக வேண்டியிருக்கிறது.

கடற்கரை மணலில் அமர்ந்தோம். சாயங்கால நேரமே அழகியதுதான். நண்டுகள், வளைக்குள் மறைவதும், தோன்றி ஓடுவதுமாக இருந்தன. துரத்திக்கொண்டு வரும் அலைகளையும் மீண்டும் கடலுக்குள் கரையும் அலைகளையும் பார்த்தவாறு இருந்தார்

கண்பார்வை தெளிவு பெற...

தினமும் காலையில் எழுந்ததும் ஒரு கைப்பிடி அளவு பச்சைக் கொத்தமல்லிக் கீரையை வேரை நீக்கிவிட்டு



மண்ணில்லாமல் கழுவி வாயில் போட்டு பச்சையாகவே மென்று சாப்பிட்டு வந்தால் கண்கள் புத்தொளி பெறும். பார்வைக் குறைவு ஏற்படாது.

— இஷ்ரத்

நாகசாமி. இடுப்பில் சொருகியிருந்த பாட்டிலை எடுத்து ஒரே மூச்சில் குடித்தார். கண்கள் மிகவும் சிவந்து போயிருந்தன அவருக்கு. கன்னச் சதைகள் இறுகி, விழிகள் கடலில் நிலை குத்திப் போயிருந்தன. அவரது கை விரல்கள் லேசாக நடுங்கிக் கொண்டிருந்ததைக் கவனித்தேன், தனக்குள் பேசிக் கொள்பவரைப் போலச் சொன்னார்.

"அலை ரொம்பப் பழசு. அலையைப் பார்க்கிறபோது வர்ற யோசனைகள் ரொம்பப் புதுசு... இல்லியா வைத்தி... எனக்கு அதுகள் 'லைஃபை' சிம்பலைஸ் பண்றதா தோணுது... சங்கிலிக்கண்ணி மாதிரி தொடர்ந்து காரியமாத்ற முயற்சி. எஸ்... அதுதான்... ஓய்தல் ஒழிவில்லாத உழைப்பு.. அது இல்லேன்னா, என்னத்துக்கு வாழறது... ஈரல் திங்கறதும், சாராயம் குடிக்கிறதும், பொம்பளை தேடறதும், இதுகள்ளே கிடைக்காததை எழுதி அடைய ஆசிக்கிறதும், தோக்கிறதும், தோல்வியை ஒப்புத்துக் காததும், தலைக்குப் பின்னால சக்கரம் சுத்தறதா நினைச்சுக்கறதும், இதல்ல அது. என்ன மாதிரி ஒண்ணுமில்லைன்னு நினைக்கிறவன், வாழறதுல அர்த்தம் இல்லை..."

அவர் எழுந்து நின்றார். கையில் இருந்த காலி பாட்டிலை முகத்துக்கு நேராக உயர்த்தி, 'என்னத்துக்கு இது' என்றபடி கடலில் எறிந்தார். எறிந்த பாட்டிலைத் தேடுவார் மாதிரி, கடலுக்குள் இறங்கலானார். நானும் ராபர்ட்சும், அவருக்கு இருபுறமும் நடந்தோம். அவர் அளவுக்கு மீறித் தள்ளாடலானார். நான் ஒரு கையையும், ராபர்ட்ஸ் ஒரு கையையும் தாங்கிப் பிடித்துக் கொண்டோம். நாங்கள் அலை ஈரத்தை உணர்ந்தோம். கணுக்காலை ஈரம் தொட்டதை அறிந்தோம். நாகசாமி அப்படியே நிற்கத்தான் போகிறார் என்று நாங்கள் நம்பினோம். நம்ப விரும்பினோம். அவர் கடலுக்குள் இறங்கத் தொடங்கினார்.

"சார்... சார்... இதுபோதும்... கடல் ஆழம்... வேணாம்" என்று நான் அச்சத்தில் உளறத் தொடங்கினேன். ராபர்ட்சும் அப்படியே சொன்னார்.

"வேணாம்... காலி பாட்டில்... காலி பாட்டில் என்னத்துக்கு?" என்றபடி நாகசாமி, வெறி கொண்டவரைப்போலக் கடலில் இறங்கினார். முட்டி, தொடை என்று தண்ணீர் எங்களை உள் வாங்கிக் கொண்டிருந்தது.

"சார்... சார்... நாகசாமி... நாகசாமி" என்று நானும் ராபர்ட்சும் குழம்பிப் போய்க் கத்திக் கொண்டே, அவரைக் கரையை நோக்கி வலிக்கத் தொடங்கினோம். நாகசாமியின் உடல் பலம், அசாதாரண



மாய் இருந்தது. இருவர் முயற்சியும் அவரிடம் தோற்றுக் கொண்டிருந்தது. அலைகள் என்னை மோதி மோதிக் கால்களை மண்ணில் இருந்து பெயர்த்து அசையச் செய்தன. தாவித் தாவி அடிக்கடி சிரமப்பட்டு மண்ணில் பாதங்களை நிலைக்கச் செய்ய வேண்டியிருந்தது. எனக்கு நீச்சல் தெரியாதாகையால், நாகசாமி பற்றியதை விடவும் என்னைக் குறித்த எனக்கு மரணபயம் ஏற்பட்டது. அவர் எங்களையும் கொஞ்சம் கொஞ்சமாகக் கடலுக்குள் அமுத்திக் கொண்டிருந்தார்.

"வேணாம் சார்... வேணாம்..." என்று எங்கள் பலம் கொண்ட மட்டுக்கும் நாகசாமியை நாங்கள் கரைப் பக்கம் இழுத்தோம். தூரத்தில் போய்க் கொண்டிருந்த மீனவர் மாதிரி தோன்றிய இருவர் நிலைமையைப் புரிந்து கொண்டு, கொஞ்சமும் தாமதிக்காமல் எங்கள் அருகில் பாய்ந்து வந்து, நாகசாமியை சர்வ சாதாரணமாக இழுத்துக் கரையில் கொண்டுவந்து போட்டார்கள். "தண்ணிக் கேசு" என்று தமக்குள் சொல்லிக் கொண்டு ஒன்றும் நடவாதது போல அவர்கள் புறப்பட்டுச் சென்றார்கள்.

நாகசாமி, இரு கைகளையும் கரையில் ஊன்றிக்கொண்டு, கால்களைத் தரையில் நீட்டிய படி அமர்ந்திருந்தார். அவரது ஆவேசம் அடங்கி, நிதானப் பட்டிருந்தார்.

"போலாமா?" என்றேன்.



"பசிக்கிறது. ஏதாவது சாப் பிடணும்."

"சாப்பாடா, டிபனா?"

"சப்பாத்தி தேவலை."

அவரை நாங்கள் இருவரும் கைலாகு கொடுத்து ரோட்டுக்குக் கொண்டு வந்தோம். பாதசாரிகள், நின்று புன்னகை யுடன் எங்களைக் கவனித்து விட்டு நடந்தார்கள். ஒரு ரிக்ஷா வண்டி பிடித்து நாகசாமியை ஏற்றினோம். அவர் பக்கத்தில் நான் அமர்ந்து கொண்டேன். ராபர்ட்ஸ், தன் சைக்கிளில் அமர்ந்தபடி, "வைத்தி, நாக சாமிக்கு டிபன் வாங்கிக் குடுத்துட்டு, ரூமுக்கு வந் துடுங்க... எனக்குக் கொஞ்சம் வேலை இருக்கு. முடிச்சுட்டு ரூமுக்கு வந்துடறேன்" என்று விட்டுப் போய்விட்டார்.

நாகசாமியை நான் சந் தித்தே இருக்க வேண்டாம் போல் எனக்குத் தோன்ற ஆரம் பித்திருந்தது. இலக்கியத்தின் பேரால், இந்த வகைக் கஷ்டங் களை நான் பெறத்தான் வேண் டுமா? இனி இந்த ஊருக்கு வருகிற இலக்கியவாதிகளிடம் கொஞ்சம் தள்ளியே நடந்து கொள்வது என்று முடிவு பண்ணிக்கொண்டேன். நாக சாமி, கண்களை மூடிக் கொண்டு சரிந்து சாய்ந்து கொண்டிருந்தார். துய்ப் பௌக்ஸ் தெருவில், காபி ஹவுசுக்குப் பக்கத்தில் இருந்த குஜராத்திக் கடைக்கு வண் டியை விடச் சொன்னேன். தெருமட்டுக்கு, மிக உயர்ந்து எட்டுப் படிக்கட்டுகளை மிதித்து ஏறி உள்ளே போனோம். வியாபாரம் தொடங்கும் தருவாய் போல் இருந்தது. இரண்டு பேர் சாப் பிட்டுக் கொண்டிருந்தார்கள். நீளவாக்கில் போட்டிருந்த பெஞ்சில் பக்கம் பக்கமாக நாங்கள் அமர்ந்திருந்தோம். சிவப்புக் காசித் துண்டும், கை வைத்த பனியனும் அணிந்து

கட்டுமஸ்தாக மிக ஆரோக்கியமாகத் தோன்றிய ஒரு பரிசாரகர் எங்கள் அருகில் வந்தார். அவரது முகம் முழுவதையும் மீசை அடைத்திருந்தது. அதையும் மீறி அவர் முகத்தில் தோன்றிய மென் சிரிப்பு என்னை உற்சாகப்படுத்தியது. இருவருக்கும் சப்பாத்தி இட்டு, கொஞ்சம் இளகலான உருளைக்கிழங்கு குழம்பை இட்டார். நான் சாப்பிடத் தொடங்கினேன். நாகசாமி, "ஏய்" என்று அந்த கட்டுமஸ்தான பரிசாரகரை அழைத்தார். எனக்குப் பயம் பிடித்துக் கொண்டது. பரிசாரகரின் முகத்தைப் பார்த்தேன். அந்தச் சிரிப்பு நீங்காதிருந்தது சந்தோஷமாக இருந்தது-

"என்ன ஐயா?"

"மீதி டிஷ்ஷஸ் எங்கே?"

"என்னங்க?"

"என்னடா நாயே! வெறும் உருளைக்கிழங்கை வச்சு என்னை ஏமாத்தப் பார்க்கிறியா? படுவா! தக்காளி சட்னி, பொதினாத் துவையல், பட்டாணிக் கூட்டு எல்லாம் எங்கே? டில்லியில் நான் சாப்பிட்டேனே. ஏமாத்தாதே. அரசியல்வாதிகள் ஏமாத்தறதே போதும். நீயும் ஏமாத்தாதே."

"ஐயா. அது மாதிரியெல்லாம் எங்கள் கடையில் இல்லை. வெறும் சப்ஜி மட்டும்தான்."

"மாங்கா மடையா, யாருன்னு நினைச்சே... என்னை ஏமாத்தலாம்னு நினைக்காதே."

எதிரில் சாப்பிட்டுக் கொண்டிருந்த இருவரும் அவசரம் அவசரமாகச் சாப்பிட்டு எழுந்து போனார்கள். நான் பீதி அடைந்தேன். நாகசாமியிடம், "சார்... சார்... ஒண்ணும் பண்ணாதீங்க" என்று விட்டு, பரிசாரகரிடம், "மன்னிச்சுடுங்க" என்றேன். பரிசாரகர், அதே மென்மையுடன் "பரவாயில்லை சார்" என்றார்.

பெண் - ஒரு கண்ணோட்டம்

1. அழகான பெண் கண்களுக்கு விருந்து. குணமான பெண் மனதுக்கு விருந்து.

2. மனைவியைத் தேர்ந்தெடுக்கும்போது கிழவனின் பார்வை வேண்டும்; குறையைத் தேர்ந்தெடுக்கையில் இளைஞனின் பார்வை வேண்டும்.



3. துணியையும், பெண்ணையும் விளக்கு வெளிச்சத்தில் தேர்ந்தெடுக்காதே.

4. திருமணத்திற்கு முன்னால் கண்ணை திறந்து வைத்துக் கொள்; - பின்னால் பாதி கண்ணை மூடிக்கொள்.

கவிஞர் கண்ணதாசன் தொகுப்பிலிருந்து.

அடுத்த கணம் அது நிகழ்ந்தது.

எங்கள் முன் குனிந்திருந்த பரிசாரகரின் முகத்தில், நாகசாமி பளீர் என்று எச்சில் கையால் ஓர் அறை விட்டார். நான் நிலை குலைந்து அங்கிருந்து ஓடி விடலாமா என்று சிந்திக்கத் தொடங்கினேன். ஆனால் பரிசாரகரோ கன்னத்தைத் தடவியபடி, "பரவாயில்லை இன்னொரு சப்பாத்தி போடட்டுமா" என்றார். அடுப்படியில் இருந்து ஒரு பெண் மணியும், ஒரு பெரியவரும் வெளிப்பட்டார்கள்.

நாகசாமி, ஒரு பராக்ரமசாலியைப் போல் மார்பை விரித்துக்கொண்டு எழுந்து நின்றார். அடுப்படியில் இருந்து வந்தவர்களைப் பார்த்து, "என்னடா... குஜராத்தியானெல்லாம் என்னை அடிக்கப் போறீங்களா?" என்றபடி, மிக மோசமான வசனமொன்றை, அந்த இனத்தாருக்கே பொதுவாக வையத் தொடங்கினார். வைதபடி தெருவைப் பார்த்துக்கொண்டு நடக்கத் தொடங்கினார். அந்தப் பெண்மணி, தம் காதுகளைப் பொத்திக்கொண்டு, "ஹரே ராம்" என்றார். நாகசாமி, அந்தப் பெண்மணியைப் பார்த்தும் தூஷணையான வார்த்தை ஒன்றைப் பொழிந்தார். நான் அரைஉயிர் மனிதனாகி, அசக்தனாகி, இலைகளைப் பார்த்துக் கொண்டிருந்தேன்.

அந்த மென்மையான முகம் கொண்ட பரிசாரகரின் முகம், சட்டென மாறியது. வாயிலை நெருங்கியிருந்த நாகசாமியை நெருங்கினார். அவர் மார்பை இழுத்துப்பிடித்து, தன் பலம் கொண்ட மட்டும் ஓங்கி, அசுர அறை அறைந்தார். நாகசாமி திருகிக் கொண்டு படிகளில் உருண்டார். மொத்தம் எட்டுப் படிகள். காற்று மாதிரி நான் தாவிக்கடைசிப் படிக்கு வந்து நின்றேன். கை, கால், நெற்றியில் சிராய்த்துக்கொண்டு ரத்தம் கசியத் தொடங்கியது. கதர் வேஷ்டியில் ரத்தக் கறை திரண்டது. முக்கிய கடைத் தெருவாக அது இருந்ததால், சடுதியில் பெருங் கூட்டம் திரண்டது. நான் நாகசாமியைத் தூக்கிப் பிடிக்கப் பெரும் பாடுபட்டேன். இந்த அவஸ்தையில் ஒரு ரிக்ஷா வண்டிக்காரர்தான் கை கொடுத்தார். மிக லாகவமாக நாகசாமியைத் தூக்கித் தன் ரிக்ஷாவில் படுக்க வைத்தார்.

நாகசாமி அரை மயக்கத்தில் இருந்தார். என் கைக்குட்டையால், நாகசாமியின் நெற்றியில் வழியும் ரத்தத்தைத் துடைத்தேன். கைக்குட்டை முழுக்க ரத்தம் தோய்ந்தது. யாரோ என் தந்தையின் பெயர் சொல்லி, அவர் மகன், இன்னோர் ஆள் குடித்துவிட்டு கலாட்டா செய்வதாகச் சொன்னது என் காதுகளில் விழுந்தது.

நாங்கள் லாட்ஜைச் சேர்வதற்குள் நாகசாமியின் அரை மயக்கம் அகன்றிருந்தது. திடுமென அவரிடமிருந்து மிகுதியும் மது வாசனை வருவதாகப் பட்டது எனக்கு, வண்டிக்காரருக்குப் பணம் கொடுத்து நன்றி கூறி அனுப்பினேன்.

தெம்போடு உள்ளே நுழைந்தார் நாகசாமி. முன்னால் இருந்த பாரில், உயர் ஸ்டூலின் மேல் உட்கார்ந்தபடி 'ரம் லார்ஜ் வித் சோடா' என்றார். பட்டாம் பூச்சி டை கட்டியிருந்தவன், அவர் கேட்டதைக் கலந்து அவருக்குத் தந்தான். கண் இமைப்பதற்குள் அதைக் காலி செய்தார் நாகசாமி. அதுபோல, மேலும் இரண்டு லார்ஜ்களை, அவன் வியப்புறுமாறு காலி செய்தார். ஒரு கால் பாட்டில் வாங்கி, இடுப்பில் சொருகிக் கொண்டு படிக்கட்டை நோக்கிச் சென்றார். அவர் தள்ளாடுவது கண்டு, அவரைத் தாங்கிப் பிடித்துக் கொண்டு படியை நோக்கிச் செலுத்தினேன்.

நாங்கள் முதல் படியை மிதித்து ஏறுகையில், மேலே முதல் படியை ஓர் ஐரோப்பியப் பெண் மிதித்து இறங்குவது தெரிந்தது. எனக்குள் ஏதோ விபரீதம் நடக்கும்போல் தோன்றியது. கைப்பிடியைச் சார்ந்து அந்தப் பெண் இறங்கினாள். நாகசாமியும் கைப்பிடியைச் சார்ந்தே ஏறிக் கொண்டிருந்தார். பெண், தன்னைச் சுவர் பக்கமாக மாற்றிக் கொண்டாள். நாகசாமியும் என்னை நகர்த்திவிட்டு தன்னைச் சுவர் பக்கமாய் மாற்றிக்கொண்டார். நாலாம் படியில் அந்தப் பெண் கைப்பிடி பக்கமாக மாறினாள். நாகசாமி தானும் கைப்பிடி பக்கமாக மாறினார். ஆறாம் படியில் அந்தப் பெண் சுவர் பக்கமாக மாறினாள். நாகசாமியும் என் எதிர்ப்பைப் பொருட்படுத்தாமல் தன்னை மாற்றிக்கொண்டார். எட்டாம் படியிலும் இது நீடித்தது. நான் ஓடிவிடலாம் என்று இரண்டாம் முறையாக எண்ணிக் கொண்டேன். ஒரு கட்டத்தில் இருவரும் நேருக்கு நேராகச் சந்தித்துக் கொண்டார்கள். நாகசாமி அந்தப் படியில் அவளுக்குச் சமமாக நின்று, அவளை இரு கைகளாலும் தன்பால் சேர்த்து, ஆரத்தழுவி முத்தமிட்டார்.

என் கற்பனை மிக அதிகமாகவே வளர்ந்துவிட்டது. கடைசியில் ஒரு பாரில் நாம் உதைபட வேண்டி வந்து விட்டதே, அப்பாவுக்குத் தெரிந்தால் என்ன ஆகும் என்றெல்லாம் எனக்குள் கணக்குப் போட்டுக் கொண்டேன். அவமானத்தால், பேச நாவெழாது நின்றேன். அரை மயக்க நிலையை நான் உணர்ந்தேன். தூணில் கட்டிவைத்து அடித்தால்கூடப் பரவாயில்லை. சமயங்களில் நிர்வாணமாகப் பார்வையாளர் முன் நிறுத்தி வைத்துவிடுவார்கள். அதை நினைத்துக்கொண்டு விதிர் விதிர்த்து நின்றிருந்தேன்.

ஆச்சரியம் . முத்தம் பெற்ற அந்தப் பெண், புறங்கையால் கன்னத்தைத் துடைத்தபடி, லேசாகச் சிரித்துக் கொண்டு இறங்கி மறைந்தாள். எனக்குள் ஏற்பட்ட நிம்மதிக்கு அளவே இல்லை. ஒரு வழியாக அவரைச் சிரமப்பட்டு அழைத்துக்கொண்டு படுக்கையில் படுக்க வைத்தேன்.

மணி பத்தே முக்கால் ஆகியிருந்தது. அந்த இடத்தை விட்டு, நாகசாமியை விட்டு மறைந்தால் தேவலை என்றிருந்தது. ஆனாலும் முடியத்தான் இல்லை. நான் பாத்ரூமுக்குள் சென்று வருவதற்குள், வாங்கியிருந்த பாட்டிலிலிருந்து படுக்கையில் இருந்தபடியே குடித்துக் கொண்டிருந்தார். நான் அதைப் பிடுங்கி மேஜை மேல் வைத்தேன்.

"உட்கார், வைத்தி."

அந்தப் போதையிலும் அவர் வார்த்தைகள் தெளிவாக இருந்தன. நான் அவர் அருகில் அமர்ந்து சிகரெட்டைப் புகைத்துக் கொண்டேன்.

நாகசாமி படுத்தபடியே கேட்டார்: "நீ சந்தோஷமா இருக்கியா, வாழ்க்கையில?"

நான் "ஆம்" என்றேன்.

"முடியாது. இருக்க முடியாது. நீ பொய் சொல்றே."

முன்னேற்றம்

முடிஆராய்ச்சி இனியும் வேண்டாம்
முயற்சிசெய் நண்பா!
முன்னேறத் துடி – நாளை
உன் தோளில் பாரதம்

— செ. சாகுல் ஹமீது





விழிப்புணர்வு

கண் இமைகளை
வெட்டிவிடுங்கள்
அப்படியாவது
தூக்கம் குறையட்டும்
விழிப்புணர்வு
இல்லாவிட்டால்
விழிகளில்
பறவை கூடு கட்டும்!

— கே.ஜி.எப். பழனிச்சாமி

"நான் பொய் சொல்லவில்லை. எனக்கு வேலை இல்லை. வருமானம் இல்லை. திருமணம் ஆகியிருந்தது. குழந்தையும் பிறந்திருந்தது. என்றாலும் என் வீட்டு முற்றத்தில் மல்லிகை பூத்தது. என்னால் சங்கீதத்தை ரசிக்க முடிந்தது. நல்ல புத்தகங்கள் சந்தோஷம் தந்தன. பௌர்ணமி இரவுகள் வியப்பாய் இருந்தன. மனைவி, குழந்தையை நேசித்தேன். நண்பர்களை நேசித்தேன். என்னிடம் ஆறு நல்ல சட்டைகளும், நாலு நல்ல பேண்ட்டுகளும் இருந்தன. வாழ்க்கையில் சந்தோஷமாகத்தான் வாழ்ந்தேன்.''

"இல்லை, பொய். நீ பொய் சொல்றே. எனக்குச் சந்தோஷம் இல்லை. நான் தற்கொலை செய்துக்கப் போறேன்."

மேலே தளத்தில் வளையம் பொருத்தப்பட்டிருந்தது. அதைப் பார்த்துக்கொண்டே, விருட்டென்று எழுந்து அமர்ந்து "நான் தூக்கு போட்டுக்கப் போறேன்" என்றபடி தன் வேட்டியை அவிழ்த்தார்.

"வேணாம் சார்... வேணாம் சார்" என்று நான் கெஞ்சினேன்.

"அந்தப் பாட்டிலை எடு."

பொம்மை மாதிரி அவர் சொன்னதைச் செய்தேன். அவர் குடித்து முடித்துப் படுத்தார்.

"நான் புறப்படறேன் நாகசாமி. மணி பதினொன்றரை. காலைலே வந்தது. ஒய்ஃப் தனியா இருக்கும்."

"நீ போனா நான் தற்கொலை பண்ணிக்குவேன்."

"இல்ல சார்... இல்ல சார்... நான் இருக்கேன்."

சற்று நேரம் கழித்து, "உனக்கு ஏதாச்சும் பெட் இருக்கா?" என்றார்.

"இல்லை. மிருகங்களை நான் விரோதிப்பதில்லை. அவற்றின் மேல் எனக்கு அன்பு இருந்தது. எனினும் என்னால் அவற்றைக் கொஞ்ச முடியாது. அவை என்னைத் தொட அனுமதிக்க முடியாது". சொன்னேன்.

"நீ துரதிர்ஷ்டசாலி!"

"ஆம்" என்று ஒப்புக்கொண்டேன். விரோதிக்க என்னால் முடியவில்லை. நான் மிகவும் நொந்துபோய் இருந்தேன். நாகசாமியை என்னால் பகைக்கவும் கூடவில்லை. சிநேகிக்கவும் முடியவில்லை. துணியைப் பறிகொடுத்த பெண், ஆற்றுக்குள் மூழ்கி உட்கார்ந்திருப்பது மாதிரி நான் இருந்தேன். அவர் கேட்டார்:

"நீ என் மனைவியைப் பார்த்திருக்கியா?"

"இல்ல."

"அவள் அழகி. உடம்பைச் சொல்லலை."

அவர் அழத்தொடங்கினார். தேம்பலில் தொடங்கிய அழுகை, வளர்ந்து பெரிதாகி, பெருங்குரலில் அவர் அழத் தொடங்கினார். சரியாக அதே சமயம், கதவைத் திறந்துகொண்டு ராபர்ட்ஸ் தோன்றினார். எனக்கு வந்த நிம்மதியை எப்படிச் சொல்வது. ஒரு கணத்தில் நிலைமையைப் புரிந்துகொண்ட ராபர்ட்ஸ், "ஓய்... சும்மா தூங்கும்...! இந்த ராத்திரியில் என்ன அழுகை?" என்று சப்தம் போட்டார். குழந்தையைப்போலத் தூங்கத் தொடங்கினார் நாகசாமி. நான் விடை பெற்றேன்.

"காலையில் பார்க்கலாமா?"

"இல்லை ராபர்ட்ஸ். நான் மெட்ராஸ்போறேன்."

தெருவில் காலை வைக்கையில் தப்பித்து வந்த உணர்வே மிஞ்சியது.

அடுத்த நாள் காலை, எண்ணெய் ஸ்நானம் செய்தேன். காலைப் பலகாரம் முடிந்து ராமையர் கபேயில் காபி குடிக்கலாம் என்று சின்னக் கடை மணிக்கூண்டுக்கு வந்தேன். காபி குடித்துவிட்டு வெளியே வருகையில் என் முன் நின்றார் நாகசாமி.

"வணக்கம் சார்!"

"வணக்கம். ஊருக்குப் போகலியா?"

"போகணும்... கொஞ்சம் வேலை."

"நேத்து உங்களை ரொம்பவும் தொந்தரவு பண்ணிட்டேன். மன்னிச்சிடுங்க வைத்தி."

"அப்படி ஒண்ணும் இல்லை சார். இருப்பீங்களா?"

"இல்லை. மதியம் ஊருக்குப் புறப்படறேன். கடுமையான தலைவலி. மாத்திரை வாங்கிட்டுப் போகலாம்னு வந்தேன். சரி, புறப்படுங்க. மதுரை வந்தா என்னை மறக்காதீங்க."

நான் விடை பெற்றுக்கொண்டு திரும்பினேன். நாகசாமி குறித்து மனசுக்குள் வருத்தமும் இருந்தது, வெட்கமாகவும் இருந்தது. ஃ

மூதறிஞரின் வாழ்த்து!

'தீவளிக்குத் தீவளி' என்று வேகமாகச் சொல்லிப் பார்த்தால் ஏதோ நேற்றும் - இன்றும் போல் நெருக்க மாக ஒலிக்கும்.

ஓராண்டுக் காலம் என்பது இமைப்பதற்குள் ஓடி விடுகிறது. ஓர் ஆண்டுக்குள் எவ்வளவு மாறுதல்! எவ்வளவு வளர்ச்சி!

சென்ற ஆண்டுத் தீபாவளி மலரில் 'மறக்க முடியாதவர்கள்' என்ற தலைப்பில் கட்டுரை எழுதி னேன்:

"ஒவ்வொருவர் வாழ்க்கையிலும் மறக்க முடியாத சம்பவங்கள் பல இருக்கும்; வாழ்க்கையில் சந்தித்த மறக்க முடியாத மனிதர்கள் பலர் இருப்பார்கள். மாமேதைகளிலிருந்து எளியவர்கள் வரையில் அவர் களைச் சந்தித்த பசுமையான நினைவுகள் பலவற்றை இப்போது அசை போடும்போது மனதுக்கு மிக மகிழ்ச்சியாக இருக்கும். இதில் பெரியவர்கள் சிறிய வர்கள் என்ற வேற்றுமை கிடையாது" என்று குறிப்பிட்டிருந்தேன். தொடர்ந்து எழுத எண்ணி னேன்; அடுத்த தீபாவளி வந்துவிட்டது. இந்த ஆண் டும் அந்த முன்னுரையுடன் தொடங்குகிறேன். எந்த விதப் பிற்சேர்க்கையும் இல்லை. இன்னும் சொல்லப் போனால் சிறியவர்கள் என்று யாருமே கிடையாது. எல்லோரும் பெரியவர்களே! மகானுபாவர்களே!

ஒவ்வோர் அன்பர் ஒரு 'ஹீரோ'வை இலட்சிய மாகக் கொள்வார்கள். வெளியே புலப்படுத்தா விடினும் அந்தரங்கத்தில் இதய பீடத்தில் அவரை ஆராதனை செய்ய என்று ஒரு மகாபுருஷர் இருப்பார். அப்படி எனக்கும் உண்டு. அவர்தான் கல்கி. கல்கி யார் யாரைப் போற்றிப் புகழ்கிறாரோ அவர்கள் எனக்கும் வேண்டியவர்கள்! 'கல்கி' போற்றிப் புகழ்ந்த ராஜாஜியிடம் எனக்கு மதிப்பும் மரியாதை யும் உண்டு.

1938-39 கால கட்டத்திலேயே ராஜாஜி அவர்களைத் தொலைவில் இருந்து, கண்டு வணங்கும் வாய்ப்பு எனக்குக் கிடைத்திருக்கிறது. பத்துப் பதினொரு வயதுக் காலத்தில் அரசியலைப் பற்றி அறியாத பருவத்தில் என் தந்தை கூறுவதையும், அடுத்த வீட்டு எதிர்வீட்டுக்காரர்கள் பேசுவதையும் (நான் வசித்த வீட்டிற்கு எதிர் வீடு கிடையாது. சைதாப்பேட்டை தேரடி வீதியில் எதிரே ரயில்வே தடமும் மதிள் சுவரும்தான்!) கேட்டறிந்த அறிவு.

'கல்கி' பத்திரிகை 1940இல் ஆரம்பமானபோது கல்கி கிருஷ்ணமூர்த்தி அவர்கள் மிக அழுத்தமாக ராஜாஜி அவர்களை ஆதரித்தார்கள்.

ராஜாஜியின் கருத்தைப் பிரதிபலிக்கும் ஏடாகக் கல்கி திகழ்ந்தது.

ராஜாஜியின் ஆற்றலை உலகம் போற்றிப் புகழ்ந் தது. நகைச்சுவை மிகுந்த பேச்சும், தூய வாழ்க்கை யும், கூரிய மதியும் கொண்ட ராஜாஜி அவர்களை நேரே



சந்திக்கும் வாய்ப்பு ட்ட அந்த நாளை நான் நினைத்துப் பார்க்கி .

காங்கிரஸ் கட்சியி உட்பூசல் தமிழ் நாட்டில் எப்போதும் உண்டு. ராஜாஜி - காமராஜ் கோஷ்டிகள் ஒவ்வோர் ஊரிலும் உண்டு. திருப்பரங்குன்றம் சம்ப வத்திற்குப் பிறகு ராஜாஜியை ஆதரிப்பவர்கள் என்று

விக்கிரமன்


தனியே ஒரு கோஷ்டியே ஏற்பட்டு விட்டது. பல ஆண்டு களுக்குத் தொடர்ந்தது.

1944-ல் பள்ளியில் படிக்கும்போதே 'தமிழ்ச்சுடர்' என்ற கையெழுத்துப் பத்திரிகையை நடத்தத் தொடங்கினேன். என் பள்ளித் தோழரும், உயர் நண்பருமான நா. சுப்பிரமணியம் ஸுபா அவர்களும் நானும் சேர்ந்து அந்தப் பத்திரிகையை மாத இதழாகத் தொடங்கினோம்.

தமிழ் மாதம் கிருத்திகை நாளன்று அந்த இலக்கிய இதழ் வெளிவரும். ஓவியர் ஸுபா பக்கத்திற்குப் பக்கம் வண்ண அலங்காரத்தால் அழகு படுத்தி விருப்பார். அவருடன் படித்த சித்திரக் கலாசாலை ஓவியர்களும் படம் வரைந்து அலங்கரிப்பார்கள். ஏதோ ஆனந்தவிகடன், கல்கி பத்திரிகையை நடத்து வதாக மனத்தில் ஒரு செருக்கு. அந்த எண்ணத் திற்குப் பல நண்பர்கள் சாமரம் வீசுவார்கள். புகழ்ப் போதையை ஊட்டுவார்கள். தபால் தந்தி அதிகாரி யாக இருந்து இப்போது ஓய்வுபெற்ற அ. தாமோதரம், டி.எஸ். சொக்கலிங்கம் நடத்திய தினசரி நாளிதழில் பணியாற்றிய எஸ். பாலசுப்பிரமணியம் (பாலு) போன்ற நண்பர்களின் ஊக்கம் தமிழ்ச்சுடர் இதழைச் சிறப்பாக நடத்த வழிசெய்தது.

பிரபல எழுத்தாளர்கள், அறிஞர்களிடம் தமிழ்ச் சுடரைக் காட்டி மதிப்புரை பெற ஆவல் கொண்டேன்.

பசுல்லா சாலையில் உள்ள ராஜாஜியின் இல்லத் திற்கு எந்தவித முன் ஏற்பாடுமின்றி ஸுபாவும் நானும் சென்றோம்.



'ராஜி' என்று பெயரிடப்பட்டிருந்த அந்த இல்லத்து வாயில் கேட்டருகே மிக பயபக்தியுடன் உள்ளே செல்ல லாமா வேண்டாமா என்று தயங்கி நின்று கொண் டிருந்தோம்.

ராஜாஜியின் திருமகன் நரசிம்மன் வராண்டாவிற்கு வந்து எங்களை யாரென்று வினவினார். கையிலிருந்த சுடர் இதழைக் காட்டி, வந்த விவரத்தைக் கூறினோம்.

எங்களை அங்கேயே இருக்கச் சொல்லிவிட்டு, தன் தந்தை ராஜாஜியிடம் அவர் சென்றார்.

தேர்வு முடிவை எதிர்நோக்கும் மாணவன் போல் காத்திருந்தோம்.

எங்களைக் காண ராஜாஜி சம்மதித்து விட்டார்.

மாடி அறையில் உலக மாமேதை ராஜாஜி அமர்ந் திருந்தார்.

'தமிழ்ச் சுடரை' அவர் திருக்கரங்களில் சமர்ப் பித்து, பாதத்தில் வீழ்ந்து வணங்கினோம்.

பத்திரிகையை மிகவும் கவனமாக ஒவ்வொரு பக்கமாக நின்று நிதானித்துப் பார்த்தார். பிறகு எங்க ளிடம் அந்த இதழைத் திருப்பிக் கொடுத்து,

"இதுபோல் எவ்வளவு பத்திரிகை எழுதியிருக்கிறீர் கள்?" என்று கேட்டு மூக்குக் கண்ணாடி வழியே நோக்கினார்.

ஸுபாவும் நானும் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டோம்.

"இதுதான் முதல் இதழ்"

"அதுசரி; இதைப்போல் ஒன்றே ஒன்றுதானா? இன்னும் எழுதியிருக்கிறீர்களா?"

"ஒன்றே ஒன்றுதான்"

"இதனால் கை எழுத்து நன்றாகப் படியும்" என்று சொல்லி எங்களை மறுபடியும் தன் கூர்மையான விழிகளால் நோக்கினார்.

கருவறையில் மூர்த்தியைத் தரிசித்த உணர்வோடு பேச வார்த்தை இல்லாமல் நின்று கொண்டிருந்தோம்.

சரி நீங்கள் போகலாம் என்பதற்கு அடையாளமாக அவர் தலை அசைத்தார்.

"தங்களுடைய கருத்தை எழுத வேண்டும்" என்று தமிழ்ச் சுடரை மீண்டும் பேரறிஞரிடம் கொடுத்தேன்.

அவர் அதை வாங்கி, கடைசிப் பக்கத்தில் 'பேஷ் ரொம்பவும் நன்றாக இருக்கிறது இராஜகோபாலாச் சாரி' என எழுதிக் கொடுத்தார்.

ஆகா! அந்தக் காலத்தில் நாங்கள் அடைந்த இன்பம்...

விடை பெற்றுக் கொண்டோம்.

"எந்தப் பள்ளிக்கூடம்?"

"இராமகிருஷ்ணா உயர் நிலைப்பள்ளி"

"படிப்பிலும் கவனம் செலுத்தவேண்டும்" என்றார் மாமேதை.

அன்று அவர் கொடுத்த 'டானிக்' பத்திரிகைத் துறையில் என்னை மிக நீண்ட பயணத்துக்கு ஆயத்தப் படுத்திற்று.

1950ஆம் ஆண்டு காந்தி நகரில், மூதறிஞர் ராஜாஜியை ஸூபாவும், நானும் சந்தித்தோம். தில்லியில் பெரிய பதவி வகித்துக் கொண்டிருந்த அவர் சென்னைக்கு விஜயம் செய்திருந்தார்.

'அமுதசுரபி' ஆசிரியப் பொறுப்பை பிப்ரவரி 1950இல் ஏற்றிருந்தேன். அப்பொழுதெல்லாம் சித்திரை மாதம் ஆண்டு மலர் வெளியிடும் வழக்கம் இருந்தது.

1950 – இரண்டாவது ஆண்டு மலர். ஏப்ரலில் வெளிவர வேண்டும். ராஜாஜி அவர்கள் தில்லியிலிருந்து வந்திருக்கிறார் என்று கேள்விப்பட்டேன். அவரைச் சந்தித்து, ஆண்டு மலருக்குக் கட்டுரை பெற முடிவு செய்தேன். ஸூபாவும் நானும் அவரைக் காணச் சென்றோம். யாருடைய சிபாரிசு, முன் 'அப்பாயிண்ட்மெண்ட்' ஒன்றும் கிடையாது.

காந்தி நகரில் அவர் தங்கியிருந்த வீட்டை எளிதில் கண்டு பிடித்தோம்.

வாசலில் போலீஸ் பாதுகாவல் ஒன்றைத் தவிர வேறு 'கெடுபிடி' இல்லை.

1948இல் வித்துவான் லட்சுமணன் அவர்களை ஆசிரியராகக் கொண்டு தொடங்கப்பட்டது அமுதசுரபி. 1950இல் அவர் பதவி விலகினார். அந்தப் பொறுப்பை இலக்கியப் புரவலரும் நிறுவனரும் பதிப்பாளருமான டி.கே. சாமி என்னிடம் அளித்திருந்தார்.

அந்த வவரம எல்லாம் ராஜாஜுயிடம் எடுத்துக கூறி, 1945 ஆம் ஆண்டு தமிழ்ச் சுடர் கை எழுத்து ஏட்டிற்கு வாழ்த்துப் பெற்ற செய்தியையும் நினைவு படுத்தினேன்.

'அமுதசுரபி' இதழைப் பற்றிய விபரங்களைக் கேட்டறிந்தார். "இவ்வளவு சின்ன வயதில் ஆசிரியராகி விட்டீர்களே" என்றார். நியாயம்தான் 'அமுதசுரபி' இலக்கிய இதழின் ஆசிரியரின் வயது 22!

"கட்டுரை எழுத அவகாசமில்லை" என்றார்.

"இவர் தான் ஓவியர் ஸூபா" என நண்பரை அறிமுகப்படுத்தினேன்.

"ஓவியரா?" என்று கூறி எங்களை ஒருமுறை ஏறிட்டுப் பார்த்தார்.

"சித்திரக்காரர் என்று சொல்லுங்கள்" என்று சொல்லி ஒரு மெல்லிய புன்னகை செய்தார்.

"தங்களது வாழ்த்து வேண்டும்" என்று வற்புறுத்தினேன். அருகே இருந்த தாளில் எழுதி வாழ்த்துரையை அளித்தார்.

உயர்தரப் பொருள் ஒன்று
வாலிபர்கள் சேர்ந்து உழைத்து
உண்டாக்கி வந்தால் யார்தான்
சந்தோஷப்படமாட்டார்கள்?
[illegible]

சி. ராஜகோபாலாச்சாரி

அன்றே பதிப்பாளர் டி.கே. சாமியிடம் வாழ்த்துரைகளைக் கொடுத்து கம்பீரமாக நின்றேன்.

அந்தக் காலகட்டத்தில் புதிய இலக்கிய இதழைத் தொடங்கி நடத்துவதென்பது எளிதான செயலன்று. தொடங்கிய இரண்டு ஆண்டுகளில் திரு டி.கே. சாமிக்குப் பெரும் நஷ்டம் ஏற்பட்டிருந்தது.

ராஜாஜியிடமிருந்து ஆசி பெற்றுவந்தது திரு டி.கே. சாமி அவர்களுக்குப் புதிய உற்சாகத்தை அளித்தது.

1950க்குப் பின் பேரறிஞர் ராஜாஜி அவர்களைச் சில முறைகள் அவர் இல்லத்தில் சந்தித்திருக்கிறேன். ஒவ்வொரு முறை சந்திப்பின்போதும் தன் நண்பர் ஒருவர் உடன் இருப்பார்.

தமிழ், தமிழர் பண்பாட்டைப் பற்றி அவர் கூறியவற்றை இப்போது இங்கே விவரிப்பது நியாயமான்று. வீண் விவாதத்தை ஏற்படுத்தும் என்பதால் விவரிக்கவில்லை.

உலகமாமேதை ராஜாஜி அவர்களைச் சந்தித்த ஒவ்வொரு நிகழ்ச்சியும் கல்வெட்டைப் போன்று அழியாது மனத்தில் இருக்கிறது.

மூத்தோர் சொல்லும், வாழ்த்தும் பலிக்கும் என்பதற்கு ராஜாஜி அருளிய ஆசியே சாட்சி.

மீண்டும் அவர் அருளிய வாழ்த்துச் செய்தியைப் படித்துப் பார்க்கிறேன்.

'அமுதசுரபி' எனும் உயர்தரப் பொருளை உழைத்து உருவாக்குவதில் இளைஞர்களின் பங்கு மகத்தானது.'

அவருடைய சொற்கள் மந்திரம்போல் நின்று காத்து வருகின்றன.

அதிசய உண்மைகள்

சாதாரணமாக நம்மில் பெரும்பாலோர் வலது கையினால்தான் எழுதுவார்கள். சிலருக்கு இடது கைப் பழக்கமும் இருக்கும்.

இரண்டு கைகளினாலும் ஒரே சமயத்தில் இரண்டு வேறு மொழிகளில் எழுத முடியுமா?

முடிந்திருக்கிறது.

அமெரிக்க ஜனாதிபதியாக இருந்த ஜேம்ஸ் கார்பீல்ட் என்பவர் ஒரே சமயத்தில் ஒரு கையினால் கிரேக்க மொழியிலும் மற்றொரு கையால் லத்தீன் மொழியிலும் எழுத வல்லவராக இருந்தாராம்.

— வீ. ரமேஷ்


குளிர்காய்பவர்கள்!

கவியரசு நா. காமராசன்

தரையடி அனலின்
        கூடு திறந்து
ஒரு ராட்சஸ அக்கினிப் பறவையாம்...
        சிறகுகள் உயர்த்தும்
        குளிர்க்காயும் தீக்கொழுந்து!


அது
        சருகுகள் மேய்ந்து
        சாம்பலில் உறங்கும்...
        அலகுகளில் புகை மூச்சுவிடும்:
        பனி மூட்டத்தைச் சுட்டு
        பலி பீடம் கட்டும்
        தேறாற்று யாகத்தீ!

அக்குளில் கைவிரல்களை
    - திரவியம் போல் மறைத்து
ஒருநிலை இருத்தலில்
        தவமுகம் சுமந்த
        குளிர்காயும் மனிதர்கள்...
நெருப்பைத் தொட்டு விடாமலும்
        கணப்பை விட்டு விடாமலும்
ஒரு பாதுகாப்பான சிறுதூரத்தில்
        உள்ளங்கை நீட்டி...
        சூட்டை எடுத்துக் கன்னத்தில்
        தொட்டுக்கொள்ளும் போது...
        சூரியப் பிரகாசத்தில்
        அடுப்பில் உறங்கி எழுந்த
        சாம்பல் நிறப் பூனையின்
        கண்களில் மட்டும் தீ...!



மனதில் உறுதி வேண்டும்!

டாக்டர் பூவண்ணன்



சுந்தரமும் மணியும் கடற்கரையை நோக்கிச் சென்று கொண்டிருந்தார்கள்.

சுந்தரம் கடற்கரைக்கு வெகு அருகில், திருவல்லிக்கேணியில் வசிப்பவன். அவனுக்கு மெரினா கடற்கரை, அவன் வீட்டுப் பின்புறம் போல அவ்வளவு அருகில் இருப்பது. நினைத்த நேரத்தில் கடற்கரைக்குச் சென்று வருவான்.

மணி கோயம்புத்தூரிலிருந்து வந்திருப்பவன். அவனுக்குக் கடற்கரை ஓர் அதிசயம்! ஆனந்தம்! அதனால் எப்போதெல்லாம் அவன் சென்னைக்கு வருகிறானோ, அப்போதெல்லாம் கடற்கரைக்குத் தவறாமல் வருவான். சென்னையில் தங்கியிருக்கும் ஒவ்வொரு நாளும் ஒரு முறையாவது கடற்கரைக்குச் செல்வான்.

மணியும் சுந்தரமும் சகோதரர்கள். பெரியப்பா, சித்தப்பா பிள்ளைகள்.

அன்று மணி கோவையிலிருந்து சென்னைக்கு வந்திருந்தான். அதனால் கடற்கரைக்கு வெகு ஆவலோடு சுந்தரத்துடன் புறப்பட்டான்.

அப்போது மணி மாலை நான்கு.

சூரியன் இன்னும் மறையவில்லை. வெயிலின் வெம்மை குறையவில்லை. என்றாலும் கடற்காற்று உடலுக்கு இதம் அளித்துக் கொண்டிருந்தது.

சுந்தரமும் மணியும் சுரங்கப் பாதையில் இறங்கி, மறுபுறம் ஏறி, கண்ணகி சிலையை அடைந்தார்கள். அங்கே தின்பண்டங்களும் குளிர் பானங்களும் விற்கும் சில கடைகள் இருந்தன.

"மணி, சிப்ஸும், பாப்கார்னும் வாங்கிட்டுப் போகலாம்" என்றான் சுந்தரம்.

மணி சம்மதித்தான்.

இருவரும் அருகே இருந்த கடைகளைப் பார்வையிட்டார்கள். ஒரு கடையின் முன்னே, சிப்ஸ், பாப்கார்ன், வேர்க்கடலை முதலிய பாக்கெட்டுகள் குவிந்திருந்தன. இருவரும் அந்தக் கடைக்குச் சென்றார்கள்.

"ரெண்டு சிப்ஸ், ரெண்டு பாப்கார்ன் கொடு" - சுந்தரம் கேட்டான்.

"சிப்ஸ் பாக்கெட் ரெண்டு ரூபாய். பாப்கார்ன் பாக்கெட் ஒரு ரூபாய்".

கடைக்காரன் சொன்னதும் சுந்தரம் தனது பாக்கெட்டில் கை விட்டு, இருபது ரூபாய் நோட்டை எடுத்து நீட்டினான். கடைக்காரன் அதை வாங்கித் தனது பாக்கெட்டில் போட்டுக் கொண்டான். பிறகு இரண்டு சிப்ஸ் பாக்கெட்டும் இரண்டு

மீன் தொட்டி


கவிஞர் செல்ல கணபதி

சின்னச் சின்ன மீன்கள் ஒன்றாய்ச்
சேர்ந்து வாழும் தொட்டியாம்
வண்ண வண்ண மீன்கள் அன்பாய்
வாழு கின்ற தொட்டியாம்.

கண்மாய் குளத்தைப் பார்த்தால் தொட்டி
கடுகு போலச் சிறியதாம்
வண்ண மீன்கள் அதிலும் கூட
வம்பில் லாமல் வளருமாம்.

அண்ணன் தம்பி சண்டை யில்லை
அனுச ரித்து வாழுமாம்
சின்ன மீனைப் பெரிய மீன்கள்
சிறிதும் ஏய்ப்ப தில்லையாம்.

பருக்கை கொஞ்சம் போடும் போதும்
பங்கு போட்டுத் தின்னுமாம்
நெருக்க மான உறவு கொண்டு
நேர்த்தி யாக வாழுமாம்.



அதிசயப் பிறவி

லெமன்


பாம்புக் கொத்துப் போலே கடலில்
பாய்ச்சல் காட்டுவேன்
பழுப்புச் சாய மசியைப் பீச்சிப்
பலரை ஓட்டுவேன்.

பவளத் திட்டில் பள்ளம் தோண்டிப்
பதுங்கிக் கொள்ளுவேன்.
பசிக்கு மீனும் நண்டும் தின்று
பம்மித் துள்ளுவேன்.

நிலை கொள்ளாமல் நீர்க்குள் மேனி
நிறங்கள் மாறுவேன்
நினைத்தால் உடலைத் தட்டை யாக்கி
நிலவில் ஊறுவேன்!

எனக்கு வார எட்டுக் கைகள்
எலும்புகள் இல்லை!
என்னைத் தின்ன விரும்புவோரால்
எத்தனை தொல்லை!

அக் வாரியம் விட்டே வந்த
அருமை ஆக்டபஸ்...
ஆட்கள் தேடி வருவதற்குள்
ஆவாயே வாபஸ்!



பாப்கார்ன் பாக்கெட்டும் எடுத்துக் கொடுத்தான். அவற்றை மணி வாங்கிக்கொண்டான்.

மீதிக் காசுக்காகக் கை நீட்டினான் சுந்தரம். கடைக்காரன் கடையில் இருந்த ஒரு சிறு பெட்டியைத் திறந்து, சில நோட்டுகளை அடுக்கிச் சுந்தரத்திடம் தந்தான்.

சுந்தரம் வாங்கிய நோட்டுகளைப் பார்த்தான். அவ்வளவும் ஒரு ரூபாய் நோட்டுகள். அவற்றை எண்ணிப் பார்த்தான். நான்கு இருந்தன.

"என்னப்பா, நாலு ரூபா கொடுக்கறே. இன்னும் பத்து ரூபா கொடு" என்று கேட்டான் சுந்தரம்.

"இன்னும் பத்து ரூபாயா! இன்னாடா தமாஷ் பண்றே! பத்து ரூபா கொடுத்துட்டு ஆறு ரூபாக்கு சிப்ஸ், பாப்கார்ன் வாங்கிட்டா மீதி நாலு ரூபா தானே? இன்னும் பத்து ரூபா எப்படிடா வரும்?"

கடைக்காரன் உரத்த குரலில் சொன்னதைக் கேட்டுச் சுந்தரம் திடுக்கிட்டான். "நான் இருபது ரூபா நோட்டுக் கொடுத்தேன்" என்று பயத்தோடு கூறினான்.

"சும்மா ரீல் விடாதே கண்ணா. பத்து ரூபா கொடுத்துட்டு இருபது ரூபான்னு சொல்லி ஏமாத்தாதே!"

"நான் இருபது ரூபாதான் கொடுத்தேன்".

சுந்தரத்தின் குரலில் இருந்த அழுத்தம் கடைக்காரனுக்குப் பிடிக்கவில்லை.

"நீ பத்து ரூபாதான் கொடுத்தே. தெரியுமா? மேலே தகராறு செஞ்சே உதை வாங்குவே".

கடைக்காரனின் தோற்றமே பரட்டைத்தலையுடனும், கற்றை மீசையுடனும் . அவனை மிரட்டியது. சுந்தரம் ஓரடி பின்வாங்கினான்.

அப்போது மணி பேசினான்.

"கடைக்காரரே சுந்தரம் இருபது ரூபாய்தான் கொடுத்தாங்க. நான் நல்லா பாத்தேனுங்க. அதனாலே சின்னப் பசங்களை ஏமாற்றாம மீதி பத்து ரூபாயைக் கொடுத்திடுங்க".

மணியின் பேச்சு கடைக்காரனை ஆத்திரம் கொள்ளச் செய்தது. அதனால் தனக்கருகே காக்காய் ஓட்டுவதற்காக வைத்திருந்த பிரம்பை உருவி ஓங்கினான்.

"மரியாதையா போறையா, இல்லை அடிவாங்கறையா?"

கடைக்காரனின் குரலைக் கேட்டுச் சுந்தரம் நடுங்கினான். அவன் "மணி, உனக்கு மெட்ராஸ் சரியா தெரியாது. பணம் போனா போறது. வா போகலாம்" என்றபடி மணியைப் பிடித்து இழுத்தான்.

மணி சுந்தரத்தின் கையைத் தட்டிவிட்டு, முடியாது! மீதிப் பத்து ரூபாயை வாங்காம இங்கிருந்து போக மாட்டேன்!" என்று உறுதியோடு கூறி, 'அட்டென்ஷ'னில் நின்றான்.

கடைக்காரன் ஓங்கிய பிரம்பால் பளார் என்று ஓர் அடி கொடுத்ததும், "ஐயோ" என்று சுந்தரம் அலறினான். அடி வாங்கிய மணி அலறவில்லை. அவன் "ஏமாத்தாதே! ஏமாத்தாதே! பத்து ரூபாயைத் திருப்பிக் கொடு" என்று வேலை நிறுத்தம் செய்யும் தொழிலாளர் பாணியில் உரக்கக் குரல் கொடுத்தான்.

அடி வாங்கியதும் சிறுவன் பயந்து ஓடிப்போவான் என்று எதிர்பார்த்த கடைக்காரன், மணி பகத்சிங் போல அசையாமல், அஞ்சாமல், ஆண்மையோடு நிற்பதைக் கண்டு திகைத்து விட்டான். என்றாலும் ஏமாற்ற நினைத்த பத்து ரூபாயை இழக்க மனமில்லாமல், இன்னொரு முறை மணியை அடித்தான்.

இரண்டாவது அடிவாங்கிய மணி முன்பைவிட இருமடங்கு பலமான குரலில், "ஏமாத்தாதே! ஏமாத்தாதே! பத்து ரூபாயைத் திருப்பிக் கொடு" என்று கத்தினான்.

"அடேய் பொடியா, நீ அடி வாங்கிச் சாகப்போறே!" என்று மிரட்டினான் கடைக்காரன்.

"செத்தாலும் சாவேனே தவிர, பணம் வாங்காமல் போக மாட்டேன்" என்று கூறிய மணி, மீண்டும் "ஏமாத்தாதே! ஏமாத்தாதே!..." என்று கோஷம் எழுப்பினான்.

அவனை மீண்டும் அடிக்க ஓங்கிய கடைக்காரனின் கையை ஒரு பெரியவர் பிடித்துக் கொண்டார். அவர் அந்த வழியே சென்று கொண்டிருந்தவர். மணி முதலில் 'ஏமாத்தாதே' என்று முழங்கிய போதே, அங்கே நின்று நடந்ததைப் பார்த்தவர். அவர்தான் கடைக்காரரின் கையைப் பிடித்தார்.

கடைக்காரன் பெரியவரைப் பார்த்தான். மல்லிகைப் பூபோல வெள்ளையான கதர் வேட்டி கட்டி, கதர்

சட்டையணிந்து, தோளில் கதர்த் துண்டு தொங்கக் காட்சியளித்தார். அவர், "இங்கே என்ன தகராறு? ஏம்பா இந்தச் சின்னப் பையனை அடிக்கறே?" என்று கேட்டார்.

"பத்து ரூபா கொடுத்துட்டு, இருபது ரூபா கொடுத்ததா சொன்னா அடிக்காம தட்டிக் கொடுப்பாங்களா?" என்று கூசாமல் பொய் கூறினான் கடைக்காரன்.

மணி, "இல்லைங்க. நாங்க இருபது ரூபாதாங்க கொடுத்தோமுங்க" என்றான். சுந்தரம் அதை ஆமோதித்தான்.

"ஏம்பா, பசங்க பொய் சொல்ற மாதிரி தெரியலையே..." என்றதும் கடைக்காரன் சீறினான்.

"அப்போ நான் பொய் சொல்றேனா?"

"அப்படித்தான் தோணுது. பையனுடைய உறுதி அவனது மனசின் சுத்தத்தைக் காட்டுது. அந்த உறுதிதான் அவனுக்கு உனது பலாத்காரத்தைத் தாங்கிக் கொள்கிற சக்தி கொடுத்திருக்கிறது. காந்திஜி என்ன சொல்றார் தெரியுமா?

"வலிமை அசைக்க முடியாத மனவுறுதியிலிருந்து தோன்றுகிறது. மனம் தூய்மையாய் இருந்தால் மன வுறுதியும் வலிமையும் தோன்றும் என்று கூறுகிறார். இந்தப் பையனின் மனத்தில் பொய் இல்லை. அதனால் உறுதியோடு நிற்கிறான். அந்த உறுதியால் உன் அடியைத் தாங்கும் வலிமை பெற்றிருக்கிறான். அதனால் தான் அவன் அழவில்லை. பேசாமல் பத்து ரூபாயைத் திருப்பிக் கொடு".

"என்னய்யா, பிரசங்கம் பண்றே! மரியாதையா போகலே உன் வயசைப் பாக்காம உனக்கும் அடி கிடைக்கும்" என்றான் கடைக்காரன்.

உடனே அந்தப் பெரியவர், "ஏமாத்தாதே! ஏமாத்தாதே!" என்று மணியின் முழக்கத்தை உரக்கக்கூற, "பத்து ரூபாயைத் திருப்பிக் கொடு" என்று மணி முழங்கினான். சுந்தரம் இப்போது அச்சம் தவிர்ந்த ஆண்மை பெற்றவனாகி, அந்த முழக்கத்தில் பங்கு கொண்டான்.

மூவரும் தொடர்ந்து முழங்க, காற்று வாங்க வந்த பலரும் அருகே சுற்றி நின்று வேடிக்கை பார்த்தார்கள்.

கடைக்காரன் திகைத்து விட்டான்.

அப்போது அடுத்த கடைக்காரன், "வாத்யாரே கூட்டத்தைப் பார்த்து போலீஸ் வருது... தகராறைச் சட்டுன்னு தீத்துக்கோ" என்று கூற, கடைக்காரன் பார்வையை உயர்த்திப் பார்த்தான். தூரத்தில் ஒரு போலீஸ்காரன் வருவது தெரிந்தது.

ல, ள, ழ பயிற்சிக்கு ஒரு பாட்டு...

ரா. பொன்ராசன்

வேலை வேலை வேலை எந்த
வேலை என்றா லும் = அது
காலை மாலை கடும் வெயில்
வேளை என்றா லும்
நாளை நாளை நாளை என்று
நாள் கடத்தா மல் = அதை
நாம் முயன்று முடிக்க வேண்டும்
அப்போ தப்போதே!

ஏழை ஏழை ஏழை யாக
இருந்து விட்டா லும் = கொடும்
கோழை யாக மட்டும் என்றும்
இருக்கக் கூடாது!
வாழை யடி வாழை வீர
வைர நெஞ்ச ரே - எழுந்து
வாரும் நந்தம் கடமை செய்வோம்
இப்போ இப்போ வே!



கடைக்காரன் சட்டென்று பெட்டியைத் திறந்து பத்து ரூபாய் நோட்டை எடுத்து நீட்டினான்.

"இந்தா பத்து ரூபா... வாங்கிட்டு தொலை" என்றான்.

மணி மகிழ்ச்சியோடு அதை வாங்கிச் சுந்தரத்திடம் கொடுத்தான். பெரியவருக்கு அவன் நன்றி தெரிவிக்க, "உங்களுக்குப் புண்ணியமா போவட்டும். கடையை விட்டுத் தள்ளிப் போய்ப் பேசுங்க" என்று கையெடுத்துக் கும்பிட்டபடி கேட்டான் கடைக்காரன்.

"வா தம்பி மணலில் உட்கார்ந்து பேசலாம்" என்று பெரியவர் கூறி நடந்தார். மனத்தில் உறுதி கொண்ட மணியும், அவனால் உறுதி பெற்ற சுந்தரமும் அவர் பின்னே நடந்தனர். ○○

வேடிக்கைக் கணக்குகள்

1. மூன்று வரிசையான எண்கள். அவற்றை ஒன்றோடொன்று கூட்டினாலும், ஒன்றோடொன்று பெருக்கினாலும் ஒரே விடைதான் வரும். அந்த எண்கள் எவை?

2. ஒரு திருமணம். திருமணத்தில் பாட்டுக்கச்சேரி. கச்சேரியில் ஜேசுதாஸும் வாணிஜெயராமும் பாட்டு பாடினார்கள். ஜேசுதாஸ் பாடியது 18 பாடல்கள். வாணிஜெயராம் பாடியது 16 பாடல்கள். மொத்தம் பாடப் பெற்றவையோ முப்பதே பாடல்கள். எப்படி?

3. ஒரு தட்டில் பத்து லட்டுகள். பத்து பேருக்கு தலைக்கு ஒரு லட்டு தர வேண்டும். தந்த தட்டிலும் ஒரு லட்டு இருக்க வேண்டும். இது சாத்தியமா?

விடைகள்

1. அந்த எண்கள் - 1, 2, 3.
1+2+3= 6
1x2x3=6

2. ஜேசுதாஸ் மட்டும் பாடியது - 14 பாடல்கள்.

வாணி ஜெயராம் மட்டும் பாடியது - 12 பாடல்கள்.

இருவரும் சேர்ந்து பாடியது - 4 பாடல்கள்.

3. சாத்தியம். கடைசி லட்டைத் தட்டுடன் கொடுக்க வேண்டும்.

— மு. மோகனசுந்தரி

உதவி செய்வதே இலட்சியம்

திரிபுவனன்



யானை ஒன்று காட்டில களைப்புடன் தள்ளாடி நடந்து வந்தது. காலில் முள் ஒன்று குத்தியிருந்ததால் அதனால் பாதத்தைப் பூமியில் ஊன்ற முடியவில்லை. முள்ளை எடுக்கவும் முடியவில்லை. துதிக்கையால் எவ்வளவோ முயன்று பார்த்தது.

பசி, களைப்பு, இவ்வளவும் சேர, யானை நொண்டி நொண்டி நடந்து வந்து ஓரிடத்தில் கீழே படுத்துவிட்டது.

யானை படுத்ததை மற்ற மிருகங்கள் வேடிக்கை பார்க்கத் தொடங்கின. சுண்டெலி ஒன்று மிகத் தைரியமாக யானையின் மீது ஏறி விளையாடியது.

மான் ஒன்று யானையின் அருகே வந்து குனிந்து, 'நலந்தானா?' என்று கேட்டது.

யானைக்குக் கோபம் கோபமாக வந்தது. 'இந்த மானுக்கு என்ன திமிர்? வேதனை தாளாமல் நான் படுத்திருக்கிறேன். தெரிந்தும் என்னிடம் வந்து என் நலனை விசாரிக்கிறது. அதற்கு இப்படி தைரியம் வந்தது எதனால்?' என்று எண்ணியது.

"சுகமில்லைதான். பசி, களைப்பு, காலில் முள் வேறு குத்திவிட்டது. உன்னால் முள்ளை எடுக்க முடியுமா? உதவி செய்தால் நன்றியை மறக்க மாட்டேன்" என்றது யானை.

நேற்று வரை அந்தக் கொம்பன் யானையைக் கண்டால் மானுக்கு நடுக்கம்தான். அருகே நெருங்காமல் சற்றுத் தொலைவிலிருந்து வைத்த விழியை எடுக்காமல் பார்த்துக் கொண்டிருக்கும்.

மரக் கிளைகளை அப்படி அப்படியே முறித்து உடைத்துச் சாப்பிடும்போது மானுக்குப் பொறாமையாக இருக்கும்; தன்னால் அதுபோல் சாப்பிட முடியவில்லையே என்ற வேதனையும் ஏற்படும்.

"பெரிய பெரிய மரத்தை எல்லாம் வெட்டிச் சாய்க்கிறாய்; உன் பாதத்தில் தைத்த முள்ளை உன்னால் எடுக்க முடி.யவில்லையே?" என்று மெல்லச் சிரித்துக் கொண்டே மான் கேட்டது. யானைக்குக் கோபம் வந்தது. "பெரிய கொம்புகளை இரண்டு பக்கமும் வளர்த்து வைத்திருக்கிறாய். உன்னால் ஒரு சிறு முள்ளை எடுக்க முடியவில்லை! போ, போ" என்று யானை விரட்டியது.

சிறிது நேரம் சென்றது.


'மியாவ்' என்ற மெல்லிய குரல் கேட்டது. குரலைத்தான் கேட்க முடிந்ததே தவிர யானையால் திரும்பிப் பார்க்க முடியவில்லை.

பூனை ஒன்று வால் பக்கத்திலிருந்து மெல்லக் குரல் கொடுத்தது. யானையின் வாலும், வாலின் நுனியில் இருந்த அடர்த்தியான குஞ்சலமும் இப்படியும் அப்படியும் அசைந்தன.

பூனை மெல்ல யானைமீது ஏறி நடந்து வந்தது. யானையின் முதுகு எப்படி இருக்கும் என்று அறிய அதற்கு இவ்வளவு நாள்களாக இருந்து வந்த ஆசையை நிறைவேற்றிக் கொண்டது. யானையின் காதருகே வந்து மியாவ் என்று குரல் கொடுத்தது.

'ஒ! பூனையாரா! வாருங்கள் வாருங்கள்" என்று யானை வலி தாளாமல் முனு முனுத்தபடி வரவேற்றது.

"என்ன, கஜபதி! இப்படிப் படுத்து விட்டீர்கள்? ஹும்" என்று கேட்டது பூனை. அதன் குரலில் கேலி நிறைந்திருந்தது. யானையின் காலில் முள் தைத்திருக்கும் செய்தி பூனைக்குத் தெரியும். அறிந்தும் தெரியாததுபோல் வேண்டும் என்றே பூனை கேட்கிறது



என்று உணர்ந்த யானை, "பாசாங்குதானே வேண்டாம் என்கிறேன்? உன் குணம் தெரியாதா? காலில் முள் குத்திவிட்டது; உன்னால் எடுக்கவும் முடியும். எடுத்து உதவினால் நன்றியுடையவனாயிருப்பேன்" என்று யானை மிகவும் பணிவுடன் கேட்டுக் கொண்டது.

பூனை தன் சக்திக்கு மேலாகப் பெரிதாக நகைத்தது. "என்னை எப்பொழுதுமே நீ மதிப்பதில்லை. நான் மிகவும் சின்னவன் என்று கேலி செய்வாய். 'காலைத் தூக்கினால் நசுங்கிவிடுவாய்' என்று பயமுறுத்துவாய். அந்தக் காலுக்கு இப்போது என்ன நேர்ந்தது பார்த்தாயா? 'யானைக்கு ஒரு காலம் வந்தால் பூனைக்கும் ஒரு காலம் வரும்!' என்று சொல்லிவிட்டு, 'மியாவ் மியாவ்' என்று கத்திக்கொண்டே ஓடிவிட்டது. பூனை துள்ளி ஓடுவதை யானை பார்த்துப் பெருமூச்சு விட்டது.

'இப்படியே படுத்திருந்தால், சிங்கம் புலி போன்ற என் விரோதிகளுக்கு மிகவும் கொண்டாட்டம். என்னை ஒரேயடியாக அடித்துக் கொன்று விருந்து சாப்பிட்டு விடும்' என்று யானை வருத்தப்பட்டது. பசி தாங்கமுடியவில்லை. யானையின் சின்னஞ்சிறிய கண்களிலிருந்து கண்ணீர் வழிந்தது.

அப்போது 'படபட' வென்ற ஓசை. கிளியொன்று தன் சிறகுகளை அடித்தவாறு பறந்து வந்து யானையின் அருகே உட்கார்ந்தது.

"என்ன கஜேந்திரரே, நலமாயிருக்கிறீர்களா? சுறுசுறுப்பாய் அலையும் நீங்கள் இப்படிச் சோர்ந்து படுத்திருக்கிறீர்களே?" என்று கேட்டது.

யானை ஏறிட்டுப் பார்த்தது. சுகர் என்று அழைக்கப்படும் கிளி யானையின் பழைய நண்பன். 'உம், இந்தக் கிளி நமக்கு என்ன உதவி செய்ய முடியும்? இருந்தாலும் கேட்டுப் பார்ப்போம்' என்று எண்ணி, "சுகா, என் அருமை நண்பனே! எனக்கு நேர்ந்ததைப் பார்த்தாயா? காலில் முள் குத்திவிட்டது, என்னால் நடக்க முடியவில்லை. பசி. களைப்பு.." என்று வேதனையுடன் சொன்னது.

கிளி யானையை ஒருமுறை சுற்றி வந்தது. உடனே எங்கோ பறந்து சென்றது. கொய்யாப் பழம், மாம்பழம், என்று வாயில் கவ்வி வந்து யானையிடம் போட்டது. போட்டுக் கொண்டே இருந்தது.

யானை சாப்பிட்டது. பசி சற்று தணிந்தது.

"கஜேந்திரா! எந்தக் காலில் முள் குத்தியது?" என்று கனிவுடன் கேட்டது கிளி. யானை தன் காலைக் காட்டியது. கிளி கூர்ந்து பார்த்தது.

"பாவம் நீ என்ன செய்வாய்? என் காலில் குத்திய முள்ளை உன்னால் எடுக்க முடியுமா?" என்று யானை கேட்டது.

யானையின் பாதத்தைக் கிளி குனிந்து பார்த்தது. கூர்மையாகப் பார்த்தது. முள் குத்திய இடம் தெரிந்தது. தன் அலகால் சட்டென்று அழுத்தமாகக் குத்தி, முள்ளை எடுத்தது.

அப்பாடா! யானைக்கு வலி தீர்ந்தது. தன் துதிக்கையால் கிளியைத் தன் அருகே அழைத்து, "என் இனிய நண்பரே! சுகா! உனக்கு எப்படி நன்றி தெரிவிப்பது என்றே தெரியவில்லை. நீ செய்த உதவிக்கு நான் எந்த விதத்தில் மீண்டும் உதவி செய்யப் போகிறேன்?" என்று தழுதழுத்த குரலில் கூறியது.


சுகர் என்ற பெயருடைய கிளி மெல்லச் சிரித்தது.


"கஜேந்திரா! ஒருவர் துன்பப்படும்போது பார்த்துக் கொண்டிருக்கக் கூடாது. சற்று முன்பு பூனையும், மானும் பேசியதைக் கேட்டேன். பகைவருக்கும் அருள் புரிய வேண்டும். அதற்கும் மேலாக நன்றியை மறப்பதும் கூடாது" என்று கூற, யானை குறுக்கிட்டு, "அதைத்தான் நானும் சொல்கிறேன். உதவி செய்தவருக்கு மீண்டும் நன்றி தெரிவிக்க வேண்டும். உனக்கு நான் என்ன செய்ய வேண்டும்?" என்று கேட்டது.

கிளி சொன்னது : "ஒன்றும் செய்ய வேண்டாம். சில மாதங்களுக்கு முன்பு என்னை ஓர் ஆபத்திலிருந்து நீ காப்பாற்றினாய். என்னைப் பிடித்துக் கூண்டில் அடைத்தான் ஒரு வேடன். கூண்டைப் பறித்து நீ அவனிடமிருந்து என்னை விடுதலை செய்தாய். அந்த உதவியை என்னால் மறக்க முடியவில்லை" என்றது.

யானைக்கு ஏற்பட்ட மகிழ்ச்சிக்கு எல்லையில்லை.

'இனியும் நான் எப்போதும் மற்றவருக்கு என்னாலான உதவி செய்வேன்' என்றது யானை. 'நானும் அப்படித்தான்' என்று சிரித்தவாறு கூறிப் பறந்து சென்றது, கிளி. ❖







கத்தரித்து ஒட்டியது

நாடோடி



"இன்றைக்கு என்ன சமையல்?" என்று தினம் காலை தன் கணவனைக் கேட்காத மனைவி கிடையாது. அதற்குப் பதில் சொல்லத் தெரியாமல் தவிக்காத கணவனும் கிடையாது. ஆனால் பாரிஸ் நகரில் கணவனைக் கேட்க வேண்டியதில்லை. இதற்கென்றே உள்ள ஒரு தனி நம்பரைப் போன் பண்ணினால் அவர்கள் என்ன சமையல் செய்யலாம் என்று யோசனை கூறுவதுடன், சில பதார்த்தங்களை எப்படித் தயாரிப்பது என்றும் சொல்லிக் கொடுப்பார்கள்.

சீன அறிஞர் கன்ஃப்யூஷஸ் ஒரு காடுவழியாகச் சென்று கொண்டிருந்தார். அப்பொழுது ஒரு கல்லறையின் பக்கத்தில் ஒரு பெண் நின்று அழுது கொண்டிருப்பதைப் பார்த்தார்.

"ஏன் அழுகிறாய்?" என்று கன்ஃப்யூஷஸ் கேட்டார்.

அதற்கு அந்தப் பெண் சொன்னாள்:

"நாங்கள் வேடர்கள். என் தலைவனை ஒரு புலி அடித்துக் கொன்றுவிட்டது. பிறகு என் கணவரையும் ஒரு புலி அடித்துக் கொன்றுவிட்டது. இப்பொழுது என் ஒரே மகனையும் புலி அடித்துக் கொன்றுவிட்டது" என்று.

"அப்படியானால் வேறு இடத்துக்குப் போக வேண்டியதுதானே?"

"எப்படிப் போவது? இந்த ஒரு இடத்தில்தான் வரி வசூலிக்கும் அதிகாரிகள் இல்லை" என்றாள் அந்தப் பெண்.

"நான் என் வாழ்க்கையில் உண்மையே சொன்னதில்லை".

"அதுதான் ஓர் உண்மையை இப்பொழுது சொல்லி விட்டீரே!"

தெருவில் இரண்டு மோட்டார் வண்டிகள் போய்க் கொண்டிருந்தன. ஒன்று லட்சம் ரூபாய் பெறும் விலை உயர்ந்த கார். இன்னொன்று ஐம்பதினாயிரம் பெறும் சாதாரண கார்.

லட்சம் ரூபாய்கார்க்காரர், ஐம்பதினாயிரம் ரூபாய் கார்க்காரரைப் பழிப்பதற்காக, "என்ன இது? உங்கள் வண்டியில் ஏதோ லொட, லொட என்று சப்தம் கேட்டுக் கொண்டிருக்கிறது!" என்று கேட்டார்.

அதற்கு ஐம்பதினாயிரம் ரூபாய் கார்க்காரர், "அதுவா! என் ஜேபியில் ஐம்பதினாயிரம் ரூபாய் குலுங்கிக் கொண்டிருப்பதுதான் அப்படிச் சப்தம் போடுகிறது" என்றார்.

மிஸ் சாரா பால்பிரி என்னும் அம்மையார் தம்முடைய 88ஆவது வயதில் யூத மொழியைக் கற்றுக் கொள்ள ஆரம்பித்தார். "இந்த வயதில் இப்படிக் கஷ்டப்பட்டு இந்த மொழியைக் கற்றுக் கொள்வானேன் என்று நண்பர்கள் கேட்டார்கள். அதற்கு அந்த அம்மாள் சொன்னார்:

"நான் இறந்தபிறகு, கர்த்தரைச் சந்திக்கும்போது இந்த மொழியில் தானே அவரோடு பேச முடியும்" என்று.

ஒரு சட்ட நுணுக்கத்தைப் பற்றி, ஒரு வக்கீலுக்கும், நீதிபதிக்குமிடையில் வாக்கு வாதம் நிகழ்ந்தது.

"தாங்கள் சொல்வதுதான் சரியானால், நான் என் சட்ட புத்தகங்களைக் கொளுத்தி எரித்துவிடுகிறேன்" என்றார் வக்கீல்.

அதற்கு நீதிபதி, "கொளுத்த வேண்டாம் மீண்டும் ஒரு தடவை படியுங்கள்" என்றார்.

லண்டனில் உள்ள புகழ் பெற்ற "பிக்பென்" என்னும் கடிகாரத்தின் மணி அடிக்கும் சப்தம் கீழே உள்ள லண்டன் வாசிகளின் காதில் எட்டுவதற்கு முன்னர், அது 13,000 மைல்களுக்கு அப்பால் உள்ள ஆஸ்திரேலியர்களின் காதுக்கு எட்டிவிடுகிறது. எப்படி?

"பிக்பென்"னின் மணி அடிக்கும் சப்தம் ஆஸ்திரேலியாவில் உள்ளவர்களுக்கு, பி.பி.ஸி. ரேடியோ மூலம், ஒளிவேகத்தில், அதாவது வினாடிக்கு 186,000 மைல் வேகத்தில் சென்று அடைகிறது.

ஒரு தேக்கரண்டி தேனைச் சேகரிக்க, ஒரு தேனீ சுமார் 2000 மலர்களை நாடவேண்டியிருக்கிறது.

"அறிவுத்தாகம் தமிழர்க்கு எழாத வரையில் எதுவும் செய்ய முடியாது!"



— டாக்டர் சி. பாலசுப்பிரமணியன்

பேராசிரியர் டாக்டர் மு.வ. அவர்களின் தலைமாணாக்கர்களில் ஒருவரான டாக்டர் சி.பாலசுப்பிரமணியன் அவர்கள், தமிழ்ப் பல்கலைக் கழகத்தின் துணைவேந்தராகப் பணியாற்றுகின்றார். ஆங்கில நூல்கள் நான்கு உட்பட இருபத்தைந்து நூல்களைப் படைத்துள்ளார். தமிழிலும், ஆங்கிலத்திலும் நூற்றைம்பதிற்கும் மேற்பட்ட கட்டுரைகளை எழுதியுள்ளார். தமிழக அரசின் பரிசையும், இராசா சர். அண்ணாமலைச் செட்டியார் விருதையும் பெற்றவர்.

இவர் நூலகத்தில் ஏறத்தாழ 5000 நூல்கள் உள்ளன. இலக்கியம், இலக்கணம், வரலாறு, காப்பியங்கள், பக்தி இலக்கியங்கள், சிற்றிலக்கியங்கள், இக்கால இலக்கியங்கள் முதலான பலவகை நூல்கள் இவர் வீட்டு நூலகத்தில் இடம் பெற்றிருக்கின்றன.

சங்க இலக்கியத்தின் இக்காலப் பதிப்புகள் இவரிடம் உள்ளன. தமிழ்மொழியில் உள்ள அரிய நூல்களில் பெரும் பகுதி இவரிடம் உள்ளது குறிப்பிடத்தக்கது. இவற்றில் பல்வேறு அகராதிகளும், கலைக்களஞ்சியங்களும் அடங்கும்.

சிறந்த நூல்கள் எங்கிருந்தாலும், உடனடியாக அவை விற்கப்படும் கடைக்குச் சென்று அந்நூல்களை வாங்கிவிட்டுத்தான் திரும்புவார்.

நூல்களை இரவல் கொடுப்பதில் இவருக்கு விருப்பமில்லை. 'இருப்பினும் தவிர்க்க இயலாச் சூழ்நிலையில் நண்பர்களுக்கு வேண்டிய நூலைக் கொடுப்பேன். இதுபோன்ற நூல்கள் சில சமயங்களில் மறந்து தங்கி விடுவதும் உண்டு' என்கிறார் இவர்.

நம்மிடையே படிக்கும் ஆர்வம் வளர்ந்துள்ளதா?

"தமிழ்நாட்டைப் பொறுத்த வரையில், வாகீசகலாநிதி, கி.வா.ஜ. அவர்கள் சொன்னது போல அகலப் படிக்கும் (செய்தித்தாள்கள்) பழக்கம் உண்டு. ஆழப் படிக்கும் பழக்கம் இல்லை. அண்டை மாநிலமான கேரளாவில் நூல்கள் பெருமளவு விற்பனையாகின்றன. ஆனால் தமிழ் நாட்டில் அச்சேற்றப்பட்ட ஒரு நூலின் ஆயிரம் படிகள் விற்று முடிய ஐந்து ஆண்டுகளாவது ஆகின்றன. அதுவும் சிறந்த இலக்கிய, அறிவியல் படைப்புகளாக இருந்தால்தான் அவ்வாறு விற்பனை ஆகின்றன".

"படிக்கும் ஆர்வம் வளர்வதற்கு என்ன செய்ய வேண்டும்?"

இந்த வினாவிற்குத் துணைவேந்தர் அவர்கள் அளித்த விடை இதுதான்:

"தமிழ் நாட்டில் திரைப்படம் போவதற்கு ஓர் ஐந்து ரூபாய்க்குக் குறையாமல் செலவாகிறது. இன்னும் ஓர் ஐந்து ரூபாய் போட்டால் நல்ல நூல் ஒன்றினை வாங்கலாம். சினிமாவுக்குப் போவதுபோல், ஒரு மாதத்திற்கு ஒருமுறை குறைந்த அளவு ஒரு சினிமாவுக்கு ஒருவர் போகிறார் என்றால், மாதம் ஒன்றுக்குப் பத்து ரூபாய் விலையுள்ள நூல்களைக் கண்டிப்பாக வாங்கி, வீட்டு நூலகம் உருவாக்க வேண்டும் என்ற மனப்பான்மை வர வேண்டும். அறிவுத்தாகம் தமிழர்க்கு எழாத வரையில் எதுவும் செய்ய முடியாது".

"எந்த மாதிரியான நூல்கள் தங்களுக்குப் பிடிக்கும்?" என்று கேட்டபோது, "பழந்தமிழ் இலக்கியங்கள், வரலாற்று நூல்கள், இக்கால இலக்கியத்தில் எழும் புதிய படைப்புகள், பக்தி இலக்கியங்கள் போன்றவை எனக்கு மிகவும் பிடிக்கும். இதேபோல, ஆங்கிலத்தில் அறிஞர் பெருந்தகைகள் எழுதியுள்ள பல நூல்களும் பிடிக்கும்" என்கிறார்.

புத்தகக் கண்காட்சி பற்றிக் குறிப்பிடுகையில் –

"ஆண்டுதோறும் புத்தகக் கண்காட்சி நடைபெறுவது மொழிக்கும் மக்களுக்கும் நலம் பயப்பதாகும். நமக்கு வேண்டிய நல்ல நூல்களை ஒரே இடத்தில் தேர்ந்தெடுக்கும் வாய்ப்பு இதன் மூலமாக நமக்குக் கிடைக்கிறது. ஹிக்கின்பாதம்ஸ் போன்ற கடைகளில், தமிழ், ஆங்கிலம் மற்றும் பிற மொழிகளில் எழுதப்படும் சிறந்த படைப்புகளைக் காட்சிக்கு வைத்து விற்க வேண்டும். அறிஞர் அண்ணா அவர்கள் தம் வாழ்நாளில்

ஒளியை நோக்கி...

உலகப்போரில் உருகிப்போன சப்பான்
உலக அரங்கில் உயர்ந்து நின்ற தெப்படி?
உணவுப்பயிர்கூட உயர்ந்து வளராத மண்ணில்
மனிதப்பயிர் விண்ணைத் தொட்ட தெப்படி?

முல்லைநிகர்ப் பெண்களெல்லாம் வில்லாய் வளைந்து தங்கம்
வென்ற தெப்படி?
குள்ளமான இவர்கள் இமயத்தைக்
குனிந்து தொட்ட தெப்படி?
நிலம் குறைந்த இவர்கள்
உடல்நலத்துடன் உலகில் வாழ்வதெப்படி?

ஒகோ!
உருகிப்போன ஜப்பானை உழைப்புக்கலைஞர்கள்
வாழ்க்கையைக் கொடுத்தே வடிவமைத்திருக்கிறார்கள்
அவர்களுக்கு உணவு ஒரு பிரச்சனை - நமக்கோ
உணவே பிரச்சனை.

அவர்கள் பெண்களை நேசித்துக் கொண்டிருக்கிறார்கள்
நாமோ பெண்களை வாசித்துக் கொண்டிருக்கிறோம்.
எண்ணங்களுக்குக் கைகள் முளைத்ததால்
இமயம் இவர்களைப் பார்த்துக் குனிந்தது.

நாமோ கடலையும் தொழுது கொண்டிருக்கிறோம்
அவர்களோ கடலையும் உழுதுகொண்டிருக்கிறார்கள்
அவர்கள் அறிவுடையார், அதனாலே எல்லாம் உடையார்,
நாமோ அறிவிலார், அதனாலே
என்னுடைய ரேனும் இலர்.

அவர்கள் இருட்டையும் பகலாக்கி
ஒளிநோக்கி நடக்கிறார்கள்: நாமோ
பகலையும் இருட்டாக்கிப்
படம் பார்க்கப் போகிறோம்.

விதுரா எம்.ஏ.

19, செப்டம்பர் '92
அன்று நடந்த கவிதை இரவில்
முதல் பரிசுப் பெற்ற கவிதை

அண்ணாசாலையில் உள்ள, ஹிக்கின்பாதம்ஸ் நூலகத்திற்குச் சென்று நூல்கள் வாங்கிப் படித்து வந்ததாகப் பலரும் கூறக் கேட்டிருக்கிறேன்" என்கிறார் துணை வேந்தர் அவர்கள்.

"இக்காலச் சூழலில் எம் மாதிரியான நூல்கள் வெளிவர வேண்டும் என்று விரும்புகிறீர்கள்?"

"தமிழர் வாழ்வினை உயர்த்தக் கூடிய வகையில், ஆக்கம் தரும் நல்ல நூல்கள் வெளிவரவேண்டும். இளைஞர்களுக்குத் தன்னம்பிக்கை தந்து, வாழ்வில் முன்னேற்றம் காண உறுதுணை புரியும் வகையில் இவை அமைய வேண்டும்".

நேரம் கிடைக்கும்போதெல்லாம் நூலகங்களுக்குச் சென்று வருவது இவரது பழக்கம் என்றாலும், வீட்டில் உள்ள நேரத்தில் பெரும்பகுதி இவருடைய வீட்டு நூலகத்திலேயே கழிந்துவிடுவதுண்டு.

"தமிழ்நாட்டு இளைஞர்கள் அறிவுத்திறன் வாய்ந்தவர்கள். ஆனால் அறிவு ஆக்க வழியில் இன்றி ஆரவார வழியில் திசை திரும்பப் பார்க்கின்றது. அனைத்திந்தியப் பணிகளில் தமிழகம் பின்தங்கிவிட்டது. உண்மையான உழைப்பும், முன்னேற்றம் பெறவேண்டும் என்ற ஊக்கமும் எழுமானால், எந்தத் துறையிலும் வெற்றி பெறுவது எளிது" என்று இளைஞர்களுக்கு அறிவுரை கூறுகிறார் டாக்டர். சி.பாலசுப்பிரமணியன் அவர்கள்.

—பேட்டி : பி.வி.கிரி.

பி.ரு.வேங்கடாசாரி

இந்திய நூலக இயக்கத் தந்தை

எஸ்.ஆர்.ரங்கநாதன்

1962 ஆம் ஆண்டு அமெரிக்க நூலகச் சங்கம் ஒரு இந்திய நூலக விஞ்ஞானிக்கு அவரது 71 ஆம் பிறந்த தினத்தை கொண்டாடி அவருக்கு பாராட்டு கடிதம் எழுதியது. "உமது கருத்துகள் உலகிற்குப் பொது வானவை. எதிர்காலத்தின் சவாலுக்கு நீங்கள் புதிய சவால் விட்டிருக்கிறீர்கள். எங்களில் பெரும்பாலோர் உங்கள் சீடர்கள் அல்லர், ஆனால் அனைவரும் உங்கள் மாணவர்கள். இன்றைய தலைமுறை நூலகர்களைப் பெரிதும் சிந்திக்க வைத்திருக்கிறீர்கள். உங்களுக்கு நாங்கள் பெரிதும் கடன்பட்டிருக்கிறோம் என்பதில் பெருமிதம் அடைகிறோம்".

உலக மெங்கும் உள்ள நூலகர்கள் மதித்த அந்த இந்திய நூலக விஞ்ஞானி திரு. எஸ்.ஆர். ரங்கநாதன் ஆவார். பெரும் ஆங்கில நூலகரும், அவரது குருவுமான பெர்விக் சேயர்ஸ் என்பவர் நூலகத்துறையைப் பொறுத்த மட்டில் 'ரங்கநாதன் யுகம் இது' என்று வர்ணித்தார்.

சீர்காழி ராமாமிர்த ரங்கநாதன் ஆகஸ்ட் 12 ஆம் தேதி தஞ்சை மாவட்டம் சீர்காழியில் 1892 ஆம் ஆண்டு ஒரு எளிய குடும்பத்தில் பிறந்தார். அவ்வூரின் இந்து உயர் நிலைப் பள்ளியில் படித்த பின்னர் சென்னை கிறிஸ்தவ கல்லூரியில் 1913 ஆம் ஆண்டு கணிதத்திலும் பௌதிகத்திலும் பி.ஏ., பட்டம் பெற்றார். அதற்குமேல் படிப்பதற்கு அவரது ஏழ்மை தடை செய்தது. அச்சமயம் அக்கல்லூரியின் பேராசிரியராக இருந்த எட்வர்டு ரோஸ் என்ற ஆங்கிலேயர் அவரது மதிநுட்பத்தையும் சுறுசுறுப்பையும் கண்டு அவரது மேல்படிப்பிற்கு உதவி செய்தார். இதன் காரணமாக 1916 ஆம் ஆண்டில் கணிதத்தில் எம்.ஏ., பட்டம் பெற முடிந்தது. பிற்காலத்தில் அவரது நூல்களுள் ஒன்றினைத் தம் ஆசிரியரின் நினைவுக்கு அர்ப்பணித்தார். 1917 ஆம் ஆண்டு சைதாப்பேட்டையில் உள்ள ஆசிரியர் கல்லூரியில் எல்.டி. பட்டம் பெற்றார். அந்த ஆண்டே மங்களூரின் அரசாங்கக் கல்லூரியில் கணித ஆசிரியராகப் பதவியேற்று, பின்னர் கோவை, சென்னை மாநிலக் கல்லூரிகளில் பணிபுரிந்தார். மங்களூரில் இருந்த போது மாணவர்களுக்கென ஒரு வகுப்பு அறை நூலகத்தை நிறுவினார். அப்பொழுதே நூலகத்தைப் பற்றிய ஆர்வம் அவருக்கிருந்தது. வகுப்பில் போதிக்கப்படும் நூல்களைத் தவிர, மாணவர்கள் மேலும் பல்வேறு நூல்களைப் படிப்பதில் நாட்டம் கொள்ள வேண்டும் என்ற கொள்கை கொண்டிருந்தார்.

1924 ஆம் ஆண்டு சென்னை பல்கலைக்கழக நூலகர் பதவிக்கு தேர்ந்தெடுக்கப்பட்டார். அதை மட்டும் அவர் ஏற்றுக்கொள்ளாதிருந்தால் இந்திய நூலக இயக்கம் ஒரு பெரும் சாதனையாளரை இழந்திருக்கும். நூலகத்துறையில் முறையாகத் தேர்ச்சிபெற ஆங்கில நாட்டிற்கு அனுப்பப்பட்டார். மிகச் சிறப்பான முறையில் தேர்ச்சி பெற்று, சென்னைக்கு வந்த பின்னர் பல்கலைக்கழக நூலக சீர்திருத்தப் பணியில் ஈடுபட்டார். அவரது கைவண்ணத்தால் நூலகம் உருமாறியது. அவரே கண்டுபிடித்த 'கோலன் பகுப்பு முறை' யின்படி நூல்கள் வைக்கப் படலாயின. நூலகத்தில் வாசகர்களே நேரடியாக நூல்களைக் கையாள வசதி செய்யப்பட்டது. பல்துறை நூல்களின் இடங்களை நன்கு அறிவிக்குமுகமாக, வழிகாட்டும் அட்டைகள் அங்கங்கு பொருத்தப்பட்டன. வாசகர்களுக்குத் தகவல் தரும் சேவை உணர்ச்சிமிக்க உதவியாளர்கள் நியமிக்கப்பட்டனர். பல்தர வாசகர்கள் கோரிய தகவல்கள் எவ்விதம் அவர்களுக்குத் தரப் பட்டது என்ற அவரது நூல் மிக ருசிகரமானதாகவும், ஏனைய நூலகர்களுக்கு வழிகாட்டியாகவும் அமைந்து, இன்றும் ஒரு உதாரண நூலாகத் திகழ்கிறது.



சென்னை நூலகத்தின் பெருமை வெகுவாக பரவிற்று. அவரது பகுப்பு முறையினை, ஆறு ஆண்டு காலப் பரிசோதனைக்குப் பிறகு, 1933 ஆம் ஆண்டு புத்தக உருவில் வெளியிட்டார். இது நூலக உலகில் பெரும் பரபரப்பை உண்டாக்கியது. 1931 ஆம் ஆண்டு அவர் வெளியிட்ட 'நூலகத் துறையின் ஐந்து விதிகள்' என்ற நூல் அவரது நூலகத் தத்துவத்தின் சூத்திரமாக அமைந்தது. மிக சாதாரணமாக தோன்றும், பெரும் உண்மை பொதிந்ததாக அமைந்த இச்சூத்திரங்கள் பிற்கால பல கண்டுபிடிப்புகளுக்கு உதவி செய்தன. (ஐந்து விதிகள்: 1. நூல்கள் பயன்படுவதற்காக அமைந்தவை. 2. ஒவ்வொரு வாசகருக்கு உகந்த நூல். 3. ஒவ்வொரு நூலுக்கு ஒவ்வொரு வாசகர். 4. வாசகர் நேரத்தை மிச்சப்படுத்தவும். 5. நூலகம் வளரும் உயிருள்ள வஸ்துவாகும்). இவர் நிறுவிய நூலகத்துறை பல நூலகர்களை உருவாக்கியது.

1947 ஆம் ஆண்டு வரை சென்னை நூலகராக இருந்தபின் டில்லி பல்கலைக்கழகத்தின் நூலகராக அழைக்கப்பட்டவர். அந்தப் பல்கலைக்கழகத் துணை வேந்தர் (ஸர் மாரிஸ் கயர், ஆங்கில

நீதிபதி) வேண்டுகோளின் பேரில் அந்தப் பதவியை ஒப்புக்கொண்டார். அந்நூலகத்தின் நூலகப் படிப்புத்துறையினை விஸ்தரித்து முதுகலைப் படிப்புக்கும், ஆராய்ச்சிப் பட்டம் பெறுவதற்கும் வழி வகுத்தார். நூலகத்துறையில் ஆராய்ச்சி பட்டமா என்று ஏளனம் செய்தவர்களுக்கு அவரளித்த பதில் ருசிகரமானது. "கரப்பான் பூச்சியின் காலினைப் பற்றி ஆராய்ச்சி செய்வதற்குப் பட்டம் தரப்படுமானால், எல்லாத் துறைகளையும் பற்றிய நூலகவியலுக்கு அத்தகுதி நிச்சயமாக உண்டு" என்பதே அப்பதில். ரங்கநாதன் புகழ் உலகெங்கும் பரவிய இந்த காலகட்டத்தில் அவரது பல்கலைக் கழகம் அவருக்குக் கௌரவப் பட்டம் அளித்தது. அதன் பின்னர் பல பல்கலைக்கழகங்களின் பார்வையாளராகவும், கௌரவப் பட்டம் பெற்றவராகவும் ஆனது அவரது பெருமையை மேலும் உயர்த்தியது.

1957 ஆம் ஆண்டில் சென்னை பல்கலைக்கழக நூலகத்துறைக்கு ஒரு லட்ச ரூபாய்கள் அன்பளிப்பாக அளித்தார். (இன்றைய மதிப்பு 15 லட்ச ரூபாய்கள்) இவ்வளவு பெரிய தொகையை ஒரு சாதாரண நூலகர் கொடுத்தது ஒரு பெரும் தியாகம் எனலாம். பணத்தின் அருமை தெரிந்த ஏழ்மைக் குடும்பத்தில் பிறந்தவர். அதனால் வாழ்க்கை முறை எளியதாக அமைந்தது. தினசரி ஒரு வேளை உணவு மட்டுமே உண்டு. காபி / டீ போன்ற பானங்களைத் தவிர்த்த இவரது வாழ்க்கை யோகியைப் போன்றது. அவரது சிக்கன வாழ்வை அறியாத பலர் அவரை ஏளனம் செய்தனர்.

ரங்கநாதனின் பொது நூலகத் துறை பணி மகத்தானது. அவரது தொண்டின் பலனைத் தற்கால மக்கள் அனுபவிக்கின்றனர். 1947 ஆம் ஆண்டு அவினாசிலிங்கம் செட்டியார், கல்வி மந்திரியாக பணிபுரிந்த சமயம், நூலகச் சட்டம் இவர் உதவியால் நிறைவேற்றப்பட்டது. அவினாசிலிங்கமும், ரங்கநாதனும் பொது நூலக இயக்கத்திற்கு ஆற்றிய பணியை மறக்க இயலாது. முறைப்படி நூலகங்கள் அமைக்கப்பட்டு, சீரான நிதி ஆண்டு தோறும் பெறவும், அவை செம்மையாக நடைபெறவும் உதவி செய்தன. தற்பொழுது நூலக இயக்கத்தின் துரிதகதி குறைந்து காணப்படுவதற்குக் காரணம் ரங்கநாதனைப் போன்ற நூலகர் இல்லாததே யாகும்.

ரங்கநாதன் கவனம் 1950 ஆம் ஆண்டுக்குப் பிறகு 'டாகுமென்டேஷன்' என்ற நூலகத் துறையின் ஒரு பகுதிக்குத் திரும்பியது. நூலகத்தில் சேர்க்கப்படும் சஞ்சிகைகள், ஆராய்ச்சிக் கட்டுரைகளை விரைவில் வாசகர்களுக்குத் தரும் ஏற்பாடு இது என்று சுருக்கமாகச் சொல்லலாம். ஆராய்ச்சியின் வேகம் மிக அதிகமாக இருக்கும் இந்நாளில் இப்பணியினைப் பற்றி மேலும் கூறவேண்டுவதில்லை. டில்லியில் நிறுவப்பட்டுள்ள 'INSDOC' என்ற நிறுவனம், பெங்களூரில் இவரால் நிறுவப்பட்டுள்ள 'டாகுமென்டேஷன் ரிசர்ச் அண்டு டிரெய்னிங் சென்டர்' என்ற நிறுவனமும் இவரது அயராத முயற்சியின் விளைவாகும். இவரால் இத்துறையில் பயிற்சி பெற்ற மாணவர்கள் உலகெங்கும் நல்ல பதவிகளில் இருந்திருக்கின்றனர்.

எதிர்காலத்தில் நூலகத்துறையில் 'கம்ப்யூட்டர்' பெரிதும் உதவி செய்யக்கூடும் என்பதை முன்னரே அறிந்த இவர் அதன் மூலம் எவ்விதம் பல மகத்தான சாதனைகளை விளைவிக்கலாம் என்று சூசகமாக அறிவித்தார்.

ரங்கநாதன் ஒரு சிறந்த ஆசிரியர், பேச்சாளர், எழுத்தாளரும்கூட. சிறுவயதில் திக்குவாயராய் அவஸ்தைபட்ட இவர் பின்னர் சிறந்த பேச்சாளராக ஆனது இவரது பெரும் உழைப்புக்கு உதாரணமாகும். இவர் எழுதிய அறுபதிற்கும் மேற்பட்ட நூல்களும், ஆயிரத்திற்கும் மேற்பட்ட கட்டுரைகளும் இவரது எழுத்துத் திறமையின் சாதனைகள். ஒவ்வொரு நூலும் படிப்பதற்குச் சலிப்பூட்டாதவாறு எழுதப்பட்டவை. நூலகத் துறையில் இவர் தொடாத அம்சமில்லை என்று கூறலாம். ஆசிரியராகவும் விளங்கிய இவர் ஒரு முன்மாதிரி ஆசிரியராக இருந்தார். வகுப்பறையில் எல்லா மாணவர்களும் பங்கெடுத்து அதன் மூலம் நூலக அனுபவம் பெற இவர் செய்த சேவையை இன்றும் அவரது மாணவர்கள் பெருமையாகச் சொல்கின்றனர்.

நூலக மேம்பாட்டில் வாழ்க்கையை அர்ப்பணித்த இப்பெருமகன் 1972 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 27 ஆம் தேதி பெங்களூரில் காலமானார். உலகமெங்கும் நூலக இயக்க சங்கங்கள் தங்கள் அனுதாபத்தைத் தெரிவித்தன. இவரது நூற்றாண்டு விழா இவ்வாண்டு நடைபெறுகிறது. மத்திய அரசாங்கம் அவரது தபால் தலையை வெளியிட்டுள்ளது.

இந்தியாவெங்கும் முறைப்படி ஆக்கப்பட்ட சிறந்த நூலகங்கள், கலாசாரக் கருவூலங்களாகத் திகழ வேண்டுமென்ற அவரது ஆசை இன்னும் நிறைவேறவில்லை. ஆனால் நூலகங்கள் உள்ள மட்டில் ரங்கநாதனின் பெயர் நிலைத்து நிற்கும் என்பதில் ஐயமில்லை.

ஒரே ஒரு குறை!

ஒரு தடவை பேரறிஞர் கி.வா. ஜகந்நாதன் அவர்களுக்கு அன்பர் ஒருவர் தனது இல்லத்தில் அறுசுவை விருந்தளித்தார்.

கி.வா.ஜ. விருந்தினை ருசித்து ரசித்து உண்டார். கி.வா.ஜ. சாப்பிட்டு முடியும் தருவாயில் விருந்தளித்த அன்பர் "விருந்து திருப்தியாக இருந்ததா? ஏதாவது குறையிருந்ததா?" என்று வணக்கத்துடன் கேட்டுக்கொண்டார்.

"ஒரே ஒரு குறை" என்று கி.வா.ஜ. கூறினார்.

விருந்து வைத்தவர் அதிர்ச்சியடைந்துவிட்டார்.

"என்ன குறைங்க? இப்பொழுது சொன்னால்கூட குறையை நிவர்த்தி செய்துவிடுகிறேன்" என்றார்.

'இந்த அருமையான விருந்தை இன்னும் வேண்டிய அளவு சாப்பிட கடவுள் இன்னொரு வயிறு கொடுக்கவில்லையே என்பதுதான் குறை" என்று கி.வா.ஜ. புன்னகையுடன் கூறினார். விருந்து வைத்தவர் முகத்தில் ஆனந்தப் பரவசம் நிலவியது.

ஆர். ஜெயலெட்சுமி.

		கேது	
	கிரகநிலை		செவ்
சனி			
சுக்	சூ ராகு புத(வ)		குரு

உங்கள் ராசி பலன்

16.11.1992 முதல்14.12.1992 வரை

பாலஜோசியர்
வித்வான் வே. லட்சுமணன்

கிரக மாறுதல்

27.11.1992 முதல் துலா-புதன்.

28.11.1992 முதல் செவ்வாய்-வக்கிர ஆரம்பம்

1.12.1992 முதல் புதன்-வக்கிர நிவர்த்தி

3.12.1992 முதல் மகர-சுக்கிரன்

5.12.1992 முதல்விருச்சிக-புதன்.

16.11.1992 அன்று கிரக பாதசாரம்

சூரியன் - விசாகம் 4, சந்திரன் - பூசம் 3, செவ்வாய்-புனர்பூசம் 4, புதன் - அனுஷம் 3, குரு - ஹஸ்தம் 2, சுக்கிரன் - மூலம் 3, சனி - திருவோணம் 3, ராகு - கேட்டை 4, கேது - மிருகசீரிஷம் 2.

மேஷம் : (அசுவினி, பரணி, கிருத்திகை 1 ஆம் பாதம் முடிய)

கிரகநிலை திருப்திகரமாக இல்லாததால் நீங்கள் எதிலும் நிதானமாக ஈடுபடுவது அவசியமாகும். புதுமுயற்சிகளை ஒத்திப்போடுவது அவசியம். பிறர் மனம் புண்படும்படியான வார்த்தைகளை உதிர்க்கலாகாது. உடல் ஆரோக்கியம் சீர்கெடும். அலைச்சலும், உழைப்பும் அதிகரிக்கும். நிலம், மனை, வீடு, வாகனங்களால் அதிகம் அனுகூல மிராது. பொருளாதாரநிலையில் சரிவு உண்டாகும். மக்கள்நலம், சகோதரநலம், வாழ்க்கைத்துணை நலம் ஆகியவற்றில் கவனம் தேவைப்படும். குடும்பத்தில் சிறுசிறு குழப்பங்கள் அவ்வப்போது உண்டாகும். ஸ்பெகுலேஷன், கொடுக்கல் - வாங்கல் இனங்களில் ஈடுபடவேண்டாம். நண்பர்கள், உற்றார், உறவினர்களால் அதிகம் அனுகூலத்தை எதிர்பார்க்க இயலாது.

அரசியல்வாதிகள் புதிய கொள்கைகளைத் தற்சமயம் வெளியிட வேண்டாம். தீ, வாகனம், ஆயுதங்கள் ஆகியவற்றின் பக்கம் நெருங்கும்போது பாதுகாப்புத் தேவை. பெற்றோரால் ஓரிரு தொல்லைகள் உண்டாகும். பயணம் தவிர்ப்பது நல்லது. வியாபாரிகள் அகலக்கால் வைக்க வேண்டாம். தொழிலாளர்களும், உத்தியோகஸ்தர்களும் பொறுப்புணர்ந்து காரியமாற்றினால் சங்கடத்திற்கு ஆட்படாமல் தப்ப முடியும். இல்லையென்றால் விரும்பத்தகாத இடமாற்றமோ, நிலைமாற்றமோ காணவேண்டிவரும். 27 ஆம் தேதி முதல் மாணவர்கள் ஓரளவு வெளிச்சம் காண்பார்கள். 28 ஆம் தேதி முதல் ராசிநாதன் வக்கிரம் பெறுவதால் சிறுசிறு சோதனைகள் அவ்வப்போது உண்டாகும். கலைத்துறைகளைச் சேர்ந்தவர்களுக்கு அளவோடு வளர்ச்சி இருந்துவரும். உங்கள் ஜனன கால ஜாதகப்படி தற்சமயம் யோக பலம் உள்ள தசை, புத்தி, அந்தரங்கள் நடைபெறுமானால் பிரச்சனைகள் என்பவை குறைவடையும். தெய்வ வழிபாட்டில் அதிகம் கவனம் செலுத்துவது நல்லது. அதன் மூலம் மனஅமைதி பெறமுடியும். நவம்வர் 16,19,20, 22,26,28,29,30 டிசம்பர் 1,4,6,9,11,12,13 தேதிகள் ஓரளவு சிறப்பானவை. வடக்கும், தென்கிழக்கும் அனுகூலமான திசைகளாகும். தனுசு, கும்ப ராசிக்காரர்கள் உதவுவார்கள். 5,6 எண்கள் ஓரளவு அதிர்ஷ்டமானவை.

ரிஷபம் : (கிருத்திகை 2 ஆம் பாதம் முதல், ரோகிணி, மிருகசீரிஷம் 2 ஆம் பாதம் முடிய)

5 இல் உள்ள குரு உங்கள் புத்திசாலித்தனத்தைப் பிரகாசிக்க வைப்பார். எதிர்ப்புகளைச் சமாளித்து வாழ்க்கையில் முன்னேற்றம் காண்பீர்கள். பணவரவு சீராகவே இருந்துவரும். ஸ்பெகுலேஷன், கொடுக்கல் - வாங்கல் இனங்கள் ஆதாயம் தரும். மக்கள்நலம் மகிழ்ச்சியை உண்டாக்கும். பெரியவர்களும், தனவந்தர்களும் உங்கள் நலனுக்கு உறுதுணையாக விளங்குவார்கள். குடும்பத்தில் நற்காரியங்கள் நிகழும். பேச்சுத்திறமை கூடும். மருத்துவம், இரசாயனம், விஞ்ஞானம் போன்ற துறைகளைச் சேர்ந்தவர்கள் வெற்றிநடை போடுவார்கள். வெளிநாட்டுத் தொடர்ப்பு ஆக்கம் தரும். பெற்றோர் நலம் சீர்பெறும். உத்தியோகஸ்தர்கள் தங்கள் நிலை உயரப் பெறுவார்கள். எலக்ட்ரானிக், கம்ப்யூட்டர் இனங்கள் ஆதாயம் கொண்டுவரும்.

27 ஆம் தேதி முதல் வியாபாரிகள் வெளிச்சம் காண்பார்கள். எழுத்தாளர்களுக்கும், பத்திரிகையாளர்களுக்கும் எண்ணங்கள் நிறைவேறும். ஜன

மத்தில் உள்ள கேது அலைச்சலை அதிகப்படுத்துவார். உடல்நலக்குறைபாடும் உண்டாகும். கூட்டாகத் தொழில் செய்பவர்கள் பங்குதாரர்களிடம் விழிப்புடன் பழகுவது அவசியம். உடன்பிறந்தவர்களால் அதிகம் நன்மைகள் எதிர்பார்க்க இயலாது. ஸ்திரச் சொத்துகள் விஷயத்தில் விழிப்புடன் ஈடுபடுவது நல்லது. கணவன், மனைவியிடையே சிறுசிறு சலசலப்புகள் ஏற்பட்டு விலகும். சினிமா, சங்கீதம் போன்ற கலைத்துறைகளைச் சேர்ந்தவர்கள் சுபிட்சம் காண்பார்கள். நூதனமானவர்களது தொடர்பு வேண்டாம். ஆன்மிக மார்க்கங்களில் ஈடுபட்டுள்ளவர்கள் மனஅமைதி கூடப் பெறுவார்கள். நவம்பர் 16,19,20,22,24,29,30 டிசம்பர் 1,4,6,9,11,12,13 தேதிகள் விசேடமானவை. வடகிழக்குத்திசை அனுகூலமானது. கன்னியா ராசிக்காரர்கள் உதவுவார்கள். 3 ஆம் எண் அதிர்ஷ்டமானது.

மிதுனம் : (மிருகசீரிஷம் 3 ஆம் பாதம் முதல், திருவாதிரை, புனர்பூசம் 3 ஆம் பாதம் முடிய)

6 இல் உள்ள கிரகங்கள் உங்கள் பராக்கிரமத்தை வெளிப்படுத்துவார்கள். எதிர்ப்புகளைக் கடந்து வாழ்வில் நலம் பெறுவீர்கள். அரசு விவகாரங்கள் ஆக்கம் அளிக்கும். வியாபாரிகள் முன்னேற்றமான சூழ்நிலையைக் காண்பார்கள். எலக்ட்ரானிக், கம்ப்யூட்டர் இனங்கள் லாபம் தரும். நிறுவன, நிர்வாகத்துறையினருக்குச் செழிப்பான சூழ்நிலை உதயமாகும். பிற மொழி, மதங்களைச் சார்ந்தவர்கள் உதவ முன்வருவார்கள். 2இல் செவ்வாயும், 8 இல் சனியும் உலவுவதால் எதிலும் பதற்றத்திற்கு ஆட்படாமல் பொறுமையோடு ஈடுபடுவது நல்லது. அதன்மூலம் சங்கடங்களுக்கு ஆட்படாமல் தப்பலாம். சூடான வார்த்தைகளை உதிர்க்கலாகாது. சோர்வுக்கு இடம் தராமல் கடுமையாகப் பாடுபட்டால் மட்டுமே பயன் பெறமுடியும். மற்றையோரை நம்பிப் பிரயோஜனமிராது.

பொறியியல், சட்டம், காவல், இராணுவம் போன்ற துறைகளைச் சேர்ந்தவர்கள், தொழிலாளர்கள், விவசாயிகள் ஆகியோர் விழிப்புடன் காரியமாற்றுவது அவசியம். கணவன், மனைவி உறவுநிலை ஒருநாள் போல் மறுநாளிராது. பொருள் வரவைக் காட்டிலும் செலவுகள் கூடுமாதலால் சிக்கன நடவடிக்கை அவசியம் தேவை. ஸ்பெகுலேஷன், கொடுக்கல் - வாங்கல் இனங்களால் அதிகம் அனுகூலமிராது. கலைத்துறைகளைச் சேர்ந்தவர்கள் அளவோடு வளர்ச்சி காண்பார்கள். மாமூலாகச் செய்துவரும் காரியங்கள் சீராகவே நடந்துவரும். நூதனமான காரியங்களில் தற்சமயம் பிரவேசிக்க வேண்டாம். தெய்வ வழிபாட்டில் ஈடுபடுவது நல்லது. நல்லவர்களின் தொடர்பை வலுப்படுத்திக் கொள்வதன் மூலம் நலம் பெற வாய்ப்புண்டாகும். நவம்பர் 16,19,20,22,24,26,28 டிசம்பர் 1,4,6,9,11,12,13 தேதிகள் சிறப்பானவை. கிழக்கும், தென்மேற்கும் அனுகூலமான திசைகளாகும். விருச்சிக ராசிக்காரர்கள் உதவுவார்கள். 1,4 எண்கள் அதிர்ஷ்டமானவை. திருவாதிரை நட்சத்திரக்காரர்களுக்குச் சங்கடங்கள் குறைவடையும்.

கடகம் : (புனர்பூசம் 4 ஆம் பாதம் முதல், பூசம், ஆயில்யம் முடிய)

முக்கியமான கிரகங்கள் அனுகூலமான நிலையில் சஞ்சரிக்காததால் உங்கள் மனத்தில் சலனம் குடிகொள்ளும். அலைச்சலும், உழைப்பும் கூடும். உடல்நலம் பாதிப்பிற்கு ஆட்படும். எடுத்த காரியங்களை நிறைவேற்ற முடியாமல் தடைகள் உண்டாகும். உடன்பிறந்தவர்களால் தொல்லைகளுக்கு இடமுண்டு. வீண்சண்டை, சச்சரவுகளில் ஈடுபடாமல் இருப்பது அவசியம். பொறியியல், சட்டம், காவல், இராணுவம் போன்ற துறைகளைச் சேர்ந்தவர்கள் விழிப்புடன் காரியமாற்றுவது நல்லது. கணவன், மனைவியிடையே கருத்துவேறுபாடு உண்டாகும். பெண்களுக்கு முன்னேற்றம் தடைப்படும். கலைத்துறைகளைச் சேர்ந்தவர்கள் எதிர்ப்புகளின் பிடியில் சிக்கிக் கொள்ள நேரும். மக்கள்நலனில் அக்கறை செலுத்தப்பட வேண்டிவரும்.

பணநடமாட்டம் சீராக இராது. ஸ்பெகுலேஷன், கொடுக்கல் - வாங்கல் இனங்களால் அதிகம் அனுகூலத்தை எதிர்பார்க்க இயலாது. தொழிலாளர்கள், விவசாயிகள் ஆகியோர் தங்கள் திறமைக்குரிய வளர்ச்சியைக் காணமுடியும். பக்தி மார்க்கத்திலும், ஞானமார்க்கத்திலும் ஈடுபாடு உள்ளவர்கள் மனத்தெளிவு பெறுவார்கள். பெரியவர்களின் அதிருப்திக்கு ஆட்படாமல் அவர்களின் நல்லெண்ணங்களுக்குப் பாத்திரமாவது அவசியம். அதன்மூலம் நலம் பெற வாய்ப்புண்டாகும். கணிதம், விஞ்ஞானம், வியாபாரம் போன்ற துறைகளைச் சேர்ந்தவர்கள் முன்னணிக்கு உயருவார்கள். எழுத்தாளர்களுக்கும், பத்திரிகையாளர்களுக்கும் மாமூலான வளர்ச்சி பாதிக்கப்படாது. பயணத்தின்போது பாதுகாப்பு அவசியம். நவம்பர் 16,19,20,24,26,28, 29,30 டிசம்பர் 4,6,9,11,12,13 தேதிகள் சிறப்பானவை. வடமேற்குத் திசை நலம் தரும். ரிஷப ராசிக்காரர்கள் உதவுவார்கள். பூச நட்சத்திரக்காரர்களுக்கு நன்மைகள் கூடும். 5, 7 எண்கள் நலம் தரும்.

சிம்மம் : (மகம், பூரம், உத்திரம் 1 ஆம் பாதம் முடிய)

குரு, சனி ஆகியோரது பலம் கூடியிருப்பதால் உங்கள் வாக்குவன்மையும், செயல்திறமையும் பிரகாசிக்கும். எதிர்ப்புகளின் கரம் வலுக்குறையும். வழக்கு, வியாஜ்ஜியங்களில் நல்ல திருப்பம் உண்டாகும். முக்கியஸ்தர்களின் தொடர்பு ஆக்கம் தரும். கலைத்துறைகளைச் சேர்ந்தவர்கள் பாராட்டுகளுக்கு உரியவர்களாவார்கள். பொருளாதாரநிலை உயர்வடையும். ஸ்பெகுலேஷன், கொடுக்கல் - வாங்கல் இனங்கள் அளவோடு ஆதாயம் தரும். மருத்துவம், இரசாயனம், விஞ்ஞானம், ஆன்மிகம் போன்ற துறைகளைச் சேர்ந்தவர்கள் செழிப்புப் பெறுவார்கள். ஆசிரியர்கள், பேராசிரியர்கள்,

மேடைப்பிரசங்கிகள் ஆகியோர் தங்கள் செல்வாக்கு உயரப் பெறுவார்கள். தொழிலாளர்களுக்கும், உத்தியோகஸ்தர்களுக்கும் சுபிட்சம் கூடும்.

பொதுநலப்பணியாளர்கள் பாராட்டுகளைப் பெறுவார்கள். மக்கள் நலம் மகிழ்ச்சி தரும். மக்களால் அனுகூலம் பெறவும் வாய்ப்புண்டாகும். கடன் தொந்தரவு குறையும். 4,12 ஆம் இடங்களில் உள்ள கிரகங்கள் உடல் ஆரோக்கியத்தைப் பாதிக்கச் செய்வார்கள் என்பதால் அக்கறை செலுத்திவருவது நல்லது. அலைச்சலைக் குறைத்துக் கொள்வது அவசியம். அரசியல், பொறியியல், சட்டம், காவல், இராணுவம் போன்ற துறைகளைச் சேர்ந்தவர்கள் விழிப்புடன் காரியமாற்றுவது நல்லது. நிலபுலங்கள் விஷயத்தில் எச்சரிக்கையுடன் ஈடுபடுவது அவசியம். 27 ஆம் தேதி முதல் வியாபாரிகளுக்குச் சிறுசிறு சங்கடங்கள் தலைகாட்டும். டிசம்பர் 3 ஆம் தேதி முதல் வாழ்க்கைத் துணைநலனில் கவனம் தேவைப்படும். 5 ஆம் தேதியிலிருந்து வியாபாரிகள் வெளிச்சம் காண்பார்கள். மாணவர்களது நிலையும் உயர்வடையும். நவம்பர் 16,19,20,22,24,26,28,29,30 டிசம்பர் 1,6,9,11,12,13 தேதிகள் சிறப்பானவை. வடகிழக்கு, மேற்குத்திசைகள் நலம் தரும். கன்னி, மகர ராசிக்காரர்கள் உதவுவார்கள். 3,8 எண்கள் அதிர்ஷ்டமானவை.

கன்னி : (உத்திரம் 2 ஆம் பாதம் முதல், ஹஸ்தம், சித்திரை 2 ஆம் பாதம் முடிய)

3 இல் உள்ள சூரியன், ராகு ஆகியோரும் 4 இல் உள்ள சுக்கிரனும் உங்களுக்கு நலம்புரியக்கூடிய நிலையில் சஞ்சரிப்பதால் உங்கள் ஆற்றல் வெளிப்படும். தோற்றப்பொலிவு கூடும். கேளிக்கை, உல்லாசங்களில் ஈடுபட்டு மனமகிழ்வு கொள்வீர்கள். நெருங்கிய நண்பர்கள் உதவ முன்வருவார்கள். எதிர்ப்புகள் என்பவை கட்டுக்குள் அடங்கியிருக்கும். புதிய ஆடை, அணிமணிகள், அலங்காரப் பொருட்கள் ஆகியவற்றின் சேர்க்கை நிகழும். நிலம், மனை, வீடு, வாகனங்களால் அனுகூலம் பெற வாய்ப்புண்டாகும். அரசியல்வாதிகள், அரசுப்பணியாளர்கள் ஆகியோர் வெளிச்சம் காண்பார்கள். நிறுவன, நிர்வாகத்துறையினருக்குச் செழிப்பான பாதை புலப்படும். நூதன நண்பர்கள் சேர்க்கை நிகழும். சினிமா, சங்கீதம் போன்ற கலைத்துறைகளைச் சேர்ந்தவர்கள் செழிப்புப் பெறுவார்கள்.

பெண்களுக்கு உற்சாகம் கூடும். தாய்நலம் சீர்பெறும். கணவன், மனைவியிடையே களிப்புறவு கூடும். 27 ஆம் தேதி முதல் வியாபாரிகள் நல்ல வாய்ப்புகளைப் பெறுவார்கள். மக்கள்நலம் சீர்பெறும். எழுத்தாளர்களும், பத்திரிகையாளர்களும் வளர்ச்சிக்கான மார்க்கத்தைக் காண்பார்கள். டிசம்பர் 3 ஆம் தேதி முதல் ஓரிரு அதிர்ஷ்ட வாய்ப்புகள் கூடிவரும். மனத்திற்கினிய சம்பவங்கள் நிகழும். நற்பணிகளில் ஈடுபடச் சந்தர்ப்பம் கூடிவரும். 5 ஆம் தேதி முதல் சிறுசிறு பிரச்சனைகள் தலைதூக்கும். கணிதம், விஞ்ஞானம், வியாபாரம் போன்ற துறைகளைச் சேர்ந்தவர்கள் பொறுப்புணர்ந்து காரியமாற்றுவது அவசியமாகும். நவம்பர் 16,19,20,22,24,26,28,29,30 டிசம்பர் 1,4,9,11,12,13 தேதிகள் சிறப்பானவை. கிழக்கு, தென்கிழக்குத் திசைகள் அனுகூலமானவை. விருச்சிக, தனுசு ராசிக்காரர்கள் உதவுவார்கள். 1,4,6 எண்கள் அதிர்ஷ்டமானவை.

துலாம்: (சித்திரை 3 ஆம் பாதம் முதல், சுவாதி, விசாகம் 3 ஆம் பாதம் முடிய)

செவ்வாய் 10ல் இருப்பது ஓரளவு நலம் தரக்கூடிய நிலை ஆகும். ஏனைய கிரகங்களின் சஞ்சாரம் திருப்திகரமாக இல்லாததால் நீங்கள் எதிலும் விழிப்புடன் ஈடுபடுவது அவசியமாகும். பிறர் மனம் புண்படும்படியான வார்த்தைகளை உதிர்க்கலாகாது. உணவு விஷயத்தில் கட்டுப்பாடு அவசியம் தேவை. பிறமொழி, மதக்காரர்களை நம்பி மோசம் போகவேண்டாம். பண நடமாட்டம் குறைந்தே காணப்படும். வீண் செலவுகளைத் தவிர்ப்பது அவசியமாகும். ஸ்பெகுலேஷன், கொடுக்கல் - வாங்கல் இனங்களில் ஈடுபடவேண்டாம். உடல் ஆரோக்கியம் கவனிக்கப்பட வேண்டிவரும். அலைச்சலும், உழைப்பும், அதிகரிக்கும். நிலம், மனை, வீடு, வாகனங்கள் சம்பந்தப்பட்ட இனங்களால் அதிகம் நன்மையை எதிர்பார்க்க இயலாது.

எதிர்ப்புகள் என்பவை ஓரிரு கோணங்களில் ஏற்படவே செய்யும். பக்குவமாகச் சமாளிப்பது அவசியமாகும். 27 ஆம் தேதி முதல் வியாபாரிகள், எழுத்தாளர்கள், பத்திரிகையாளர்கள், கணிதத்துறையாளர்கள் ஆகியோர் ஓரளவு வளர்ச்சி காண்பார்கள். டிசம்பர் 3 ஆம் தேதி முதல் நிலபுலங்களால் அனுகூலம் உண்டாகும். கேளிக்கை, உல்லாசங்களில் ஈடுபடச் சந்தர்ப்பம் கனிந்துவரும். கலைத்துறையினருக்கு வெளிச்சமான சூழ்நிலை உருவாகும். புதிய பொருட்களின் சேர்க்கை நிகழும். பொறியியல் துறையாளர்கள் அளவோடு வளர்ச்சி காண்பார்கள். உங்கள் ஜனன கால ஜாதகப்படி தற்சமயம் யோக பலம் உள்ள தசை, புத்தி, அந்தரங்கள் நடைபெறுமானால் சங்கடங்களின் அளவு குறையும். தெய்வ காரியங்களில் ஈடுபடுவதன் மூலம் மனஅமைதி பெற வாய்ப்புண்டாகும். நவம்பர் 16,19,20,24,26,28,29,30 டிசம்பர் 1,4,6,11,12,13 தேதிகள் சிறப்பானவை. தென்கிழக்குத் திசை அனுகூலமானது. தனுசு ராசிக்காரர்கள் உதவுவார்கள். 6 ஆம் எண் அதிர்ஷ்டமானது. சுவாதி நட்சத்திரக்காரர்கள் சங்கடங்கள் குறைவடையப் பெறுவார்கள்.

விருச்சிகம் : (விசாகம் 4 ஆம் பாதம் முதல், அனுஷம், கேட்டை முடிய)

2 இல் சுக்கிரனும், 11 இல் குருவும் சஞ்சரிப்பதால் உங்கள் செல்வநிலை உயரும். எதிர்பாராத திடீர் அதிர்ஷ்ட வாய்ப்புகளும் உண்டாகும். மக்களாலும், வாழ்க்கைத்துணைவ

ராலும் அனுகூலங்கள் ஏற்படும். ஸ்பெகுலேஷன், கொடுக்கல் - வாங்கல் இனங்கள் லாபம் தரும். குடும்பத்தில் நற்காரியங்கள் நிகழும். சினிமா, சங்கீதம் போன்ற கலைத்துறையினருக்குச் செழிப்பான பாதை புலப்படும். கேளிக்கை, உல்லாசங்களில் ஈடுபாடு கூடும். புதிய பொருட்களின் சேர்க்கைக்கு இடம் உண்டு. நல்லவர்களின் தொடர்பு ஆக்கம் தரும். பொன், வெள்ளி, இரத்தின வியாபாரிகளுக்கு லாபம் கூடும். மருத்துவம், இரசாயனம், விஞ்ஞானம், ஆன்மிகம் போன்ற துறைகளைச் சேர்ந்தவர்கள் உற்சாகம் கூடப் பெறுவார்கள்.

3 இல் சனி உலவுவதால் எதிர்ப்புகளின் கரம் வலுக்குறையும். வழக்கு, வியாஜ்ஜியங்களில் நல்ல திருப்பத்தை எதிர்பார்க்கலாம். தொழிலாளர்கள், உத்தியோகஸ்தர்கள், தொழிலதிபர்கள் ஆகியோர் தங்கள் நோக்கம் நிறைவேறப் பெறுவார்கள். 1,7 இல் உள்ள கிரகங்கள் அலைச்சலை அதிகப்படுத்துவார்கள். உடல் ஆரோக்கியம் கவனிக்கப்பட வேண்டிவரும். வேற்று மொழி, மதக்காரர்களிடம் எச்சரிக்கையுடன் பழகுவது அவசியமாகும். இட மாற்றத்திற்குக் காரணம் உண்டு. தொலைதூரப் பயணத்தை ஒத்திப்போடுவது நல்லது. தந்தை நலம் கவனிக்கப்படவேண்டிவரும். பொன் நிறப் பொருட்கள் மூலமாக லாபம் பெற வாய்ப்புண்டு. சமூகநலப்பணியாளர்கள் வரவேற்பு கூடப் பெறுவார்கள். நவம்பர் 16,19,20,22,24,26,28,29,30 டிசம்பர் 1,4,6,9,13 தேதிகள் சிறப்பானவை. வடகிழக்கு, தென்கிழக்கு, மேற்குத்திசைகள் அனுகூலமானவை. தனுசு, மகர, கன்னியா ராசிக்காரர்கள் உதவுவார்கள். விசாகம், கேட்டை நட்சத்திரக்காரர்கள் சிறுசிறு சங்கடங்களுக்கு ஆட்பட வேண்டிவரும். 3,6,8 எண்கள் அதிர்ஷ்டமானவை.

தனுசு : (மூலம், பூராடம், உத்திராடம் 1 ஆம் பாதம் முடிய)

விசேடமான நற்பலன்களை நீங்கள் இந்த நேரத்தில் எதிர்பார்க்க இயலாது. பெரும்பாலான கிரகங்கள் திருப்திகரமாக உலவாததால் எதிலும் பதற்றத்திற்கு இடம் தராமல் பொறுமையுடன் ஈடுபடவேண்டிவரும். அலட்சியப் போக்கைக் கைவிடுவது நல்லது. உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவைப்படும். பொருளாதாரநிலையில் சரிவு உண்டாகும். கொடுக்கல் - வாங்கல், ஸ்பெகுலேஷன் துறைகளில் ஈடுபடவேண்டாம். அரசியல்வாதிகள், அரசுப்பணியாளர்கள் ஆகியோர் தங்கள் பொறுப்புணர்ந்து காரியமாற்றினால் சோதனைகளுக்கு ஆட்படாமல் தப்பலாம். பேச்சில் நிதானம் தேவை. குடும்பத்தில் சிறுசிறு குழப்பங்கள் அவ்வப்போது ஏற்படும். உடன்பிறந்தவர்களால் அனுகூலமிராது. தந்தை நலம் பாதிக்கப்படும். தீயவர்களின் தொடர்பை அகற்றி, நல்லவர்களின் தொடர்பை வலுப்படுத்திக் கொள்வது அவசியமாகும்.

பொறியியல், சட்டம், காவல், இராணுவம் போன்ற துறைகளைச் சேர்ந்தவர்கள் விழிப்புடன் காரியமாற்றுவது நல்லது. தொழிலாளர்களுக்கும், உத்தியோகஸ்தர்களுக்கும் முன்னேற்றம் தடைப்படும். விரும்பத்தகாத இடமாற்றமோ, நிலை மாற்றமோ கூட ஏற்படும். மேலதிகாரிகளின் அதிருப்திக்கு ஆட்படாமல் இருப்பது அவசியம். 27 ஆம் தேதி முதல் வியாபாரிகள் வெளிச்சம் காண்பார்கள். எழுத்தாளர்களுக்கும், பத்திரிகையாளர்களுக்கும் சீரான வளர்ச்சி இருந்துவரும். கணவன், மனைவி உறவுநிலை சீர்பெறும். தெய்வப் பணிகளில் ஈடுபாடு உள்ளவர்கள் மனத்தெளிவு பெறுவார்கள். உங்கள் ஜனனகால ஜாதகப்படி தற்சமயம் யோக பலம் உள்ள தசை, புக்தி, அந்தரங்கள் நடைபெறுமானால் சங்கடங்கள் குறைவடையும். நவம்பர் 19,20,22,24,26,28,29,30 டிசம்பர் 1,4,6,9,11 தேதிகள் சிறப்பானவை. வடமேற்குத்திசை நலம் தரும். ரிஷப ராசிக்காரர்கள் உதவுவார்கள். 7 ஆம் எண் அதிர்ஷ்டமானது.

மகரம் : (உத்திராடம் 2 ஆம் பாதம் முதல், திருவோணம், அவிட்டம் 2 ஆம் பாதம் முடிய)

9, 11 ஆம் இடங்களில் உள்ள கிரகங்கள் உங்கள் புத்திசாலித்தனத்தையும், செயல்திறமையையும், வெளிப்படுத்துவார்கள். பொருளாதாரநிலை உயரும். ஸ்பெகுலேஷன், கொடுக்கல் - வாங்கல் இனங்கள் ஆக்கம் தரும். நல்லவர்களின் தொடர்பால் நலம் பெற்று வருவீர்கள். அரசியல்வாதிகள் தங்கள் கொள்கைகளுக்கு வரவேற்புப் பெறுவார்கள். நிர்வாகத்துறையினருக்குச் செழிப்பான பாதை புலப்படும். நவீன விஞ்ஞானத்துறைகளைச் சேர்ந்தவர்களுக்கு லாபம் கூடும். மருத்துவம், இரசாயனம், விஞ்ஞானம், ஆன்மிகம் போன்ற துறைகளைச் சேர்ந்தவர்கள் வெற்றிநடை போடுவார்கள். பயணம் பயன்படும். வெளிநாட்டுத் தொடர்பு ஆக்கம் தரும். பிற மொழி, மதங்களைச் சேர்ந்தவர்கள் உதவ முன்வருவார்கள். போக்குவரத்து இனங்கள், தோல் பொருட்கள், ஏற்றுமதி, இறக்குமதித் துறைகள் ஆகியவற்றில் சம்பந்தப்பட்டுள்ளவர்கள் கூடுதலான ஆதாயம் கிடைக்கப் பெறுவார்கள்.

கடிதப் போக்குவரத்து நற்செய்தி கொண்டு வரும். உடல்நலம் சீர்பெறும். போட்டிப் பந்தயங்களில் வெற்றி கிட்டும். தந்தையால் அனுகூலம் உண்டாகும். புனிதப்பயணம், மகான்கள் தரிசனம், தெய்வ தரிசனம் ஆகியவை கிடைக்கப் பெற முடியும். உத்தியோகஸ்தர்கள் தங்கள்நிலை உயரப் பெறுவார்கள். கலைத்துறையினருக்கு மாமூலான வளர்ச்சி பாதிக்கப்படாது. கணவன், மனைவியர் உறவுநிலை ஒருநாள் போல் மறுநாளிராது. கூட்டுத் தொழிலில் கவனம் தேவைப்படும். பொறியியல், சட்டம், காவல், இராணுவம் போன்ற துறைகளைச் சேர்ந்தவர்கள் விழிப்புடன் செயல்படுவது நல்லது. தொழிலாளர்களும், விவசாயிகளும் முன்னேற்றம் காண அதிகம் பாடுபடவேண்டிவரும். வியாபாரிகள், எழுத்தாளர்கள், பத்திரிகையாளர்கள் ஆகியோர் வளர்ச்சி காண்பார்கள். நவம்பர் 16,20,22,

24,26,28,29,30 டிசம்பர் 1,4,6,9,11,13 தேதிகள் சிறப்பானவை. வடகிழக்கு, தென்மேற்குத் திசைகள் அனுகூலமானவை. கன்னி, விருச்சிக ராசிக்காரர்கள் உதவுவார்கள். 1,3,4, எண்கள் அதிர்ஷ்டமானவை.

கும்பம் : (அவிட்டம் 3 ஆம் பாதம் முதல், சதயம், பூரட்டாதி 3 ஆம் பாதம் முடிய)

பெரும்பாலான கிரகங்கள் அனுகூலமான நிலையில் சஞ்சரிக்காததால் நீங்கள் எதிலும் ஒருமுறைக்கு இருமுறை யோசித்து ஈடுபடுவது அவசியமாகும். உற்றார், உறவினர்கள், நண்பர்களிடம் வெளிப்படையாகப் பழகவேண்டாம். குடும்பத்தில் சிறுசிறு பிரச்சனைகள் ஏற்பட்டு விலகும். பொருளாதாரநிலையில் விசேடமான அபிவிருத்திக்கு இடமிராது என்றாலும் முக்கியமான தேவைகள் பூர்த்தி அடையும். வீண்செலவுகளைத் தவிர்ப்பது அவசியமாகும். அலைச்சலைக் குறைத்துக் கொள்வது நல்லது. தாய்நலம் கவனிக்கப்படவேண்டிவரும். மக்களால் அதிகம் நன்மையை எதிர்பார்க்க இயலாது. பெரியவர்களின் அதிருப்திக்கு ஆளாகாமல் அவர்களின் நல்லெண்ணங்களுக்குப் பாத்திரமாவதன் மூலம் நலம் பெற வாய்ப்புண்டாகும்.

அரசியல்வாதிகள், அரசுப்பணியாளர்கள், நிர்வாகத்துறைகளைச் சேர்ந்தவர்கள் ஆகியோர் முன்னேற்றத்திற்கான மார்க்கத்தைக் காண்பார்கள். வெளிநாட்டுத் தொடர்பு ஆக்கம் தரும். எலக்ட்ரானிக், கம்ப்யூட்டர் இனங்கள் ஆதாயம் கொண்டு வரும். சினிமா, சங்கீதம் போன்ற கலைத்துறைகளைச் சேர்ந்தவர்கள் வெற்றிநடை போடுவார்கள். பெண்களுக்கு உற்சாகமான சூழ்நிலை உதயமாகும். கேளிக்கை, உல்லாசங்களில் ஈடுபாடு கூடும். புதிய ஆடை, அணிமணிகள், அலங்காரப்பொருட்களின் சேர்க்கைக்கு இடம் உண்டு. மாமூலாகச் செய்து வரும் காரியங்கள் சீராகவே நடந்துவரும். புதிய முயற்சிகளை ஒத்திப்போடுவது நல்லது. தெய்வப் பணிகளிலும், தருமப்பணிகளிலும் ஈடுபடுவதன் மூலம் மன அமைதி பெறமுடியும். நவம்பர் 16,19,22,24,26,28,29,30 டிசம்பர் 1,4,6,9,11,12,13 தேதிகள் சிறப்பானவை. தென்கிழக்குத் திசை நலம் தரும். விருச்சிக, தனுசு ராசிக்காரர்கள் உதவுவார்கள். 1,4,6 எண்கள் அதிர்ஷ்டமானவை. பூரட்டாதி, அவிட்ட நட்சத்திரக்காரர்கள் விழிப்புடன் இருப்பது நல்லது. சதய நட்சத்திரக்காரர்களுக்குச் சங்கடங்கள் குறைவடையும்.

மீனம் : (பூரட்டாதி 4 ஆம் பாதம் முதல், உத்திரட்டாதி, ரேவதி முடிய)

உங்களது புத்திசாலித்தனம் வெளிப்படும் நேரமிது. எதிர்ப்புகளைக் கடந்து வாழ்க்கைப் பாதையில் முன்னேற்றம் காண்பீர்கள். பொருள் வரவு திருப்திகரமாக இருந்துவரும். கொடுக்கல் - வாங்கல் இனங்கள் லாபம் தரும். ஸ்பெகுலேஷன் துறைகளில் ஈடுபட்டுள்ளவர்கள் ஆதாயம் கூடுதலாகக் கிடைக்கப் பெறுவார்கள். கணவன், மனைவியிடையே சலசலப்புகள் குறைவடையும். கூட்டுத் தொழில் செய்பவர்கள் பங்குதாரர்களிடம் சுமுகமாகப் பழகி லாபத்தைப் பெருக்கிக் கொள்வார்கள். பயணம் பயன்படும். அலுவலகங்களில் பணிபுரிபவர்கள், தொழிலாளர்கள், தொழிலதிபர்கள் ஆகியோர் தங்கள் நிலை உயரப் பெறுவார்கள். மருத்துவம், இரசாயனம், விஞ்ஞானம், ஆன்மிகம் போன்ற இனங்களைச் சேர்ந்தவர்கள் செழிப்பான பாதையைக் காண்பார்கள்.

சமூக நலப்பணியாளர்களுக்கு வரவேற்பு கூடும். கறுப்புநிறப் பொருட்கள் லாபம் தரும். பிற மொழி, மதங்களைச் சேர்ந்தவர்கள் உதவிக்கரம் நீட்டுவார்கள். எழுத்தாளர்களுக்கும், பத்திரிகையாளர்களுக்கும் புகழ் ஓங்கும். மக்களால் பெற்றோருக்கும், பெற்றோரால் மக்களுக்கும் அனுகூலங்கள் உண்டாகும். வெளிநாட்டுத் தொடர்பால் நலம் பெற வாய்ப்புண்டு. சினிமா, சங்கீதம் போன்ற கலைத்துறைகளைச் சேர்ந்தவர்கள் டிசம்பர் 3 ஆம் தேதி முதல் வெளிச்சம் காண்பார்கள். பொறியியல் துறையாளர்களுக்குச் சிறுசிறு சங்கடங்கள் உண்டாகும். கணிதத்துறையாளர்களுக்கு முன்னேற்றம் தென்படும். திருமணம் ஆகாதவர்கள் அதற்கான வாய்ப்பைப் பெறுவார்கள். ஏற்கெனவே திருமணம் ஆனவர்கள் இல்லறத்தில் நல்லறம் காண்பார்கள். நவம்பர் 16,19,20,24,26,28,29,30 டிசம்பர் 1,4,6,9, 11,12,13 தேதிகள் சிறப்பானவை. வடகிழக்கு, மேற்குத் திசைகள் நலம் தரும். கன்னி, மகர ராசிக்காரர்கள் உதவுவார்கள். 3,7,8 எண்கள் அதிர்ஷ்டமானவை. உத்திரட்டாதி நட்சத்திரக்காரர்கள் நலம் கூடப் பெறுவார்கள்.

எழுதி வைத்த பதில்கள்

வாழ்க்கையில் மிகப் பெரிய மகிழ்ச்சி எது?
நேசிப்பதும் நேசிக்கப் படுவதும்தான்!

—சிட்னிஸ்மித்

வாழ்க்கை என்பது என்ன?
எண்ணத்தின் பயனே!

— மார்க்கஸ் அரேலியஸ்


இறைவனிடம் கேட்க வேண்டிய வரங்கள் என்ன?
நல்ல மனச்சான்று உள்ள வளம் உடல் நலம்

— செனிகா

தெய்வத் தன்மை எப்போது வரும்?
தேவைகள் குறையும் அளவிற்கே!

—சாக்ரடீஸ்

தொகுப்பு : சீனிவீரப்பன்



உயிர் பெறத்
தவம்

ஃபோட்டோ: எம். நடராஜன்



ஊர்வலத்துக்குத்
தயார்

ஃபோட்டோ: எஸ்.ஜி.சேகர்



போட்டோ: வி.முத்துராமன்

ஓடுங்கள்! ஓடுங்கள்! உங்கள் வெற்றிக்கு ஓடுங்கள்!

தோடி

ஜெயா வெங்கட்ராமன்

தூக்கம் வராமல் புரண்டு படுத்தேன். என்னென்னவோ நினைவுகள். நிம்மதியாக எந்த விதக் கவலையும் இல்லாமல் சுமதி தூங்கிக் கொண்டிருக்கிறாள். எனக்கு மட்டும் ஏன் இவ்வளவு மன உளைச்சல்? பெற்றவளுக்கு இல்லாத பொறுப்பும் கவலையும் எனக்கு மட்டும் ஏன்? எங்களுக்கிடையில் மகேஷ் உறங்கிக் கொண்டிருக்கிறான். ஏதோ கனவு போல இருக்கிறது. என்னவோ சிரித்துக்கொண்டே உளறிக் கொண்டிருக்கிறான். இன்னும் முழுசாக ஆறு வயது முடியவில்லை. அதற்குள் படிப்பு, பள்ளிக்கூடம் என்றெல்லாம்! சென்ற ஞாயிற்றுக்கிழமை நடந்த பெற்றோர்கள் - ஆசிரியர்கள் கூட்டத்தில் ஒரு பெற்றவர் சொல்கிறார் - எல்.கே.ஜியில் படிக்கும் அவர் மகனுக்குப் போதிய ஹோம் ஒர்க் கொடுப்பதே இல்லையாம் - எப்போதும் பாட்டு, விளையாட்டு தான், பொறுப்பேயில்லை என்கிறார்.

என்ன செய்வது? பொறுப்புள்ள தலைமை ஆசிரியை மட்டும் "தயவு செய்து இப்போதே ஹோம் ஒர்க் அது இது என்று குழந்தைகளைத் துன்புறுத்தாதீர்கள். அவர்கள் இஷ்டப்படி விளையாட, நாலு பேரோடு பழக, இடையிடையே எழுதவும் படிக்கவும் அவர்கள் போக்குப்படி விட்டுப்பிடிக்கத் தான் பள்ளிக்கூடம் நடத்துகிறோம். நல்ல பழக்கத்தை ஏற்படுத்திக் கொடுக்கத்தான் இந்தப் படிப்பு".

இவர்கள் பேசிக்கொண்டே இருக்கும்போது ஸ்கூலில் கொடுத்த சாக்லேட்டைச் சாப்பிட்டு விட்டுச் சில குழந்தைகள் காகிதத்தை அப்படியே போட்டுவிட்டு அப்பா அம்மாவுடன் கொஞ்சிக் கொண்டிருந்தனர். ஒரு குழந்தை மட்டும் கரும சிரத்தையாக அந்தக் குப்பைக் காகிதங்களை ஒவ்வொன்றாகப் பொறுக்கிக் கொண்டிருந்தது.

அதோடு நிற்காமல் பொறுக்கிய காகிதத்தை அருகில் இருந்த பகாசுரன் வடிவில் இருந்த பிளாஸ்டிக் பொம்மை குப்பைத் தொட்டியின் வாயில் போட்டது.

ஸ்கூல் கமிட்டி மெம்பர் வயதில் இளையவர் கண்ணாடி அணிந்தவர் குறுக்கிட்டுச் சொன்னார்:

"சார்! நீங்கள்ளாம் என்னென்னமோ பேசிக்கிட்டு இருக்கீங்க! அந்த வெள்ளை கவுன்போட்ட குழந்தையைக் கவனிச்சீங்களா? யாருமே அதைச் சட்டை பண்ணல்லே! மத்த குழந்தைங்க போட்ட சாக்லேட் பேப்பரையெல்லாம் பொறுக்கி அந்தக் குப்பைத் தொட்டியில் போட்டதே அதை நீங்க ஏன் கவனிக்கல்லே இந்தக் குழந்தைக்கு மட்டும் யா சொல்லிக் கொடுத்தாங்க இந்தப் பண்பாடு அந்தக் குழ தைக்கு ஏதோ ஒரு சேவைங்க மனப்பான்மையிலே வந்திருக்க முடியாது. விளையாட்டு போலச் செய்யும் அந்த வேடிக் கையைப் பட்டை தீட்டி ஒரு ஒழுக்கமா வளர்க்கறதுதா எங்க கடமை. இந்தப் பழ கத்தை எல்லாக் குழந்தை களும் கத்துக்கணும். அதை விட்டுட்டு, படிப்பு, படிப்புன்னு இப்பவே உயிரை எடுக் கணுமா?"

இதைச் சொல்லி வாயை மூடவில்லை. மற்ற பெற்றோர் களும் அவர்கள் குழந்தைகளை ரகசியமாக விரட்ட அதே கா யத்தை மற்ற குழந்தைகளும் செய்ய ஒரு நொடியில் ருப கிளீன்.

"இதுதான் இன்றை சமுதாயத்துக்கு வேண்டியது. நினைத்த இடத்தில் குப்பை யைப் போடுவது, சிறுநீர் கழிப்பது... இன்னும் எத்தனை ஒழுங்கீனங்களை இங்கு நம் மிடையே இருப்பவர்கள் செய்து வருகிறோம். இந்தக் குழந்தை எதிர்காலத்தில் நிச்சயமாக அதைச் செய்யாது! இதுதான் இன்றைய சமுதாயத்தின் தேவை, அதாவது ஒழுக்கம்..." என்று ஒரு குட்டிச் சொற் பொழிவை ஆற்றிவிட்டார் அந்த இளைஞர்.

"ஹோம் ஒர்க்" பெற்றோ ருக்கு மட்டும் என்னமோ சமா தானம் இல்லை. அறுபது ரூபாய் பீஸ் கொடுப்பது இதற்குத்தானா?" என்று முணு முணுத்தது என் காதுகளில் விழுந்தது.

என் சுமதியும் இதில் எந்த விதத்திலும் குறைந்தவள் இல்லை. இப்போதே தன் மகன் பெரிய ரஸ்ஸல் ஆகவோ சி.வி.ராமனாகவோ ஆகவேண் டும் என்று விரும்புகிறாள்.

விரும்பவதோடு அவள் கடமை முடிந்து விடுகிறது. அதற்கு அவள் பொறுப்பு என்ன? அவள் என்ன செய்திருக்கிறாள்?

மகேஷ் பள்ளிக்கு ஒழுங்காகப் போவதில்லை, பள்ளிக்கூடம் விட்டால் நேராக வீட்டுக்கு வருவதில்லை என்று புகார். இன்று மீட்டிங் முடிந்த பின்னர் தலைமை ஆசிரியை தனியாகக் கூப்பிட்டு என்னிடம் சொன்னார். என்ன செய்வது? சொன்னால் புரிகிற வயதும் இல்லை.

வீட்டுக்கு வந்தால் மகேஷைப் பற்றி வேலைக்காரி - கம் - ஆயாவின் புகார். விஷமம்... நேராக வீட்டுக்கு வருவதில்லை. ஸ்கூலுக்குத் தேடிக் கொண்டு போனால் அவன் அங்கு இருப்பதில்லை. காரில் எங்காவது அடிபட்டால் நான் பொறுப்பில்லை என்று நிர்தாட்சண்யமாக அவளது புகார். சுமதியின் கோபம் தலைக்கு ஏற, கண்மண் தெரியாமல் அடித்து விட்டாள்.

"இல்லேம்மா! இல்லேம்மா!" என்று கையை ஆட்டிக் கொண்டு, இனிமேல் பண்ண மாட்டேன். ஒழுங்கா நேரா வீட்டுக்கு வந்துடறேன்" என்று அவன் அழுவதையும் பொருட்படுத்தாமல் அடிக்க கடைசியில் நான் சமாதானம் செய்ய அடி, அழுகை ஓய்ந்தது.

இப்போது எந்தவிதச் சலனமும் இல்லாமல் அம்மாவின் மேல் காலைப் போட்டுக் கொண்டு தூங்குகிறான். இந்தப் பூச்செண்டையா இப்படி மிருகத்தனமாக அடித்தாள்?

"நிஜவாழ்க்கையின் உண்மைகள் ஏன் புரியவில்லை. பட்டுப்பூச்சிப் பிடிக்கப் போனேன். மயில் இறகு புத்தகத்தில் வைத்தால் குட்டி போடும் என்று பிரண்ட் சொன்னான் என்று மயிலிறகு வாங்க அவன் வீட்டுக்குப் போனேன். அதனால லேட்டாயிடுச்சு" என்று பொய் சொல்லத் தெரியாமல் உண்மை சொல்லும் குழந்தையை அடித்தால் அந்தக் குழந்தை அடுத்த நாள் பொய் சொல்ல நாம் தானே சொல்லிக் கொடுக்கிறோம். புத்தகம் வாங்கப் போனேன் என்று சொன்னால் அடிக்கவா போகிறோம்? பள்ளியில் படித்துத் தெரிந்து கொள்ளாத எத்தனையோ பழக்கங்கள் நம்மால் குழந்தைகளுக்கு வருகின்றன. எனது இளமை நினைவுகள்...

பூங்குன்றத்தில் எண்ணினாற்போல் மொத்தம் இருபது வீடுகள். ஒரு மைல் தூரத்தில் பள்ளிக்கூடம். கையில் ஒரு சிலேட்டு, கந்தலாகிப் போன அரிச்சுவடிப் புத்தகம். ஒரு மாதம் முன்புதான் புதிதாக வாங்கிய புத்தகம்.

'ஒரணாக் கொடுத்து வாங்கிய புத்தகத்தைக் கிழித்து விட்டாயே' என்று அடிவேறு. எங்கோ பராக்குப் பார்த்துக் கொண்டு வந்து கல் தடுக்கிக் கீழே விழுந்து முழுங்காலில் ரத்தம் சொட்ட உடைந்து தூளான சிலேட்டுடன் அழுது கொண்டே வீட்டுக்கு வந்தது. அடிபட்ட வலியில் அழவில்லை. உடைந்துபோன சிலேட்டுக்காக உதைக்கப் போகிறார்களே என்ற பயத்தில் அம்மாவைப் பார்த்ததும் அழுகை பெரிதாகியது. இப்படி ஒவ்வொன்றாக நினைவில் வந்து போனது.

பள்ளிக்கூடம் போக எனக்கு நண்பர்கள் யாரும் இல்லை. அடுத்த வீட்டுப் பெண் சரஸ்வதிதான் என் நண்பி. அவளுடைய அப்பா சிறுவயதிலேயே போய்விட்டார். அம்மா பம்பாயில் தன் தம்பிகளோடு. வயதான பாட்டி ஒருத்திதான் பிதிர்ராஜ்ய சொத்தான வீட்டுக்கும், சச்சிக்கும் காவல்.

கூடப்படிக்கும் பையன்கள் எல்லாம் கேலி செய்வார்கள். அதைப் பற்றி எனக்குக் கவலையே இல்லை. அவள் நட்பைவிட நானும் தயாராக இல்லை. ஏனென்றால் அவள் ஒருத்திதான் என்னைக் கேலி செய்ய மாட்டாள்!

பாட்டியும், என் அம்மாவும் திண்ணையில் உட்கார்ந்து பேசிக் கொண்டிருப்பார்கள். நானும் சச்சியும் சின்ன முட்டை விளக்கை வைத்துக் கொண்டு படித்துக்கொண்டிருப்போம்.

நீண்ட ஓட்டு வீடு. மின்சாரம் அப்போது வரவில்லை. தெரு விளக்குகளே அபூர்வம். வாசல் திண்ணையில் உட்கார்ந்து படிப்போம். சமையலறை கடைசியில் இருக்கும். அங்கு போய் தண்ணீர் எடுத்துக் கொண்டு வர அவளுக்குப் பயம். என்னைவிட இரண்டு வயது பெரியவள் என்றாலும், நான் என்னவோ பெரிய ஆண் பிள்ளைத் துணை என்பதில் அவளுக்குத் தைரியம்.

அவள் என்னை நம்பினாலும் எனக்கும் தனியாக இருட்டு வீட்டில் போக பயம். ஏதாவது சாக்குப் போக்குச் சொல்லி தட்டிக் கழிக்க நினைத்தால் முடியாது.

கையில் விளக்கை எடுத்துக் கொண்டு அவள் முன்னால் போக நான் பின்னால் வருவேன். அதற்கும் பயம். அதவால் அவளோடு சேர்ந்து வருவேன். திரும்பிப் பார்க்கப் பயம். திரும்பிப் பார்த்தால் நீண்ட இரண்டு கருத்த நிழல்கள் பயத்தை அதிகரிக்கும். கண்ணை மூடிக்கொண்டே அவள் பின்னோடு செல்வேன்.

"இனிமே இதுமாதிரி ராத்திரிலே தண்ணி எடுக்கக் கூப்பிட்டா நான் வரமாட்டேன்!"

"இனிமே அப்படியெல்லாம் கூப்பிடமாட்டேண்டா".

"நாளைக்கி பள்ளிக்கூடத்துல ஒரு பேச்சுப் போட்டி இருக்குடி! நான் பேசப் பேறேன்".

"நீ கிழிச்சே! நீயாவது பேசறதாவது?"

"நிச்சயமாப் பாருடி! பஸ்ட் பிரைஸ் நான்தான் வாங்கப் போறேன்".

மறுநாள் போட்டிக்குப் போகும்போது மட்டும் என்னை ஊக்குவித்து அனுப்பினாள். ஆனால் மற்ற மாணவர்கள் என்னைக் கேலி செய்ய, மேடையில் ஏறிய உடனேயே கைகால் உதற பேச முடியாமல் இறங்கினேன்.

நன்றாகப் படிக்கும் மாண வர்களுக்கு மட்டும்தான் ஆசி ரியர்களின் ஆதரவு. நான் மிகவும் சுமாராகப் படிப்பவன் என்பதால் என்னைக் கண்டால் எல்லா ஆசிரியர்களுக்கும் இளக்காரம்.


மறுநாள் பாடத்தில் ஏதாவது கேள்வி கேட்டுச் சரியாகப் பதில் சொல்லாவிட்டால், நேற் றைய பேச்சையும், இன்றைய பாடத்தையும் ஒப்பிட்டு என்னை மட்டந்தட்டி எனது பிஞ்சு உணர்வுகளை முளையிலேயே கிள்ளி என் நெஞ்சில் சூடு போட்டது. அப்போதெல்லாம் சச்சிதான் சொல்வாள்.

"போடா! இவங்க போட்டி யிலே பிரைஸ் வாங்கலேன்னா என்ன? ஒரு நா இல்லாத போனா ஒருநாள் நீ பெரிய ஆளாத்தான் வரப்போறே! அப்ப இந்த சச்சியோட ஞாபகம் இருக்குமாடா?"

"போடி! சும்மா நீயும் என்னைக் கேலி பண்றே! எனக்குப் படிப்பும் வரமாட்டேங் கறது! பின் எதுக்காக இருக் கணும்? செத்துப் போயிட லாம்னு தோணுது. அதுசரி! எப்பிடிடி செத்துப் போறது?"

"போடா! நீ இப்படி எல்லாம் பேசினா நான் ஒன்னோட பேசமாட்டேன்! இந்த மாதிரி கெட்ட வார்த்தையெல்லாம் பேசக்கூடாது! அம்பி! நான் நெஜமாத்தாண்டா சொல்றேன். உன்னை இவா யாருக்கும் புரியல்லே! எத்தனை அடி பட்டாலும், காயம் பட்டாலும் எழுந்து நிக்கணும்னு ஒனக்கு இருக்கற உத்வேகம் வீணாப் போகாதுடா! பாடப்புத்தகத் துல படிக்கல்லே! ஆப்ரகாம் லிங்கன் எவ்வளவு கஷ்டப் பட்டார்! எவ்வளவு தோல்வி. அத்தனை தோல்வியும் ஒருநாள் அவருக்கு வெற்றியாகல்லே!"

அதற்கப்புறம் பல வரு ஷங்கள் கழித்து அதே பூங்குன் றத்துல ஒரு இலக்கியக் கூட்டத் தில் தங்குதடையில்லாமல் சர மாரியாகப் பேசி முடிக்க முடிந்தது. அண்ணா மன்னி யுடன் கோயிலுக்குப் போய்க் கொண்டிருந்தபோது என் பழைய ஹெட்மாஸ்டர் அண்ணா விடம், "உங்க தம்பியா? என் னோட ஸ்டுடண்ட். மேடைப் பேச்செல்லாம் பிச்சு வாங்க



றானே?" என்று பாராட்டுத் தெரிவித்தார். அதே ஹெட் மாஸ்டர்தான் ஒரு காலத்தில் என்னைக் கேலி செய்தார். அத்தனை பேருக்கும் நடுவில் என்னை மேடையில் துணியை அவிழ்த்ததுபோல அவமானப் பட வைத்தார்கள். இந்தப் பாராட்டைப் பல வருடங்களுக்கு முன்னால் சொல்லியிருந்திருந்தால்? அல்லது குறைந்த பட்சம் என்னை மட்டம் தட்டாதிருந்தால் எவ்வளவு சந்தோஷமாக இருந்திருக்கும்!

அந்தப் பாராட்டுகளைக் கேட்க இப்போது என் தோழி சச்சி இல்லை. படிப்பு முடித்துக் கொண்டு பாட்டியோடு பம்பாய்க்குப் போய் விட்டாள்.

படிப்பு முடிந்து வேலைக்காக வெளியூர் போன பின்பு எப்போதோ ஒரு தடவை சொந்தமண்ணுக்கு, பூங்குன்றத்துக்கு வரும் போதெல்லாம் என் இனிய தோழியை நினைத்துக் கொள்வேன். ஏன் பெரியவர்களாக ஆனோம்? குழந்தைகளாகவே இருந்திருக்கக் கூடாதா? பெரியவர்களான பின்னர்தானே கள்ளங்கபடமில்லாத நட்புக்குப் பிரிவு வந்தது. பின்னர் அவள் எப்படியிருக்கிறாள் என்பதைப் பற்றி எனக்குத் தெரியவே தெரியாது. அவள் மாமாவையே கல்யாணம் பண்ணிக் கொண்டு பம்பாயிலேயே செட்டில் ஆகிவிட்டதாகவும் இந்த வீட்டை விலை பேசுவதாகவும் கேள்விப்பட்டேன். பின்னர் சுமதியைத் திருமணம் செய்து கொண்டு, மகேஷ் பிறந்தவுடன் அனைத்தையும் மறந்து விட்டேன். இப்போது மகேஷ் பள்ளிக் கூடத்திற்குப் போகாமல் முரண்டு பிடிப்பது. வேடிக்கை பார்ப்பது இவை எல்லாம் எனது இளமைக்காலத்தை நினைவூட்டின.

'சே! எவ்வளவு நேரம்! நேரம் போனது தெரியாமல் தூங்கி விட்டிருக்கிறேன் என்று திடீரென விழித்துக் கொண்டேன். பின்னர்தான் இரவு நெடுநேரம் வரை தூங்கவே இல்லை என்பது நினைவுக்கு வந்தது.

"குட்மார்னிங் டாடி!" என்று வெள்ளைச் சட்டை நீல டிரவுசர் டை, ஷூ சகிதமாக மகேஷ் நின்று கொண்டிருந்தான்.

"குட்மார்னிங் மை சன்" என்று அவனை அணைத்து முத்தம் கொடுத்தேன்.

"அய்ய! தாடி குத்துது, பல்லு தேய்க்காம! நாத்தம்... உவ்வே!" என்றான் மகேஷ்.

எவ்வளவு தெரிந்திருக்கிறது இந்தச் சின்னக் குழந்தைகளுக்கு? தோளில் மிகப்பெரிய புத்தகப் பை. அவனைவிட அவனுடைய புத்தகங்களின் சுமை அதிகம்.

அடக்கடவுளே! இப்படிப் போனால் இந்தக் குழந்தைகள் எதிர்காலத்தில் எப்படி ஆரோக்கியம் உள்ளவைகளாக வளரும்? இந்தச் சின்ன வயதிலேயே கூன் விழுந்த நடை? இது என்ன நாகரிகம்? இப்படி ஹோம் ஒர்க், பாடம் என்று போனால் இந்தக் குழந்தைகள் எப்போது விளையாடும்?

"டேய்! மகேஷ், சைக்கிள் ரிக்ஷா வந்துவிட்டது ஸ்கூலுக்குக் கிளம்பு!" என்று விரட்டினாள் சுமதி. வாட்டர் பாக், டிபன் சகிதமாகப் பிள்ளையை ஸ்கூலுக்கு அனுப்பி விட்டு வந்தாள்.

"என்ன இன்னிக்கு ஆபீசுக்கு மட்டமா? என்ன வந்தது உங்களுக்கு?"

'இல்லே சுமதி! ஒங்கூட கொஞ்சம் பேசணும்'.

"அதெல்லாம் சாயங்காலம் ஆபீஸ்லயிருந்து வந்து பேசிக்கலாம். டிபன் சாப்பாடு எல்லாம் ரெடி. டேபிள்மேலே இருக்கு. நீங்க குளிச்சு, டிரஸ் பண்ணிக்கிட்டு ஆபீஸ் போகத் தயாராகுங்க. நான் போகணும்".

இவளுக்கு இதைவிட்டால் வேறு எதுவுமே தெரியாதா? எப்படி இவர்களால் மெஷின் மாதிரி இயங்க முடிகிறது? நேற்று நடந்தது. மகேஷை அடித்தது. அவன் அழுது கொண்டே தூங்கியது. மகேஷ் இப்படி இருக்கிறானே என்று கவலைப்பட்டு சுமதி அழுதது. இவை எல்லாவற்றையும் மறந்துவிட்டு இயல்பான நீரோட்டத்தில் எப்படிக் கலக்க முடிந்தது? அவ்வளவு அடியையும் வாங்கிக் கொண்டு காலையில் இயல்பாக 'குட்மார்னிங் டாடி' என்று மகேஷால் எப்படிச் சொல்ல முடிந்தது?

"சுமதி, நீ வேலைக்குப் போக வேண்டாம்".

"வேலைக்கிப் போக வேண்டாம்னா காலம் எப்பிடித் தள்றது? வீட்டுல வாங்கி வச்சிருக்கற வாஷிங்மிஷின் லேருந்து, பிரிஜ் இதுக்கெல்லாம் எப்படிக் கடன் கட்டறது? என்ன விளையாட்றேளா? காலங்கார்த்தால என்ன வந்தது உங்களுக்கு?"

"சுமதி! விளையாடல்லே! இயல்பாத்தான் சொல்றேன். நீ வேலை செஞ்சு சம்பாதிச்சது போதும். வீட்டுல எனக்கு மனைவியா, குழந்தைக்கு அம்மாவா இருந்தாப் போதும்.

"குழந்தையைச் சரியாகக் கவனிக்க முடியல்லே! அது பெத்தவங்க இருந்தும் அனாதையா இருக்கு. காலம்பற நீயும் ஆபீஸ் போயிடறே! நானும் ஆபீஸ் போயிடறேன். குழந்தையும் ஸ்கூலுக்குப் போயிடறான். சாயங்காலம் ஸ்கூல்லேயிருந்து வந்ததும் வேலைக்காரிதான் அவனுக்கு அம்மா. சாப்பாடு

டிபன் எல்லாம் அவ குடுக்கறதுதான். அவ சாப்பிட்டு மிஞ்சினது போக மிச்சந்தான் குழந்தைக்கு. அவன் எப்பிடிச் சாப்பிடறான் பாத்தியா! குருவி மாதிரி கொறிக்கறான். ஒரு காய்கறி தொடறது இல்லே. இருக்கற ஒரு புள்ளையையும் சரியாகக் கவனிக்க முடியாம அப்படி என்ன வேலை வேண்டியிருக்கு?

நாம வளந்தவிதம் எப்பிடின்னு நெனச்சுப் பாத்தியா. அன்பான அப்பா, அன்பான அம்மா. ஸ்கூல்லேயிருந்து வந்த உடனே நம்பளைக் கவனிச்சு சாப்பாடு போட்ட அம்மா, என்ன படிக்கறேன் எப்படிப் படிக்கறேன்னு கவனிக்க அப்பா. தினமும் படுக்கைக்குப் போறதுக்கு முன்னால் அம்மா கிட்டக் கதை கேக்கல்லேன்னா தூக்கம் வராது. அன்னிக்கி அம்மா சொன்ன கதைகள் அவங்களோட புத்திசாலித்தனம் இதெல்லாம்தான் என்னை ஒரு எழுத்தாளன் ஆக்கியிருக்கு.

அந்த அன்பு, பாசம், அரவணைப்பு இதெல்லாம் இன்னிக்கி நம்பு குழந்தைக்கு பத்துல ஒரு சதவிகிதமாவது குடுக்க முடியுதா?

நானும் தினமும் ஆபீஸ் விட்டதும் நேர வீட்டுக்கு வந்துடறேன். நாளை முதல் வேலைக்காரியை நிறுத்திடு. வர சம்பளத்துல சந்தோஷமாகக் காலந்தள்ளலாம். இன்னிக்கு உலகம் போற போக்கோட போட்டிபோட முடியாதுதான். அமெரிக்கா போன்ற நாடுங்கள்ள புருஷன் மனைவி ரெண்டு பேருமே வேலைக்கிப் போறாங்க. ஆனா அவங்க குழந்தைகள்? பெற்றோர் இருந்தும் அனாதை தான்.

பெற்றோர்களோட அன்புக்கு ஏங்கற குழந்தைங்க அது கெடைக்காம கால வெள்ளத்துல தறுதலைகளா, போதைப் பொருள், மது இதுக்கெல்லாம் அடிமையாகி பொறுப்பில்லாத குடிமகனா ஆகறதுல யாருக்கு லாபம்?'

சுமதி எதுவுமே பேச வில்லை. இப்போதுதான் கொஞ்சமாக யோசிக்க ஆரம்பித்திருக்கிறாள்.

"எனக்காவது ஒருநாள் 'ரிடயர்மெண்ட்' ஓய்வு என்று கிடைக்கும். ஆனால் உனக்கு? முழுக்க முழுக்க உழைத்து விட்டு ரியடர் ஆன பிறகும் குழந்தைகள், பேரன், பேத்தி என்று எப்போது உனக்கு ஓய்வு கிடைக்கும்? எனவே இனிமே நீ ஆபீஸ் போக வேண்டாம்!"

வாசலில் கார் நிற்கும் சப்தம் கேட்டது. லுங்கியைச் சரி செய்து கொண்டு ஹாலுக்கு

வந்தேன். யாரோ கணவன், மனைவி ஒரு பெண் குழந்தை யோடு இறங்கினார்கள்.

"எழுத்தாளர் 'இளஞ்செழி யன்' என்று அந்தப் பெண் ஆரம்பித்தாள்.

"ஆமாம், வாங்க நான்தான்" என்று அவர்களை வரவேற் றேன்.

"என்னடா! பெர்சா மீசை யும், நீயும்! குரல் மட்டும் மாறவேயில்லை பேரு என்னடா 'இளஞ்செழியன்' அம்பின் னாலே எவ்வளவு நன்னா யிருக்கு" என்றாள் அந்தப் பெண்.

"என்னடா முழிக்கறே யாருன்னு தெரியல்லே!" என்று வார்த்தைக்குப் பத்து 'டாப்' போடுகிறாளே என்று என் மனைவி தர்மசங்கடமாக நெளிய, எனக்குப் பொட்டில் அடித்ததுபோல நினைவு வந்தது.

"நீங்க சரஸ்வதியில்லே!"

"நீங்க என்னடா நீங்க! நீன்னு சொன்னாப் போதாதா! அதே சச்சிதான். சென்னை வந்ததுமே முதல்ல நீ எங்க இருக்கேன்னு கண்டு பிடிக் கறதுதான் என்னோட முதல் வேலையா இருந்தது. இது என்னோட ஹஸ்பெண்ட். சீனு மாமா. ஞாபகம் இருக்கா?" நெகடிவ் போல என் நினை வில் ஓடியது. "இது என் பொண்ணு திவ்யா!... திவ்யா! மாமாவுக்கு ஹலோ சொல்லு".

"ஹலோ".

"இங்கே வந்ததுக்கப்புறம் உன்னோட கதையைப் படிச் சதும் அது நீயாத்தான் இருக் கணும்னு தோணித்து. பத்தி ரிகை ஆபீஸ்ல கேட்டவுடனே உன்னோட முழு சரித்திரமும் கெடச்சது. உன்னைப் பத்தி வீடு, பூர்வீகம் எல்லாம் தெரிஞ்சதும் காலம்பற நீங்க ரெண்டு பேரும் ஆபீசுக்குக் கௌம்பறதுக்கு முன்னால உன்னைப் பிடிக்கணும்னு வந் தேன்" ஒரே மூச்சாகப் பேச வேண்டியது அத்தனையும் பேசி முடித்தாள்.

நாங்கள் இருவருமே என் மனைவி, அவள் கணவன் இரு வரையும் மறந்தே போனோம். திடீரென்று நினைவு வந்தவ ளாக,

"என்னடா! உன் மனை வியை அறிமுகம் செய்து வைக்கவேயில்லையே. நான் தான் சச்சி என்ற சரஸ்வதி. இந்த கடங்காரன் என்னைப் பத்திச் சொல்லியிருப்பானே!"

"என்னை எங்கே பேச விட் டீங்க. வந்தது முதல் நீங்களே தான் பேசிண்டிருக்கீங்க".

"என்னடா புதுசா வாங்க போங்கன்னு? எப்பவும்போல சச்சி, வாடி போடின்னு கூப் பிட்டாப் போதும். என் ஹஸ் பெண்ட், அதாவது என்னோட மாமா எதுவும் சொல்ல மாட்டார். நம்பளப் பத்தி அவ ருக்கு எல்லாரையும்விட நன் னாவே தெரியும்".

"இருந்தாலும் அன்னிக்கு நாம குழந்தைகள். இன்னிக்கி அப்படி இல்லியே! நாம வளரல்லியா?"

"நன்னா வளர்ந்தோம் போ! இதுக்குப் பேரா வளர்ச்சி? நிக்க நேரம் இல்லாத, ஒய்ச்சல் ஒழிவு இல்லாத இயந்திர வாழ்க்கை வாழ்ந்துண்டு காசு ஒண்ணேதான் குறின்னு வாழ்ந் துண்டு இருக்கோமே இதுவா வளர்ச்சி! இதுவா வாழ்க்கை!"

எப்படி எனது மன ஓட்டங் களை இவ்வளவு துல்லியமாகப் படம் பிடிக்கிறாள்!

"அம்பி, நாங்க ரெண்டு பேரும் பத்து வருஷம் அமெரிக் காவுல இருந்துட்டு இப்பத் தான் இந்தியா திரும்பினோம். திவ்யா பொறந்ததுக்கப்பறம் இந்திய மண்ணோட அருமை புரிந்தது. நம்முடைய தலை முறை, இந்திய மண்ணுலதான் வளரணும் என்கிற முடிவோட இங்கு வந்தோம். இவர் சென்னையிலேயே ஒரு கம் பெனி ஆரம்பிக்கப் போகிறார். நானும் என்னோட வேலைக் கெல்லாம் குட்பை சொல்லி விட்டுத் திவ்யாக் கண்ணுக்கு நல்ல அம்மாவா இருக்கப் போறேன். வாட் டு யூ ஸே!"

நல்ல ஆரம்பம்தான். சுமதி யைத் திரும்பிப் பார்த்தேன். அவளும் எனது எண்ணத்தை ஆமோதிப்பது போல இருந்தது.


"கைகால்களை அலம்பிக் கொண்டு டிபன் சாப்பிட வாங்கோ" என்றாள் சுமதி.

"ஆமா, அம்பி, உன் மனைவி எங்கேயோ வேலை பாக்கறான்னாளே. ஆபீசுக்குப் போகல்லே! சரி நாங்க வந்து உங்களுக்கு இடைஞ்சலாயிட் டோம்!"

"அதெல்லாம் ஒண்ணும் இல்லே. அவகூட வேலையை ரிசைன் பண்ணப் போறா. அதைப் பத்தித்தான் பேசிண்டு இருந்தோம். அப்போ நீங்க வந்தேள்".

"நல்ல காரியம். நல்ல முடிவு எடுத்தே! காலம்பர விடிஞ்சா என்ன டிபன் பண்றது! மத்யானம் என்ன சமைக்கறது? ஆபீஸ்ல எந்த வேலைக்கி முக்கியத்துவம் குடுக்கறதுன்னு ஒய்ச்சல் ஒழிவேயில்லாம எப்பவும் டென்ஷனோடயே இருக்கறதுல யாருக்கு லாபம்?"

மூச்சு விடாமல் பேசிக் கொண்டே போனாள். இவள் எப்படி இந்த மாதிரி மாறிப் போனாள்? சீனு மட்டும் அவள் பேசுவதையெல்லாம் கேட்டு ரசித்துக் கொண்டேயிருந்தான். நாங்கள் சொல்வதற்கு முன்பே இன்று முழுதும் எங்களோ டேயே தங்கும் எண்ணத்தோடு வந்திருப்பதாகச் சொன்னாள். நாங்கள் இருவரும் லீவு போடப் போவதாகச் சொன்னதும் அவளுக்கு இன்னும் மகிழ்ச்சி.



மாலையில் மகேஷ் பள்ளிக் கூடத்திலிருந்து வந்ததும் அவனுக்கு ஒரே சந்தோஷம். எதிர் பாராத விதமாக அவன் பள்ளிக் கூடத்திலிருந்து வரும் போது அம்மா அப்பா இரண்டு பேரும் வீட்டிலேயே இருக்கிறார்களே! போதாதற்கு விருந்தாளி வேறு!

மெதுவாகச் சுமதியிடம் வந்து, "ஏம்மா! நீ இன்னிக்கு ஆபீஸ் போகல்லே!"

என்னதான் அடிவாங்கினாலும், கண்டிக்கப்பட்டாலும் பிள்ளைகளுக்கு எப்போதுமே பாசம் அம்மாமேல்தான். நான் வீட்டில் இருந்தாலும் அவனுக்கு அது ஒரு பொருட்டாகவே படவில்லை.

"இவாள்ளாம் வந்திருக்காளோன்னோ அதான் ஆபீஸ் போகல்லே! இது யார் தெரியுமா? இது திவ்யா" என்று சுமதி அறிமுகம் செய்து வைத்தாள்.



கொஞ்ச நேரம் வெட்கப் பட்டான். பின்னர் இரண்டு பேரும் விளையாடப் போய் விட்டனர்.

திடீரென்று கரண்ட் போய் விட்டது. கையில் டார்ச் லைட்டுடன் மகேஷ் திவ்யாவைத் துரத்திக் கொண்டு வந்தான்.

"அம்மா! இந்த மகேஷைப் பாரும்மா! பூதமெல்லாம் காமிக்கிறான்" என்று 'ஓ'வென்று அலறினாள்.

"அய்யே! ஷேம், ஷேம். பூதம் அது இதுன்னெல்லாம் கெடையாது. இது நம்மளோட ஷாடோ" என்று விளக்கினான் மகேஷ்.

இதுதான் ஜெனரேஷன் கேப்...! நானும் சச்சியும் அர்த்தத்தோடு பார்த்துக் கொண்டோம். ஃ

ஒரு தாயின் இதயம்...

கருமலைப் பழம்நீ

கச்சியைத் தளர்த்த - விம்மும்
கலசபூங் காம்பைப் பிள்ளை
இச்சையால் கடித்து முட்ட
இட்டதோர் தீயாய்... அன்னை
பிச்சுப்பூ கன்னம் கிள்ள
பிள்ளையோ அலறிக் கத்த
அச்சிறு துன்பம் மாய
அழுகையே பெரிதாய் தோன்றும்!

அழுதவாய் சிரிக்க அன்னை
அமுதமா முத்தம் இட்டுத்
தழுவியே உச்சி மோந்து
தளிர்முகம் தொட்டுப் பூப்பாள்!
பழச்சுளை இதழ்பொ ருத்தி
பாலமு துண்டு தூங்கும்
எழுதாத ஓவி யத்தை
இதயத்தில் மலரக் காண்பாள்!

சென்னை - 2இல் உள்ள ஆர்.ஜே. ப்ராசஸ் ஆப்செட் அச்சகத்தில் அச்சிட்டவர் : ஆர். ஜனார்த்தனன், ஸ்ரீராம் டிரஸ்ட், சென்னை - 600 001 சார்பில் வெளியிட்டவர் : ஏ.வி.எஸ். ராஜா, ஆசிரியர் - விக்கிரமன், நிர்வாக அலுவலகம், த.பெ.எண் : 5043, 145, லிங்கிச் செட்டி தெரு, சென்னை - 600 001.